தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:274 | 19-04-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி

# எதிர்க்கட்சிகளை பெண்கள் மன்னிக்க மாட்டார்கள்

## பிரதமர் மோடி

**புது டெல்லி, ஏப்.19:**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி குறித்து நேற்று நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி ஆற்றிய உரையில் கூறியது: "மகளிர் மசோதா நிறைவேற்றப்படாததற்கு நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளாக முயற்சி செய்தும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ், திமுக, திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளால் இம்மசோதா தடுத்து நிறுத்தப்பட்டது.

மகளிர் மசோதா தோற்கடிக்கப்பட்டதை திமுக, காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற வாரிசு கட்சிகள் கொண்டாடினர். 21-ஆம் நூற்றாண்டில் நடக்கும் அனைத்தையும் நாட்டுப் பெண்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

மகளிர் மசோதா தோற்கடிக்கப்பட்டதன் விளைவுகளை காங்கிரஸ், திமுக எதிர்காலத்தில் அனுபவிக்கும். மகளிருக்கு இழைக்கப்பட்ட அநீதியை அவர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள், எதிர்க்கட்சிகளை பெண்கள் மன்னிக்கமாட்டார்கள். மகளிரின் கவுரவத்தை எதிர்க்கட்சிகள் காயப்படுத்தியுள்ளது; இந்த அவமானத்தை பெண்கள் மறக்க மாட்டார்கள்.

ஒவ்வொரு பெண்மணியின் மனதிலும் இந்த அவமானம் நிரந்தரமாக குடியிருக்கும். காங்கிரஸ் கட்சி இந்த மசோதாவை ஆதரிக்கும் என எதிர்பார்த்தேன். மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் குறைகளை மட்டுமே கூறிவந்தன.

நாங்கள் வடக்கு, தெற்கு என பிரித்து பார்த்தது இல்லை. மகளிர் சக்தியை உதாசீனம் செய்து எதிர்க்கட்சியினர் பாவம் செய்துவிட்டனர். எதிர்க்கட்சியினர் செய்த பாவத்துக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும்" என்றார் மோடி.



**நாங்கள் வடக்கு, தெற்கு என பிரித்து பார்த்தது இல்லை. மகளிர் சக்தியை உதாசீனம் செய்து எதிர்க்கட்சியினர் பாவம் செய்துவிட்டனர். எதிர்க்கட்சியினர் செய்த பாவத்துக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும்" என்றார் மோடி.**

முன்னதாக, கடந்த 2023-ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மக்களவையில் தற்போதுள்ள 543 இடங்களை 850 ஆக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டது.

இதற்காக, நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளில் மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்துவதற்காக அரசியல் சாசன திருத்தம் (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகியவை மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த 3 மசோதாக்களுக்கும் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் தொடக்கத்தில் இருந்தே கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மசோதா மீதான விவாதம் நள்ளிரவு 1 மணி வரை நீடித்தது. இந்நிலையில், மக்களவையில் நேற்று காலை விவாதம் தொடர்ந்தது. அதன்பின் மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மொத்தம் 528 எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

மசோதாவுக்கு ஆதரவாக 298 பேரும், எதிராக 230 பேரும் வாக்களித்தனர். மசோதா நிறைவேற மூன்றில் 2 பங்கு ஆதரவு தேவை. அதாவது, மக்களவையில் 352 எம்.பி.க்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே மசோதாவை நிறைவேற்ற முடியும்.

ஆனால் 298 பேர் மட்டுமே ஆதரவாக வாக்களித்ததால் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்தது.

நேற்றைய வாக்கெடுப்பின்போது மகளிர் இடஒதுக்கீடு மசோதா மட்டுமே வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அது தோல்வி அடைந்ததால், மற்ற 2 மசோதாக்கள் மீதும் வாக்கெடுப்பு நடத்தப்படாமல் திரும்பப் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.


## இரண்டு நாள் பயணமாக இலங்கை செல்கிறார் சி.பி.ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி, ஏப்.19:**

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று (ஏப்.19) இலங்கை செல்கிறார்.

இது தொடர்பாக குடியரசுத் துணைத் தலைவர் செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக நாளை (ஏப். 19) இலங்கை செல்கிறார். குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் இருதரப்பு அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைச் சந்திக்க இருக்கிறார். அவர் இந்திய வம்சாவளி தமிழ் சமூகத் தலைவர்களுடனும், இலங்கையின் வடக்கு மற்றும்



கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த தமிழ் தலைவர்களுடனும் கலந்துரையாட இருக்கிறார்.

ஏப்.19 அன்று பிற்பகலில், கொழும்பில் நடைபெறும் ஒரு சமூக நிகழ்வில், இந்திய வீட்டு வசதித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசின் உதவியுடன் கட்டப்பட்ட வீடுகளை, தமிழ் சமூகங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு குடியரசுத் துணைத் தலைவர் காணொலி வாயிலாக வழங்குகிறார்.

இதன் மூலம், தமிழ் சமூகங்களுக்கான மொத்த வீடுகளின் எண்ணிக்கை 50,000-ஐ எட்டும். மேலும் இத்திட்டத்தின் நான்காம் கட்டத்தில் கூடுதலாக 10,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஏப். 20 அன்று, குடியரசுத் துணைத் தலைவர் நுவரெலியாவிற்குப் பயணம் மேற்கொண்டு, இந்திய வீட்டுவசதித் திட்டங்களைப் பார்வையிட்டு, உள்ளூர் தமிழ் சமூகத்தினருடன் கலந்துரையாடுகிறார்.

இரு நாடுகளுக்கும் இடையே சமீபத்தில் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்புகளைத் தொடர்ந்து நடைபெறும் இந்தப் பயணம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான நாகரிக மற்றும் மக்கள் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குடியரசுத் துணைத் தலைவரின் வருகையை முன்னிட்டு இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 19 பேரை விடுதலை செய்ய அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.


## மத்திய அரசு ஊழியர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு

**புதுடெல்லி, ஏப்.19:**

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படியை 2 சதவீதம் உயர்த்தி மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருக்கிறது. பிரதமர் மோடி தலைமையில் இன்று காலை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 6,791 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவின் மூலம் சுமார் 50 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும் 68 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 55 சர்வேத்திலிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது



மேலும் 2 சதவீதம் உயர்த்தப்பட்டு அது 60 ஆக உயர்ந்திருக்கிறது. உலகலாவிய சூழல் அதிகரித்து வரக்கூடிய லைவாசி ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவற்றை ஈடுகட்டுவதற்காக இந்த அகவலைப்படி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் இதுவரை ரூ.438 கோடி பறிமுதல் - தேர்தல் ஆணையம்


**சென்னை, ஏப்.19:**

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் 2026: தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 865 கோடியைத் தாண்டியது

1. அஸ்சாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவைகளுக்கான பொதுத் தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்களுக்கான அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மார்ச் 15, 2026 அன்று அறிவித்தது. தேர்தல் நடத்தை விதிகளை (MCC) கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய மாநில/யூனியன் பிரதேச அரசாங்கங்களுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் அவற்றின்




எல்லை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள் (CEOs), டிஜிபிக்கள் (DGPs) மற்றும் அமலாக்க முகமைகளின் தலைவர்களுடன் ஆணையம் பலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது. வன்முறையற்ற, மிரட்டல்களற்ற மற்றும் தூண்டுதல்களற்ற தேர்தல்களை உறுதி செய்ய அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

3. இதனை உறுதி செய்வதற்காக, புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய இரு மாநிலங்களிலும் 5,011-க்கும் மேற்பட்ட (மேற்கு வங்கத்தில் 2,728 மற்றும் தமிழ்நாட்டில் 2,283) பறக்கும் படைகள் (FSTs) பணியமர்த்தப்பட்டுள்ளன. இது தவிர, வெவ்வேறு இடங்களில் திடீர் சோதனைகளை (Nakas) மேற்கொள்ள 5,363-க்கும் மேற்பட்ட (மேற்கு வங்கத்தில் 3,142 மற்றும் தமிழ்நாட்டில் 2,221) நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SSTs) பணியமர்த்தப்பட்டுள்ளன.

4. 2026 பிப்ரவரி 26 அன்று தேர்தல் பறிமுதல் மேலாண்மை அமைப்பு (ESMS) செயல்பாட்டிற்கு வந்ததிலிருந்து, 2026 ஏப்ரல் 17 வரையிலான தரவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

5. இந்த வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சோதனைகள் மற்றும் ஆய்வுகளின் போது சாதாரண குடிமக்கள் எவ்வித சிரமத்திற்கும் அல்லது துன்புறுத்தலுக்கும் உள்ளாகக் கூடாது என்பதை அமலாக்கத் துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்று ஆணையம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பான புகார்களைத் தீர்க்க மாவட்ட குறைதீர்க்கும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

6. குடிமக்கள்/அரசியல் கட்சிகள் மாதிரி நடத்தை விதி மீறல்கள் குறித்து ECINET-ல் உள்ள C-Vigil Module மூலம் புகார் செய்யலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

19.04.2026 சித்திரை 6
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
திதித்துவயம்

நட்சத்திரம்:
பரணி

யோகம் :
சித்த யோகம்.

கரணம்
இன்று காலை 9.28 வரை தைதுலம் பின்பு இரவு 9.58 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
சித்திரை.

நல்ல நேரம்
7:30 – 8:30 am /
3:30 – 4:30 pm


இராகு காலம்
மா 4.30 – 6.00

எமகண்டம்
ம 12.00 – 1.30

குளிகை
ம 3.00 – 4.30

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## நாடாளுமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு



**புதுடெல்லி, ஏப்.19:**

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் முடிந்த நிலையில் இரு அவைகளும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

தொகுதி மறுவரையறை மசோதா, மகளிர் மசோதா தாக்கலுக்காக 3 நாள் சிறப்பு அமர்வு ஏப்ரல் 16ஆம் தேதி தொடங்கியது. இரண்டு நாள்கள் விவாதத்துக்குப் பின் மகளிர் இடஒதுக்கீடு உள்ளிட்ட மசோதாக்கள் மீது வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. மசோதாவுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு 352 வாக்குகள் தேவைப்பட்ட நிலையில், 298 வாக்குகள் மட்டுமே ஆதரவாகப் பெறப்பட்டன. இதனையடுத்து, எதிர்க்கட்சிகளால் மசோதா தோற்கடிக்கப்பட்டது.

மகளிர் மசோதா உள்ளிட்ட 3 மசோதாக்களும் மக்களவையில் நிறைவேறாமல் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. இதைத்தொடர்ந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று வந்தே மாதரம் முழு வடிவத்தில் இசைக்கப்பட்டு கூட்டத்தொடர் நிறைவடைந்தது.

இதன்மூலம், ஜனவரி 28ஆம் தேதி தொடங்கிய பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-594

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை



சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

## சிந்திக்க ஒரு நொடி



நாம் சந்திக்கும்
நண்பர்களும்
உறவுகளும் ஏதா
ஒன்றை பரிசளித்து
விட்டுதான்
செல்கிறார்கள்
சிலர் தடங்களாய்
சிலர் தழும்புகளால்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## பெருகுளம் பிரம்மோற்சவம்



பெருகுளம் பிரம்மோற்சவம் 7ஆம் நாள் காலை - சுவாமி மாயகூதர் குலந்தைவள்ளி, அலர்மேல்மங்கை தாயார்களுடன் வீதி புரப்பாடு.

## பெண்ணியக் கர்ஜனை நூல் வெளியீடு



கோவில்பட்டி முத்தமிழ் மன்றம் அறக்கட்டளை புதுமையாக புரட்சிகரமாக 77 கல்லூரி மாணவ மாணவியர்களின் கவிதைத்தொகுப்பான பெண்ணியக் கர்ஜனை என்ற நூலை ஆசியாஃபார்ம்ஸ், கணேஷ் பேக்கரி மற்றும் எம். எஸ். எஸ் வீ.ஆபரண மாளிகை நிறுவனர்களின் உதவியுடன் வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக கோ.வே.நா. கல்லூரியைச் சேர்ந்த இளம் கவிச் செம்மல்கள் அனைவருக்கும் மூன்று புத்தகங்கள் வழங்கும் விழா நடந்தது.

**செய்தியாளர் கோவில்பட்டி கோ. சுரேஷ்குமார்.**

## வல்லம் ஒன்றியம் த வெ க விசில் சின்னத்தில் வாக்கு கேட்பு





விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் விஜய் நிரஞ்சன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சின்னகரம், தாமனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விசில் சின்னத்திற்கு வாக்குகளை சேகரிக்க உள்ளார்.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# மேலப்பாளையத்தில் வீ ரீச் வெல்னஸ் நியூட்ரிசன் கிளப் திறப்பு விழா



**திருநெல்வேலி, ஏப்.19:** திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் ரெட்டியார்பட்டி சாலையில் வீ ரீச் வெல்னஸ் நியூட்ரிசன் கிளப் அலுவலக திறப்பு விழா (17.04.2025) அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நியூட்ரிசன் கிளப் உரிமையாளர் முகமது ஜக்கரியா தலைமை தாங்கினார். தாய் நகர் மஸ்ஜிதுர் ரஹீம் பள்ளிவாசல் தலைவர் *Penman P.S.*முஹம்மது இப்ராஹிம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

சனா அன் கோ உரிமையாளர் செய்யது முஹம்மது வந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

ஏர்வாடி ஹிஸ்னுல் உலூம் அரபிக் கல்லூரியின் துணைச் செயலாளரும், திமுக தலைமை செயற்குழு உறுப்பினருமான எஸ்.ஏ.கே.சித்திக், மற்றும் தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக செய்தி மக்கள் தொடர்பு துறையின் உதவி இயக்குநர் நவாஸ்கான் ஆகியோர்கள் இணைந்து அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.

தாய் நகர் பள்ளிவாசல் இமாம் காஜா ஹஸனி, துணை இமாம் திவான் பைஜி, ஆகியோர்கள் துஆ ஓதினார்கள்.

சுகாதாரத்துறையைச் சார்ந்த டாக்டர்.செல்வகுமார், டாக்டர். பாயாஸ் அஹமது, அப்துல் ரஹீம் ஹீரா, ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியாக ஜஸ்ட் டயல் நசீர் நன்றி கூறினார்.

இந்த திறப்பு விழாவில் சுகாதாரத் துறையில் ஓய்வு பெற்ற வட்டார சுகாதார மேற்பார்வையாளர் அப்துல் ரகுமான் பாட்ஷா, அரசு ஒப்பந்ததாரர் ஜமால், அன்வர் பாஷா, முஹம்மது ரபீக், சாதிக் அலி மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கடலோரப் பள்ளி சின்னப்பாலத்தில் பிரிவு உபச்சார விழா



**பாம்பன், ஏப்.19:** பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

பள்ளி தலைமையாசிரியை செல்லம்மாள் தலைமை வகித்தார்.

எட்டாம் வகுப்பு மாணவி பிரித்திஷ்கா வரவேற்றுப் பேசினார். ஆசிரியர்கள் ஜெ.ஜே. லியோன், ஞானசௌந்தரி வாழ்த்துரை வழங்கினார். எட்டாம்வகுப்பு மாணவர்களுக்கு ஏழாம் வகுப்பு மாணவர்கள் நினைவு பரிசு வழங்கினர்.


பள்ளிச் செயல்பாடுகளில் ஒத்துழைப்பு நல்கிய மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து, கேக் வெட்டி, மாணவர்களுக்கு பகிரப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களின் எட்டு ஆண்டுகளின் அனுபவ பகிர்வு, கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிறைவாக, எட்டாம் வகுப்பு மாணவி முத்து ரோகினி நன்றி கூறினார்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை வகுப்பு ஆசிரியர் நிஷா செய்து இருந்தார்.

நிகழ்வில் ஆசிரியர்கள் மிக்கேல் ராணி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, அமுதவள்ளி, பிரிஸ்கிலா, நான்சி, சிலோக்சனா, நாகேஸ்வரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# நம் வாசவி சுக்கர வாரம் சிறப்பு பூஜை





திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் சுக்கர வாரம் முன்னிட்டு மூலவர்க்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் நம் வாசவி அம்மனை வேண்டி பெற்றனர். பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் ஆய்வு





**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# நம் வாசவி அம்மனுக்கு வெள்ளிக்கிழமை ஊஞ்சல் உற்சவம் பூஜை, லலிதாம்பிகை பூஜை, மருத்துவ முகாம், அமாவாசை பூஜை சிறப்பு வழிபாடு









**பொள்ளாச்சி, ஏப்.19:** பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை, அமாவாசையை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மற்றும் மருத்துவ முகாம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நம் வாசவி அம்மன் ஆலயத்திற்கு வருகை புரிந்து நம் வாசவி அம்மனிடம் ஆசி பெற்றார்.

அமாவாசை பூஜை மற்றும் அன்னதானம், லலிதாம்பிகை பூஜை, ஊஞ்சல் உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றது .

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை.

# மாவட்ட ஆயுதப்படை காவல்துறையினரும் மற்றும் ஊர்க்காவல் படையினருக்கும் ஆலோசனை கூட்டம்



**திருப்பத்தூர், ஏப்.19:** திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ள மாவட்ட ஆயுதப்படை காவல்துறையினரும் மற்றும் ஊர்க்காவல் படையினருக்கும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் *V.* சியாமளா தேவி, இ.கா.ப., தலைமையில் தேர்தல் பணியின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பது, பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் சூழலை உருவாக்குவது, பாதுகாப்பு பணிகளை திறம்பட மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், அனைத்து காவல்துறையினரும் தங்களது கடமைகளை முழு பொறுப்புடன் மற்றும் ஒழுக்கத்துடன் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வலியுறுத்தினார்.




## தேர்தல் களப்பணியில்...

### ‘திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றப்படும்’ - பிரேமலதா விஜயகாந்த்



திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது;-

“திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதை பற்றி மட்டுமே பேசுகிறார்களே தவிர, தொகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யாரும் பேசுவதில்லை. மக்கள் நன்றாக இருந்தால்தான் தொகுதி நன்றாக இருக்கும். எனவே நிச்சயமாக முருகன் அருளால் தீபமும் ஏற்றப்படும், இங்கே இருக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். அதுமட்டுமல்ல கிருத்திகா தங்கபாண்டி திருப்பரங்குன்றம் மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவார்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சீமான் மீது தஞ்சை போலீசார் வழக்குப்பதிவு!



தஞ்சை பனகல் கட்டிடம் எதிரே நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டம் நேற்று இரவு நடந்தது. கூட்டத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசினார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, இரவு 10 மணி வரை தான் ஒலிபெருக்கியில் பிரசாரம் செய்ய வேண்டும். ஆனால், இந்த கூட்டத்தில் இரவு 9.30 மணியளவில் பேச தொடங்கிய சீமான் 10 மணியை கடந்து பேசினார். அதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே சீமானை நோக்கி துணை போலீஸ் சூப்பிரண்டு சோமசுந்தரம் கைக்கடிகாரத்தை காண்பித்து நேரமாகிவிட்டது என முன்னெச்சரிக்கை செய்தார். தொடர்ந்து 10 மணி கடந்த பின்னரும் பேசிய சீமானிடம் எச்சரித்தார்.

ஆனால், அவர் வழக்கு வேண்டுமானால் பதிவு செய்து கொள்ளுங்கள் எனக் கூறி, தொடர்ந்து 10.10 மணி வரை பேசினார். இந்த நிலையில் சீமான் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மீதும் தஞ்சை போலீசார் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக வழக்குப்பதிவு செய்தனர்.

### முதல்வர் ஸ்டாலின் பனியன் நிறுவனத்தில் தொழிலாளர்களுடன் கலந்துரையாடல்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் சனிக்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு தேர்தல் பிரசாரத்தை முடித்து விட்டு திருப்பூர் வந்தவர் உறவினர் வீட்டில் தங்கினார். அதைத்தொடர்ந்து சனிக்கிழமை காலை திருப்பூரில் நஞ்சப்பா மேனிலைப்பள்ளி மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து மாலையில் திருப்பூர் பாண்டியன் நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி ஆதரவு திரட்டுகிறார்.

இந்த நிலையில், திருப்பூர் பாண்டியன் நகர் பகுதியில் திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள அலமேலு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் உள்ள டோரம் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

அதைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினருடன் தொகுதி நிலவரம் குறித்த ஆலோசனையில் ஈடுபடுகிறார்.

## சூறாவளி பிரசாரம்: தமிழகத்தில் சூடுபிடித்துள்ள தேர்தல் களம்!



தமிழக பேரவைத் தேர்தலில் திமுக தலைமையில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிமுக தலைமையில் பாஜக, பாமக, அமமுக , தமாகா உள்ளிட்ட கட்சிகளின் தேசிய ஜனநாயகக் கூட்டணி, தவெக, நாதக என நான்கு முனைப் போட்டி உருவாகியுள்ளது.

வாக்குப்பதிவுக்கு இன்னும் சில நாள்களே இருக்கும் நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் மாநிலம் முழுவதும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுத தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின், 6-ஆவது கட்ட பிரசாரத்தை தேனி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கியுள்ளாா்.

திண்டுக்கல் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு தோ்தல் பிரசாரத்தை முடித்து விட்டு திருப்பூா் வந்தவர் உறவினா் வீட்டில் தங்கினார். அதைத்தொடா்ந்து சனிக்கிழமை காலை திருப்பூரில் நஞ்சப்பா மேனிலைப்பள்ளி மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

தொடா்ந்து மாலையில் திருப்பூா் பாண்டியன் நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளாகளை அறிமுகப்படுத்தி ஆதரவு திரட்டுகிறாா.

இந்த நிலையில், திருப்பூர் அவிநாசி சாலையில் உள்ள எஸ்.ஏ.பி தியேட்டர் அருகே கார் சென்றுகொண்டிருந்தபோது, அங்குள்ள ஒரு தனியார் பனியன் நிறுவனத்திற்குள் முதல்வர் திடீரென சென்றார். முதல்வரின் இந்த எதிர்பாராத வருகையால் தொழிலாளர்கள் நெகிழ்ச்சியடைந்தனர்.

அங்கு பனியன் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளர்களிடம் முதல்வர் கனிவுடன் கலந்துரையாடினார்.

பணியில் இருந்த பெண்களிடம், “மாதம் ரூ.1000 உரிமைத் தொகை சரியாக வருகிறதா?” என்றும், “விடியல் பயணம் திட்டம் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறதா?” என்றும் முதல்வர் கேட்டறிந்தார்.

தொடர்ந்து அங்கிருந்தவர்களிடையே அவர் பேசியதாவது:

மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும் போது, மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும். மேலும், ரூ.8000 மதிப்பிலான பரிசு டோக்கன்கள் வழங்கப்படும், அதன் மூலம் உங்களுக்குத் தேவையான பொருட்களை நீங்கள் வாங்கிக்கொள்ளலாம். உங்களின் அனைத்துக் கோரிக்கைகளும் அடுத்த ஆட்சியில் நிச்சயம் நிறைவேற்றப்படும்,” என தேர்தல் அறிக்கையில் உள்ள அம்சங்களை விளக்கிக் கூறினார்

அப்போது அங்கிருந்த தொழிலாளர்கள் தங்கள் பகுதி சார்ந்த மற்றும் வாழ்வாதார ரீதியான சில கோரிக்கைகளை முதல்வரிடம் முன்வைத்தனர். தொழிலாளர்களின் கோரிக்கைகளை கவனமாக கேட்டுக் கொண்ட முதல்வர், தேர்தல் முடிந்து மீண்டும் ஆட்சி அமைந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றித் தரப்படும் என உறுதி அளித்தார்.

அடுத்தடுத்து வரும் நாள்களில் காங்கிரஸ் கட்சி அகில இந்திய தலைவா் மல்லிகாா்ஜுன காா்கே, உள்துறை அமைச்சா் அமித் ஷா உள்ளிட்ட தோ்தல் பிரசாரத்துக்காக தமிழகம் வரவுள்ள நிலையில், தமிழக தோ்தல் களம் சூடுபிடித்துள்ளது.

## சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதிக்கு ஆதரவாக கமல்ஹாசன் பிரசாரம்



சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு ஆதரவாக மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் இன்று பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது;-

“தமிழகம் வெல்ல வேண்டும், தமிழ்நாடு வெல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். தி.மு.க. மீண்டும் வர வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பம், இதே ஆட்சி அமைய வேண்டும் என்பது நம் விருப்பம். என் ஒரு குரலுக்குக்காக, என்னுடன் சேர்ந்து தமிழ்நாட்டிற்காக வந்திருக்கும் மக்கள் நீதி மய்யத்தின் தொண்டர்களுக்கும் என் நன்றி உரித்தாகும். தமிழ்நாடே இப்பொழுது தனி கோட்டையாக நின்று இந்தியாவுக்காக சண்டை போட்டுக் கொண்டிருக்கிறது. அதில் முன்னணியில் நிற்கும் வீரர் உதயநதி ஸ்டாலின் என்றால் அது மிகையாகாது.

அவருடைய பெயரை சொல்லும் பொழுதே இங்கு குதூகலம் இருக்கிறது. நான் இதற்கு முன்னாள் இதே வீதிகளில் வந்திருக்கிறேன். அன்று பார்த்த வீதிகளை விட தற்போது சிறப்பாக இருக்கிறது. சாதனை என்பது சொல்வதல்ல, செய்துகாட்டுவதுதான்.

அதை செய்து காட்டிய இடத்திற்கு நான் வந்திருக்கிறேன். இனியும் இது சிறப்பாகும் என்ற நம்பிக்கையில் இங்கே வந்திருக்கிறேன். உலக அரங்கில் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள் சாதனை படைக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணமான உதயநிதி ஸ்டாலின் மீண்டும் இங்கே வர வேண்டும். சேப்பாக்கம் என்று சொன்னால் உடனே விளையாட்டுதான் ஞாபகம் வரும். இந்தியாவுக்கே அது ஞாபகம் வரும். அந்த இடத்தின் வேட்பாளரான உதயநிதி ஸ்டாலினை நீங்கள் வெல்ல வைக்க வேண்டும். அவரை வெல்ல வைப்பது என்னை வெல்ல வைத்தது போலாகும்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் தமிழகம் வந்தார் ராகுல் காந்தி!



சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தமிழகத்தில் பிரசாரம் செய்யும்பொருட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி (ஏப். 18) சென்னை வந்துள்ளார்.

தமிழ்நாட்டில்சட்டப்பேரவைத் தேர்லுக்கான தேதி நெருங்கி வரும் நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அரசியல் தலைவர்கள் தீவிரமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து இதுவரை தமிழ்நாடு வராத மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல் காந்தி மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்த நிலையில், (ஏப். 18) ராகுல் காந்தி தமிழகம் வந்துள்ளார்.

டில்லியில் இருந்து சென்னை வந்துள்ள அவர், இங்கிருந்து பொன்னேரி சென்று அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்கிறார்.

அதன்பின்னர் சோளிங்கர், துறையூரில் நடைபெறும் பொதுக் கூட்டங்களிலும் பங்கேற்று வாக்கு சேகரிக்கிறார்.

ராகுல் வருகைக்கு மத்தியில் பிரதமர் மோடியும் (ஏப்.18) கோவைக்கு வருகை தரவுள்ளார். கோவை கொடீசியா திடலில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை நடைபெறும் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் மோடி, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யவுள்ளார்.

## “ஸ்டாலின் எந்த ரூபத்தில் எந்த அவதாரம் எடுத்தாலும் அதிமுக முறியடிக்கும்” - பழனிசாமி




ஸ்டாலின் எந்த ரூபத்தில் எந்த அவதாரம் எடுத்தாலும் அதிமுக முறியடிக்கும் என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் அதிமுக வேட்பாளர் மணியை ஆதரித்து பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். இதில் அவர் பேசியது: “ஸ்டாலின் எந்த ரூபத்தில் எந்த அவதாரம் எடுத்தாலும் அதிமுக முறியடிக்கும். தமிழகத்தில் பிறந்த ஒருவரான மூப்பனாரை பிரதமர் ஆவதை தடுத்தவர் கருணாநிதி.

அதிமுக ஆதரித்து அப்துல் கலாம் ஜனாதிபதியானார். ஆனால், 2-வது முறையாக அப்துல் கலாமை ஆதரிக்க முடியாது என திமுக தெரிவித்தது. பின்னர், அவர் போட்டியில் இருந்து விலகி விட்டார்.

தமிழகத்தை சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன் துணை குடியரசுத் தலைவரானார். அதிமுக ஆதரித்தது. ஆனால், திமுக எதிர்த்து வாக்களித்தது. நீங்கள் உண்மையான தமிழரா? தமிழன் என்று சொல்லி தமிழனை கொச்சைப்படுத்தியுள்ளார்.

மத்திய அமைச்சரவையில் 15 ஆண்டு காலம் இடம் பெற்ற திமுக, எந்த நிதியும், திட்டத்தையும் பெற்று தரவில்லை. குடும்பத்தை சேர்ந்தவர்கள் தான் மத்தியில் ஆட்சி, அதிகாரத்தில் இருந்தனர். கண்ணுக்குத் தெரியாத காற்றில் கூட ஊழல் செய்த கட்சி திமுக. வேட்டி கட்டி டெல்லி சென்றால் நம்மளை ஒரு மாதிரியாக பார்க்கிறார்கள்.

பொய் பேசி ஆட்சிக்கு வர வேண்டும் என ஸ்டாலின் துடிக்கிறார். ஜெயலலிதா இறந்த பிறகு கட்சியை முடக்க ‘பி’ டீம் நபர்கள் முடக்க பார்த்தவர்கள், தற்போது எங்கே சேர்ந்துள்ளனர் என உங்களுக்கு தெரியும்.

திமுகவுக்கு இறந்தவர்கள்தான் வாக்களித்து வந்தனர். இதனை தடுத்து நிறுத்தியதால்தான் ஸ்டாலின் பயப்படுகிறார். திமுகவினர் இறந்தவர்கள், போலி வாக்காளர்கள் வாக்கை போட முடியாது. அரசு போடும் திட்டத்தை, அரசு ஊழியர்கள் கொண்டு தான் செயல்படுத்த முடியும்.

அரசு ஊழியர்களுக்கு பழைய ஊதியதிட்டத்தை செயல்படுத்தாமல், புதிய உறுதியளிப்பு ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வந்துள்ளனர். திமுக படித்தவர்களையும், படிக்காதவர்களையும் ஏமாற்றுகின்றனர். எந்த அரசாங்கம் பாதுகாப்பானது என அரசு ஊழியர்கள் முடிவு செய்யுங்கள்” என்றார்.

## வாசல் தோறும் ‘விசில்’ சின்னம்: ட்ரெண்டாகும் விஜய்யின் கோல வியூகம்




தவெக தலைவர் விஜய்யின் வேண்டுகோளை ஏற்று பெண்கள் வீட்டு வாசலில் ‘விசில்’ சின்னத்தை கோலமாக வரைந்து அதை வித்தியாசமான அரசியல் ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

தேர்தல் களத்தில் வேட்பாளர்களின் முகத்தை விட, அவர்கள் போட்டியிடும் கட்சிசார்ந்த சின்னமே வாக்காளர்களின் மனதில் ஆழமாகப் பதிய வேண்டும் என்பது அரசியல் கணக்கு. இதற்காகச் சுவர் விளம்பரங்கள், ஸ்டிக்கர்கள் எனப் பல உத்திகள் கையாளப்பட்டு வரும் நிலையில், விஜய் தனது கட்சியின் ‘விசில்’ சின்னத்தை மக்களிடம் பிரபல்யப்படுத்த நுணுக்கமான ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் சென்னையில் நடைபெற்ற தவெக தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழாவில் பேசிய விஜய், “தேர்தல் நெருங்கிவிட்டது. என் அன்புக்குரிய அம்மாக்கள், அக்காக்கள், தங்கைகள் அனைவரும் உங்கள் வீட்டு வாசலில் நமது ‘விசில்’ சின்னத்தை கோலமாக இடுங்கள். அது நீங்கள் எனக்குக் கொடுக்கும் மிகப்பெரிய ஆதரவாக இருக்கும்” என வேண்டுகோள் விடுத்தார்.

விஜய் இப்படி வேண்டுகோள் விடுத்த சில மணி நேரத்திலேயே, தமிழகம் முழுவதும் தவெக பெண் தொண்டர்கள் உற்சாகத்துடன் ‘விசில்’ சின்னத்தை வீட்டு வாசலில் கோலமாக வரைந்தனர். தமிழகம் முழுவதும் ஆயிரக் கணக்கான வீடுகளின் வாசலில் வண்ணமயமான ‘விசில்’ கோலங்கள் மின்னத் தொடங்கின. மேலும், கோலத்தின் கீழே ‘எங்கள் ஓட்டு விசில் சின்னத்துக்கே’ என வாசகங்களை கோல மாவில் எழுதியும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து, நேற்று காலை முதல் தமிழகத்தின் மூலை முடுக்கெங்கும் இடப்பட்ட இந்த ‘விசில்’ கோலங்கள், புகைப்படங்களாகவும் வீடியோக்களாகவும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. வீட்டு வாசலில் இடப்படும் கோலம் என்பது தமிழர்களின் கலாசாரத்துடன் ஒன்றிய ஒன்று. அதைத் தேர்தல் பிரச்சார உத்தியாக விஜய் மாற்றியிருப்பது அரசியல் களத்தில் இயங்கும் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்நிலையில், நேற்று மாலை பெரம்பூரில் உள்ள தவெக தேர்தல் பணிமனைக்கு விஜய் திடீரென வருகை தந்தார்.

அங்கிருந்த பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்த அவர், பின்னர் நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது, பெண் நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று, பணிமனை வாசலில் பெண்களுடன் சேர்ந்து ‘விசில்’ சின்னத்தை கோலமாக வரைந்து வாக்குச் சேகரித்தார்.

## தேர்தல் பிரசாரத்தில் அதிக ஆப்சென்ட் ஆன விஜய்!

**சென்னை, ஏப்.19:**

மார்ச் 15ஆம் தேதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல், கட்சித் தலைவர்கள் தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வரும் நிலையில், தேர்தல் ஆணையம் அனுமதி அளித்தும் அதிக பிரசாரங்களை ரத்து செய்து பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார் தவெக தலைவர் விஜய்.

கடலூர், கும்மிடிப்பூண்டி தொகுதிகளில் நடைபெறவிருந்த பிரசாரக் கூட்டங்கள் இதுவரை மூன்று முறை அனுமதி பெற்று ரத்து செய்யப்பட்டுள்ளது. இது தவிர பல பிரசாரக் கூட்டங்களுக்கு, தவெகவினர் பெரும் முயற்சி எடுத்து காவல்துறை மற்றும் தேர்தல் ஆணையத்தின் அனுமதியை பெற்ற நிலையில், திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக சனிக்கிழமை என்றாலே பிரசாரங்களுக்குச் செல்வதில் விஜய்க்கு ஏதோ ஒரு தயக்கம். தவெகவினர் இது பற்றி கூறுகையில், கரூர் நெரிசல் சம்பவத்துக்குப் பிறகு, விஜய் தான் பங்கேற்கும் பிரசாரங்கள் குறித்து அதிகக் கவனம் செலுத்துவதாகக் கூறுகிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு பிரசாரமும் ரத்தாகும்போது, ஊடகங்கள், தகவல்கள் வெளியிடுகின்றன. தவிர அது பற்றி அதிகாரப்பூர்வ செய்திகளோ, ரத்து செய்யப்படுவது ஏன் என்பது குறித்த காரணங்களோ வெளியிடப்படுவதில்லை. ஒருவேளை அதெல்லாம் அவர் தனிப்பட்ட தகவல் என்றும் பதிலளிக்கலாம்.

2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின் மையமே தவெக தலைவர் விஜய் என்ற அளவில் தேர்தல் களம் மாறியிருக்கிறது. எங்குச் சென்றாலும் தவெக வெற்றி பெறுமா? கட்சி, தலைவர் பற்றிய பேச்சாகவே உள்ளது.

பிரசாரத்துக்கு ஒரு சில நாள்களே இருக்கும் நிலையில், விஜய் பிரசாரம் தொடர்ந்து ரத்து செய்யப்படுவதும், அதற்குரிய காரணங்கள் அறிவிக்கப்படாமல் விடப்படுவதும், கட்சிக்கு நல்லதல்ல என்றே கூறப்படுகிறது.


தமிக சட்டப்பேரவைத் தேர்தலைப் பற்றியபேச்சின் முக்கிய கருப்பொருளாக இருக்கும் விஜய் இனியாவது விழிப்பாரா?

## ஆந்திராவில் லேசான நில நடுக்கம்

**அனகாபல்லி, ஏப்.19:**

ஆந்திர மாநிலம், அனகாபல்லி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.05 மணிக்கு திடீரென லேசான நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர். இந்த மாவட்டத்தில் ராம்பில்லி, எடமஞ்சிலி, கோட்ட ஊரட்லா ஆகிய பகுதிகளில் நில நடுக்கத்தை மக்கள் உணர்ந்தனர். ரிக்டர் அளவு 3.7 ஆக பதிவாகி உள்ளது. நில நடுக்கத்தை உணர்ந்ததும் பயந்து போய் மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். நிலநடுக்கம் மீண்டும் ஏற்படும் என்ற பயத்தில் இரவு முழுவதும் மக்கள் தூங்காமல் பயத்தில் சாலைகளிலேயே கழித்தனர். பின்னர் அதிகாலை வேளையில் பயம் தெளிந்து அவரவர் வீடுகளுக்கு சென்றனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்



**மதுரை, ஏப்.19:**

உலக புகழ்பெற்ற இந்து கோவில்களில் ஒன்றாக விளங்குவது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலாகும். மிகப் பெரிய சிவலாயங்களில் ஒன்றாகவும், 51 சக்தி பீடங்களில் ஒன்றாகவும், தேவார பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகவும் இக்கோவில் விளங்குகிறது. அம்மனை பிரதான தெய்வமாக வழிபடும் ஒரே சிவன் கோவில் இது தான். பூஜை, அபிஷேகம், வழிபாடு என அனைத்திலும் இங்கு அன்னை மீனாட்சிக்கே முதல் மரியாதை அளிக்கப்படுகிறது.

இப்படி ஏராளமான சிறப்புகள் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்கு தமிழ்நாடு மட்டுமின்றி வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். மீனாட்சி அம்மன் கோவிலில் வருடந்தோறும் சித்திரை மாதம் கோலாகலமாக திருவிழா நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்க இருக்கிறது. இதைத்தொடர்ந்து வரும் 27-ந் தேதி மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகமும், 28-ந் தேதி மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணமும், சிகர நிகழ்சியாக தேரோட்டம் வரும் 29-ந் தேதியும் நடைபெற இருக்கிறது.

இதையொட்டி மதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள நகரமே விழா கோலம் பூண்டுள்ளது.

# வள்ளியூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சித்திரை தேரோட்டத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



**நெல்லை, ஏப்.19:**

நெல்லை மாவட்டத்தில் உள்ள குகை கோவில்களில் மிகவும் பிரசித்தி பெற்றது வள்ளியூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலாகும். இக்கோவிலில் நடக்கும் முக்கிய திருவிழாக்களில் சித்திரை மாதம் நடக்கும் தேரோட்டத் திருவிழா சிறப்பு வாய்ந்ததாகும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான திருவிழா (18.4.2026) கொடியேற்றத்துடன் தொடங்கியது.


அப்போது 'முருகனுக்கு அரோகரா' என பக்தர்கள் முழக்கமிட்டு வழிபட்டனர். கொடியேற்றப்பட்ட பின்பு கொடிமரத்திற்கு பல்வேறு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை பூஜை நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தினமும் வாகன சேவை நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் சுவாமி எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். வருகிற 26-ந் தேதி ஒன்பதாம் திருவிழா அன்று தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற இருக்கிறது. விழா ஏற்பாடுகளை அறங்காவலர்கள் மற்றும் மண்டகப்படிதாரர்கள் செய்து வருகின்றனர்.

# சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு- திரளான பக்தர்கள் தரிசனம்

**நாகப்பட்டினம், ஏப்.19:**

பிரதோஷ தினமான இன்று சிவாலயங்களில் சிறப்பு பூஜைள் நடைபெற்றன. நாகை காயாரோகண சுவாமி கோவிலில் உள்ள நந்தியம்பெருமானுக்கு மஞ்சள் பொடி, திரவியப் பொடி, பச்சரிசி பொடி, தேன், பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர், விபூதி உள்ளிட்ட பொருள்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது.






அதேபோல் மலையீஸ்வரன் கோவில், அமரநந்தீஸ்வரர், மெய் கண்ட மூர்த்தி கோவில், அழகிய நாதர் கோவில், நடுவதீஸ்வரர் கோவில், வீரபத்திர சுவாமி கோவில், சொக்கநாதர் கோவில், வெளிப்பாளையம் அகஸ்தீஸ்வரர் கோவில், நாகூர் நாகநாதர் கோவில், வடக்கு பொய்கைநல்லூர் நந்தி நாதேஸ்வரர் கோயில், எட்டுக்குடி முருகன் கோவில் உள்ளிட்ட கோயில்களில் நந்தியம் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.






## நலம் தரும் மருத்துவம்

### ஆப்ரிகாட் பழத்தின் நன்மைகள்!



சூரியனின் தங்க முட்டை என்று கிரேக்க மொழியில் அழைக்கப்படும் ஊட்டச்சத்துக்கள், தாது உப்புக்கள் நிறைந்த பழம் ஆப்ரிகாட். பழத்துக்கு எந்த பாதிப்பும் இன்றி நீர்ச்சத்து மட்டும் வெளியேற்றப்படுகிறது.

இதில் கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், வைட்டமின் ஏ, சி உள்ளிட்ட சத்துக்கள் நிறைவாக உள்ளன. இதில் அதிக அளவில் இரும்புச்சத்து உள்ளதால், ரத்த அணுக்கள் உற்பத்திக்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இது ரத்த சோகையை வராமல் தடுக்கும். ரத்த சோகை வந்தவர்களுக்கு அருமருந்தாகவும் ஆப்ரிகாட் இருக்கிறது.

பெண்கள் மாதவிலக்கு நேரத்தில் இந்தப் பழத்தை எடுத்துக்கொள்வது பெரிதும் பயனளிக்கும். குடலில் தேவையற்ற பொருட்கள் தங்குவதை வெளியேற்றி செரிமான மண்டலத்தைத் தூய்மைப்படுத்துகிறது.

காய்ச்சல், தீராத தாகம் உள்ளவர்களுக்கு இந்தப் பழத்தை தண்ணீரில் கலந்து சிறிது தேன் கலந்து கொடுத்தல் நல்ல பலன் கிடைக்கும்.

ஆப்ரிகாட் பழத்தை சருமத்தில் வெளிப்பூச்சாகவும் பயன்படுத்தலாம். சூரிய கதிர்வீச்சல் சருமம் பாதிக்கப்படுவதில் இருந்து இது பாதுகாப்பு அளிக்கிறது. அரிப்பு உள்ளிட்ட பல்வேறு சருமப் பிரச்னைகளில் இருந்து தீர்வு அளிக்கிறது.

இதில் அதிக அளவில் வைட்டமின் ஏ உள்ளதால், நல்ல கூர்மையான பார்வைக்கு உதவியாக இருக்கிறது. மிகச்சிறந்த ஆன்டிஆக்சிடன்டாக செயல்பட்டு உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற உதவும்.

இந்தப் பழத்தைச் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் இதய நோய்களுக்கான வாய்ப்பு குறைகிறது. கெட்ட கொழுப்பு அளவு குறைகிறது. சில வகையான புற்றுநோய் செல்களுக்கு எதிராகவும் இந்த பழம் செயல்படுகிறது.

சாப்பிடுவதற்கு முன்பு 3 உலர் ஆப்ரிகாட் பழத்தைச் சாப்பிடுவது செரிமான மண்டலத்தைத் தூண்டி உணவு நன்கு செரிமானம் ஆக உதவுகிறது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் குறைந்த அளவில் இந்தப் பழத்தை எடுத்துக்கொள்ளலாம். கர்ப்பக்காலத்தில் இனிப்பு உள்ளிட்டவற்றைச் சாப்பிடுவதற்குப் பதில், உலர் ஆப்ரிகாட் சாப்பிடுவது நல்ல சிற்றுண்டியாக இருக்கும்.

# நிலவு முதல் செவ்வாய் வரை... விண்வெளி ஆய்வில் இந்தியாவின் சாதனைகள்!

விண்வெளி அறிவியல் (SPACE SCIENCE) என்பது பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் உள்ள பிரபஞ்சம், கோள்கள், நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் திரள்களைப் பற்றி ஆய்வு செய்யும் துறையாகும். இது வானியல், வானியற்பியல், கிரக அறிவியல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இஸ்ரோ(ISRO) போன்ற அமைப்புகள் சந்திரயான், மங்கள்யான் மற்றும் ஆதித்யா-எல்1 போன்ற திட்டங்கள் மூலம் சூரியன் மற்றும் கிரகங்களை ஆய்வு செய்கின்றன.

விண்வெளி அறிவியலின் முக்கிய அம்சங்கள்: *பிரிவுகள்:

வானியல்(ASTRONOMY), வானியற்பியல் (ASTROPHYSICS), கோள் அறிவியல்(PLANETARY SCIENCE) மற்றும் விண்வெளி உயிரியல் (SPACE BIOLOGY) போன்ற பிரிவுகள் உள்ளன.

*ஆய்வு முறைகள்: தொலைநோக்கிகள், செயற்கைக்கோள்கள், ஆளில்லா விண்வெளி ஆய்வுக் கருவிகள் மற்றும் மனித விண்வெளிப் பயணங்கள்.

*இந்தியாவின் பங்கு(ISRO):

சவுண்டிங் ராக்கெட்டுகள் மூலம் தொடங்கி, தற்போது சந்திரயான் (நிலவு), மங்கள்யான்(செவ்வாய்) மற்றும் ஆதித்யா-எல்1(சூரியன்) ஆகிய அறிவியல் பயணங்களை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது.

விண்வெளி அறிவியலின் முக்கியசாதனைகள்:விண்வெளி அறிவியல் மனிதகுலத்தின் அறிவை வியத்தகு முறையில் விரிவுபடுத்தியுள்ளது. நிலவில் கால் தடம் பதித்தல், செவ்வாய் மற்றும் வியாழன் கிரகங்களுக்கு விண்கலங்களை அனுப்புதல், ஹப்பிள் (HUBBLE ) மற்றும் ஜேம்ஸ் வெப் (JAMES WEBB) தொலைநோக்கிகள் மூலம் பிரபஞ்சத்தின் ஆழத்தை ஆராய்தல் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையம் (INTERNATIONAL SPACE STATION - ISS) அமைத்தல் ஆகியவை மிக முக்கிய மைல்கற்களாகும்.



*விண்வெளி நிலையங்கள்:

சர்வதேச விண்வெளி நிலையம்(ISS) விண்வெளியில் மனிதர்கள் நீண்ட காலம் தங்கி ஆராய்ச்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இதன் மூலம் விண்வெளியில் தொடர் ஆராய்ச்சி, சாத்தியமான மனித வாழ்விடங்கள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* ஆழ் விண்வெளி தொலைநோக்கிகள்: ஹப்பிள் மற்றும் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கிகள் பிரபஞ்சத்தின் ஆழமான காட்சிகளை படம்பிடித்து, விண்மீன் திரள்களின் தோற்றத்தை விளக்குகின்றன. இது பிரபஞ்சத்தின் தோற்றம், நட்சத்திரங்கள், விண்மீன் திரள்கள் மற்றும் கருந்துளைகளைப்பற்றியபுதிய பார்வையை வழங்குகின்றன.

* செவ்வாய் மற்றும் பிற கோள் ஆய்வுகள்:

நாசாவின் ரோவர்கள் செவ்வாய் கிரகத்தில் உயிர்வாழும் சூழலை ஆராய்ந்து வருகின்றன.

*இந்தியாவின் சாதனைகள்:

சந்திரயான்-1: நிலவில் நீர் மூலக்கூறுகள் இருப்பதை முதன்முதலில் உறுதிசெய்தது.

சந்திரயான்-3:நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு இந்தியா என்ற பெருமையைப் பெற்றது.

மங்கள்யான்: செவ்வாய் கிரகத்தை அடைந்த முதல் ஆசிய நாடு மற்றும் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்ற முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.

ராக்கெட் தொழில்நுட்பம்:

PSLV, GSLV மற்றும் LVM3 போன்ற உள்நாட்டு ராக்கெட்டுகள் மூலம் செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்துவது.





* ஜிபிஎஸ்(GPS), வானிலை கணிப்பு மற்றும் தகவல் தொடர்புக்கு உதவும் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் தினசரி வாழ்வில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றது.

* விண்வெளி ஆய்வுகளுக்காக உருவாக்கப்படும் புதிய பொருட்கள் விமான போக்குவரத்து, மருத்துவம் மற்றும் பிற துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

* இந்த சாதனைகள் விண்வெளி பற்றிய புரிதலை மேம்படுத்துவதுடன், பூமியில் தகவல் தொடர்பு, காலநிலை ஆய்வு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை மனிதனின் தொழில்நுட்பத்திறனை உலகிற்கு பறைசாற்றுவதுடன், எதிர்காலத்தில் பிற கிரகங்களில் மனிதன் வாழ்வதற்கான சாத்திய கூறுகளையும் ஆராய்ந்து வருகின்றன.

# துளிர்




ஊரின் இதயப்பகுதியில் எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் 'கனி மொபைல்ஸ்'. கண்ணாடிக் கதவுகளுக்குப் பின்னே குளிரூட்டப்பட்ட அறைக்குள் புதுப்புது போன்கள் மின்னிக்கொண்டிருக்க, வாசலில் அந்தப் பெண் மட்டும் பல மணிநேரமாக அமர்ந்திருந்தார். கையில் ஒரு பழைய மாடல் போன், கண்களில் எதையோ தேடும் ஏக்கம்.

கடையில் கூட்டம் சற்று குறைய ஆரம்பித்ததும், விக்கி மெல்ல வெளியே வந்தான். "என்னம்மா... ரொம்ப நேரமா இங்கயே நிக்கிறீங்க? என்ன வேணும் உங்களுக்கு?" என்று கனிவுடன் கேட்டான்.

"தம்பி... இந்த போன்ல கால் வரமாட்டேங்குதுப்பா. அது என்னன்னு கொஞ்சம் பாரு," என்று நடுக்கத்துடன் அந்தத் தாய் நீட்டிய போனை வாங்கினான் விக்கி.

அவன் சோதித்துப் பார்த்தான். சிக்னல் சீராக இருந்தது, பேலன்ஸ் இருந்தது. தன் போனில் இருந்து அழைத்துப்பார்த்தான், மணி அடித்தது. "எல்லாம் நல்லாதான் இருக்குமா... இதோ பாருங்க, கால் வருது," என்று அவரிடம் காட்டியும் விட்டான். அந்தத் தாயின் முகம் வாடியது. "அப்புறம் ஏன் தம்பி என் மவன் கிட்ட இருந்து கால் வரல? போன வாரத்துல இருந்து அவன் பேசவே இல்லையே..."

விக்கியின் மனதுக்குள் ஏதோ ஒன்று உதைத்தது. "உங்க பையன் நம்பர் சொல்லுங்கம்மா, நான் பேசிப் பார்க்கிறேன்," என்றான். அவர் கொடுத்த அந்த வெளிநாட்டு எண்ணிற்கு அழைத்தபோது 'தொடர்பு கொள்ள முடியவில்லை' என்றே பதில் வந்தது. விடாமல் தேடிய விக்கிக்கு, அந்தப் பையன் வேலை பார்த்த நிறுவனத்தின் உதவி எண் கிடைத்தது. கடையின் ஒரு மூலையில் சென்று விக்கி அந்த நிறுவனத்தைத் தொடர்பு கொண்டான். அங்கிருந்து வந்த செய்தி இடியெனத் தாக்கியது. "இஸ்ரேல் - ஈரான் போர் பதற்றத்தில், குறிப்பிட்ட அந்த நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த இளைஞன் உயிரிழந்துவிட்டான்."

விக்கியின் கைகள் நடுங்கின. கண்கள் குளமாயின. வெளியே அந்தத் தாய், "மவன் கூப்பிடுறானாப்பா?" என்று நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருந்தார். உண்மையைச் சொன்னால் அந்த நிமிஷமே அந்தத் உயிர் பிரிந்துவிடும் என்பதை விக்கியின் உள்ளுணர்வு சொல்லியது.

இதற்கிடையே அந்தத் தாய் மெல்லிய குரலில் சொன்னார்: "தம்பி... வீட்டு வாடகை கொடுக்கணும். அவன் அனுப்புற காசுலதான் நான் வாடகை கொடுப்பேன். இந்த மாசம் முடிஞ்சு போச்சு, வீட்டுக்காரன் சத்தம் போடுறான்." விக்கி ஒரு நிமிடம் யோசித்தான். தன் வங்கிக் கணக்கைச் சோதித்தான். அதில் இருந்ததே மூன்றாயிரம் ரூபாய்தான். யோசிக்காமல் அதை அந்தத் தாயின் கணக்கிற்கு மாற்றினான்.

"அம்மா... உங்க பையன் இப்பதான் மூவாயிரம் ரூபாய் அனுப்பி இருக்கான். இதோ மெசேஜ் வந்துடுச்சு பாருங்க," என்றான்.

வாடிய அந்தத் தாயின் முகம் சட்டென மலர்ந்தது. ஒரு கோடி ரூபாய் கிடைத்தது போன்ற ஒரு மகிழ்ச்சி அந்தச் சிரிப்பில் இருந்தது. "என் மவன் என்னைக்குமே என்னைக் கைவிடமாட்டான் தம்பி," என்று சொல்லிக்கொண்டே அவர் நடக்கத் தொடங்கினார்.

இவை அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த கடையில் இருந்த ஒரு நபர் விக்கியை நெருங்கினார். "ஏன் தம்பி... பொய் சொல்லி உன் காசை கொடுக்குற? ஒரு மாசம் கொடுப்ப... அடுத்த மாசம் என்ன பண்ணுவ? ஒவ்வொரு மாசமும் நீயாவே காசு கொடுப்பியா?" என்று எதார்த்தமாகக் கேட்டார்.

விக்கி கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே சொன்னான்: "அடுத்த மாசம் என்ன நடக்கும்னு எனக்குத் தெரியாது சார். ஆனா, இந்தச் சின்ன பொய் அந்த அம்மாவுக்கு ஒரு நம்பிக்கையைத் தருது. தன்னோட பையன் உயிரோட இருக்கான்னு நினைச்சு இன்னும் சில நாட்கள் அவங்க நிம்மதியா வாழ்வாங்க. பையன் இறந்துட்டான்ங்கிற உண்மையைச் சொன்னா, அந்த நிமிஷமே அவங்களும் மனமுடைஞ்சு இறந்து போயிருவாங்க. தன்னோட மகன் வாழ்கிறான் என்ற நம்பிக்கையை வாழவைக்கத்தான் இந்த முயற்சி."

அன்று அந்த மொபைல் கடையின் வாசலில் ஒரு மனிதனின் இறப்புச் செய்தி, இன்னொரு மனிதனுக்குள் உறங்கிக் கொண்டிருந்த மனிதாபிமானத்தைத் துளிர்க்கச் செய்திருந்தது.

**-மை.சத்திய பாரதி**

# சீனியம்மா...



பிள்ளைகளுக்கு விடுமுறை விட்டு ஒரு வாரம் ஆச்சு இன்னும் வரலையே காலையிலிருந்து ஆறு முறை பேருந்து நிறுத்தத்திற்கும் வீட்டிற்கும் தடியை ஊண்டிக் கொண்டு மெதுவா நடந்த வண்ணம் இருந்தாள் சீனியம்மா.

"வருசா வருசம் லீவுக்கு வந்துருவோம் அப்பத்தா" ன்னு சொன்னுச்சுகப்பா பேரப்பிள்ளைகஅதாப்பா.. வருதுகளான்னு பார்க்க வந்தே...சரி ரங்கா... பனம்பழம் கிடைக்குமா" "இப்போ ஏது நொங்கு தானே கிடைக்கும் " "சரிப்பா மாம்பழமும் கொண்டு வர்றியா" "பிள்ளைகள் வரட்டும் மா தோட்டத்துல இருந்து கொண்டு வர்றே சரி அக்கா தங்கச்சிபிள்ளைகள் வரலையா"

"தம்பி பிள்ளைகள் வந்ததும் மதுரைக்கும்,மானாமதுரைக்கும் தகவல் சொல்லி விட்டா உடனே வந்துருங்க இந்த வயசான காலத்துல சின்னஞ்சிறுசுகள கண்ணுக்கு குளிர்ச்சியா பார்த்தா போதுப்பா" என கண்கலங்கினாள் சீனியம்மா

"முதல்ல அக்கா,தங்கச்சி பிள்ளைகள வரச் சொல்றே அப்பறமா தம்பிக்கு போனப் போட்டு வரச் சொல்லலாம் " என ரங்கன் சொல்லவும் "சரிப்பா வரச் சொல்லு உம் பிள்ளைங்க எங்கே வீட்டுப் பக்கம் போகக் கூடாதுன்னு சொன்னியா "

"இல்லே ஆத்தா பசங்க அம்மாச்சி வீட்டுக்கு போயிருக்காங்கே" "அப்படியா சரி சரி அவளும் பேரங்கேமேல பாசக்காரிதா போயிட்டு வரட்டும்" சரிம்மா வீட்டுக்குப் போ"என ரங்கன் சொன்னதும் வீட்டுக்கு திரும்பினாள் சீனியம்மா

"ரங்கா ரங்கா... என அழைப்பு குரல் கேட்டு திரும்பினான் பேருந்து நிறுத்தத்திற்கு அருகே படர்ந்த அரச மரநிழலில் கட்டப்பட்டு ஓடுஅமைக்கப்பட்ட திண்ணையில் இருந்து கொண்டு அழைத்தவரைப் பார்த்தவன் அடித்த வெயிலையும் பார்த்து ஒதுங்கினான் ரங்கன் என்ன மாமா எனக் கேட்டுக் கொண்டே அவர் அருகில் சென்றான்

"சீனியம்மாவை வெயில ஏன்டா அலைகளிக்கிறே" என சுடலை தாத்தா கேட்க, "மாமா பேரப்பிள்ளைகள் பஸ்ல வருதான்னு பார்க்க வந்ததா வீட்டுக்கு போ வந்தா கூட்டிட்டு வர்றேன்னு வீட்டுக்குப் போகச் சொன்னேன்

அப்பிடியா...உன் ஆத்தா சீனியம்மா திறமைசாலி மட்டுமில்ல ரெம்ப பாக்கியசாலியும் கூட ரங்கா உன் அப்பே மருதைய்யன் உழைப்பாளி மாதிரி இந்த ஜில்லாவிலேயே கிடையாதுடா அப்படி உழைக்கிறவன விரும்பி கட்டிக்கிட்டா சீனியம்மா ரெம்ப வருசமா பிள்ளை இல்லைன்னு வருத்தப்பட்டவ அவ தங்கச்சிய இரண்டாந்தாரமா கட்டி வச்சா அவ வந்த நேரம் சீனியம்மா புள்ளதாச்சியானா அவளுக்கு பொறந்ததுதான் உன் அக்கா காவேரி அடுத்து தங்கச்சி புள்ளத்தாச்சியானா அவளுக்கு பொறந்தவன் தான் நீ! நீ பொறந்ததும் உன் ஆத்தா செத்துபோச்சு,உன்னை தன் பிள்ளையா எடுத்து வளர்த்தா அடுத்தடுத்து உன்தம்பி "தங்கச்சி பொறந்துச்சுக பிள்ளைகள் இல்லாவிட்ல நாலு பிள்ளைங்கன்னு இருந்த போது வயக்காட்டுல பட்டா கொடுக்குறோம் யார் யாருக்கு எத்தனை ஏக்கருன்னு அளவு எடுக்குறதுக்கு கவர்மெண்ட் சர்வே கல்லு நடுவாங்க, சர்வே கல்லு நடுவதற்கு கடப்பாறை கம்பிய வரப்பு ஓரமா ஊண்டி வச்சவங்க எடுக்காம போயிட்டாங்க அந்த கடப்பாற கம்பி ஒரு பக்கம் மண்ணு குத்துறதுக்கும், மறுபக்கம் தேங்காமட்ட உரிக்கிறதுக்கும்" வச்ச கம்பி பொழுது சாய்ஞ்ச நேரம் எல்லோரும் அப்படியே போட்டுட்டு காலைல வந்து பார்த்துக்கலாம்னு போயிட்டாங்க, மருதையன் மாடுகள முன்னே பத்தி விட்டு மாடு கட்டிய கயிறை மாட்டோட கட்டாம, கையில் எடுத்துட்டு வரும் போது வரப்பு ஓரமா சர்வே கல்லை பார்க்கிறேனு வந்தவன் காலில் கயிறு சிக்கி தடுமாறி கடப்பாறை கம்பி மேலே விழுந்தவரு அந்த கம்பி நேருக்கு நேரா குத்தி இருந்தா காப்பாத்தி இருக்கலாம், நெஞ்சுல குத்தி பின் கழுத்து வழியா வந்து வயல்லேயே உருண்டு பிரண்டு செத்துப் போனாரு

மருதையன் போன பின்னாடி ,சீனியம்மாநாலு பிள்ளைகள வளக்கப்பட்டபாடு பெரும்பாடு போ காவேரி மட்டும் படிக்க விடாம வீட்டு வேலைக்கு வச்சுட்டு மத்த முனுபேரையும் படிக்க வச்சா வயக்காட்டு வேலகள ஆட்கள வச்சு வெள்ளாம செய்த அமோகமா விளைச்சலில் கூலிக்கு மேல விளைஞ்சத கொடுப்பா பிள்ளைகள் பெரிய பிள்ளைகளா வளரவளர காவேரிய மானாமதுரை யிலேயும் தங்கச்சிய மதுரையிலேயும் கட்டிக்கொடுத்தா உன்ன உன் தங்கச்சி வழியில பொன்னெடுத்தா உள்ளுருலேயே தனியா வீடு வாங்கி வச்சா ,தனக்குன்னு எதுவும் வச்சுக்கிறாமே வீடு,வயக்காடு எல்லாவற்றையும் பாகுபாடு இல்லாம பிரிச்சு கொடுத்தா , அதில பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஏக்கரும்,கோயிலுக்குன்னு இடத்த ஒதுக்கி கொடுத்துட்டு அந்த ஓட்டு வீட்ல தனியா இருக்கா அவ மனசு நோக விடாம நீதான்டா பாக்கனும்" என்று சொல்ல கண்களைத் துடைத்த ரங்கன் "சரிங்கமாமா...." என்று சொல்ல அஞ்சு மணி பஸ் வரும் சத்தம் கேட்டு திரும்பியவன் மாமா காபித்தண்ணி சாப்பிடுறியா ரங்கன் கேட்க,என்னடா ரங்கா புதுசா கேட்குற காபி தண்ணி என்னைக்கு டா குடிச்சே நானும் உன் அப்பனும் காலையில நீராகாரமும்,சாய்ந்தரம் கள்ளுத்தண்ணீயும் தான் குடிப்போம் ஒரு மரத்து பனைகள்ளு ஒரு புட்டி வாங்கிகூடு என்று மாமா கேட்க, "சரிமாமா வாங்கித் தர்றே "ன்னு சொல்லி கொண்டு இருக்க வந்த பஸ்ஸி லிருந்து சிறு பிள்ளைகளுடன் அக்கா காவேரி,தம்பி பிள்ளைகள்,தங்கச்சி பிள்ளைகள்,என எல்லோரும் இறங்கியதைப் பார்த்து "அக்கா, தம்பி,தங்கச்சி, பிள்ளைங்களோடு வந்திருச்சுக வர்றே மாமா "என்று சொல்லிக்கொண்டே நடந்தான் ரங்கன்

"வாங்கக்கா நல்லா இருக்கியா... மாமா வரலையா...,தம்பி அம்மா உன்னத்தாண்டா,நினச்சுகிட்டே இருக்கு,தங்கச்சி நல்லா இருக்கியா, என்று கேட்க, "மாமா வேலைக்கு போயிருக்காரு நீ போனு போடவும் வந்தே " என அக்கா சொல்ல,

"டே பசங்களா பள்ளிக்கூடம் லீவு விட்டாச்சா"ன்னு கேட்க, "மாமா லீவு விட்டாச்சு " சரி சரி வாங்க காலையில இருந்து ஆத்தா கடைவீதிக்கும்,வீட்டுக்கும் எத்தனை தடவ அலையுறது நீங்க வந்தா நா கூட்டிட்டு வர்றேன்னு சொல்லி அனுப்புச்சே அநேகமா பஸ் சத்தம் கேட்டு வந்தாலும் வரும் என பேசிக் கொண்டே வீடு வந்து சேர்ந்ததும் "ஆத்தா ஆத்தா யாரு யாரு வந்துருக்காங்கனு பாரு" என்று குரல் கொடுக்க எந்த சத்தமும் இல்லாம இருக்க, "வாங்க ஆத்தா தூங்குனாலும் தூங்கும்"எனச் சொல்லிக்கொண்டே வீட்டினுள் வந்தான் "ஆத்தா படுத்திருக்கியா.... அருகில் சென்று ஆத்தா...ஆத்தா... என அழைக்க சீனியம்மா அசையாமல் தன் உணர்வை இழந்திருந்தாள்.அணைவரும் அதிர்ச்சி அடைந்து பார்த்துக் கொண்டு இருக்க,எல்லோர் கண்களிலும் கண்ணீர் தழும்பியது.


**-நல.ஞானபண்டிதன்**

# விக்கிரமாதித்தன் கதைகள் 5

**. A.S.GOVINDA RAJAN**

## போஜராஜனும் சிம்மாசனமும்

போஜராஜன் தருமாபுரி என்ற நகரத்தை நீதி நெறியாக ஆட்சி செய்து வந்தான். அப்போது போஜராஜன் வேட்டைக்குச் சென்று திரும்பி வரும்பொழுது வழியில் களைப்பாறுவதற்காக எல்லோரும் ஓர் இடத்தில் தங்கினார்கள். அங்கே கம்பங்கொல்லையைச் காவல் காத்து வந்த சரவணப்பட்டன் பரண்மீது இருந்தபடியே வேட்டைக்காரர்களை அழைத்து, இங்குள்ள வெள்ளரிக்காய்களையும், கம்பங்கதிர்களையும் பறித்து சாப்பிடுங்கள் என்று உபசரித்தான். அவர்கள் அதைக் கேட்டதும் மகிழ்வுற்று, சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது, பரண்மீது இருந்த சரவணப்பட்டன் கீழே இறங்கி வந்து வேட்டைக்காரர்களைப் பார்த்து என்ன அக்கிரமம்? இப்படியா பயிர்களை அழிப்பது? என்றான். இந்த நிகழ்ச்சியைப் பார்த்த போஜராஜன் அமைச்சரைப் பார்த்து, அவனாகவே எல்லோரையும் அழைத்துச் சாப்பிடும்படி சொன்னான். பிறகு அவனே அக்கிரமம் என்கிறான்னே. இது என்ன வேடிக்கை? என்றான். உடனே அமைச்சர் அவன் பரண்மேல் இருந்து பேசியதற்கும், கீழே இறங்கி வந்து பேசியதற்கும் வித்தியாசம் உள்ளது என்றான். அந்த பரண்மேல் ஏதோ இருக்கவேண்டும், அதைச் சோதனை செய்தாள் உண்மை தெரிய வரும் என்றான். போஜராஜன் உடனே சரவணப்பட்டனை அழைத்து, உனக்கு வேறொரு கொல்லையும், வேண்டிய பொருளையும் தருகிறேன். இந்த கொல்லையை எங்களுக்குத் தர உனக்கு சம்மதமா? என்று கேட்டான். அரசனே கேட்கும்போது மறுக்க முடியாமல், சரவணப்பட்டன் அதைக் கொடுக்க சம்மதித்தான். பிறகு கம்பங்கொல்லையை அரசுக்குக் சொந்தமாக்கிக் கொண்டான். பிறகு அதனைத் தோண்டினான். அதில் ஒரு அழகான சிம்மாசனம், தங்கத்தாலும், நவரத்தினங்களாலும் இழைக்கப்பட்டிருந்தன. அந்த ஆசனத்தில் முப்பத்து இரண்டு பதுமைகள் இருந்தன. அதில் ஒவ்வொரு பதுமைக்கும், பெயர் சூட்டப்பட்டிருந்தன.





புதுமையான சிம்மாசனத்தை மிகவும் கவனத்தோடு, பத்திரமாக அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அரசன். அதை சுத்தப்படுத்தி, சபா மண்டபத்தில் வைத்து, அரச குருவை அழைத்து, அதில் அமர்ந்து ஆட்சி செய்வதற்கு நல்ல நாளைக் குறித்து, அந்நாளில் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க, சிம்மாசனத்தில் அமர்வதற்காகப் போஜராஜன் முதல் படிக்கட்டில் வலது காலை எடுத்து வைத்தன். அப்பொழுது, முப்பத்து இரண்டு பதுமைகளும் கைகொட்டிச் சிரித்தன! மண்டபத்தில் இருந்த அனைவரும், அரசன் உள்பட வியப்புற்று அசையாமல் இருந்தனர். உடனே அரசன் அழகுமிக்க பதுமைகளைப் பார்த்து. நீங்கள் கைகொட்டிச் சிரிப்பதற்கு காரணம் என்ன? முதல் படியில் இருந்த விநோதரஞ்சிதப் பதுமை மன்னனே, இது விக்கிரமாதித்த மன்னன் ஆட்சி செய்தது. இதில் நீங்கள் அமர நினைப்பதை நினைத்து தான் சிரித்தோம். விக்கிரமாதித்தன் திறமைமிக்கவர் அவர் ஐம்பத்து ஆறு தேசத்தையும் வென்று, அரசர்களும் வணங்கிக் கப்பம் கட்டிவர, இரண்டாயிரம் ஆண்டுகள் ஆட்சி நடத்தினார்.

அத்தகைய அறிவு, ஆயிரத்தில் ஒரு பங்கேனும் உம்மிடத்தில் இருந்தால் தான், இந்த சிம்மாசனத்தில் நீர் அமர முடியும். இல்லையென்றாள் உமக்கு தொல்லையே உண்டாகும் என்றது. விக்கிரமாதித்த மன்னனைப் பற்றி முழு வரலாற்றையும் எனக்குச் சொல்ல வேண்டும், இதனால் நான் பயன் அடைவேன் என்றான் போஜராஜன்.

# அட்சய திருதியை வரலாறு

அட்சய திருதியை நாடு முழுவதும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் மிகவும் புனிதமான நாட்களில் ஒன்றாகும். இந்த நாளில் தொடங்கும் எதுவும் எப்போதும் வெற்றி பெறும் என்பது நம்பிக்கை. இந்த நாள் நல்ல அதிர்ஷ்டம், வெற்றி மற்றும் அதிர்ஷ்ட ஆதாயங்களின் அடையாளமாகும்இந்த நாளில் அன்னபூரணி தேவி பிறந்தாள்.

* இந்த நாளில், கிருஷ்ணர் தனது உதவிக்காக வந்த தனது ஏழை நண்பரான சுதாமாவுக்கு செல்வத்தையும் பண ஆதாயங்களையும் வழங்கினார்.

* மகாபாரதத்தின்படி, இந்த நாளில் கிருஷ்ணர் பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்தபோது அவர்களுக்கு 'அக்ஷய பாத்திரத்தை' வழங்கினார். அவர்களை ஒருபோதும் பசியடையச் செய்யாத வரம்பற்ற அளவிலான உணவைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும் இந்தக் கிண்ணத்தை அவர்களுக்கு அருளினார்.

* இந்த நாளில் கங்கை நதி வானத்திலிருந்து பூமியில் இறங்கியது.

* இந்த நாளில்தான் குபேரர் லட்சுமி தேவியை வழிபட்டார், இதனால் கடவுளின் பொருளாளர் பதவி வழங்கப்பட்டது.

* சமண மதத்தில் இந்த நாள் அவர்களின் முதல் கடவுளான ஆதிநாதரை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.

## அட்சய திருதியையின் போது சடங்குகள்

விஷ்ணு பக்தர்கள் இந்நாளில் விரதம் இருந்து கடவுளை வழிபடுகின்றனர். பின்னர், ஏழைகளுக்கு அரிசி, உப்பு, நெய், காய்கறிகள், பழங்கள், ஆடைகள் வழங்கி தொண்டு செய்யப்படுகிறது. விஷ்ணுவின் அடையாளமாக துளசி நீர் சுற்றிலும் தெளிக்கப்படுகிறது.

கிழக்கு இந்தியாவில், இந்த நாள் வரவிருக்கும் அறுவடை காலத்திற்கான முதல் உழவு நாளாகத் தொடங்குகிறது. மேலும், தொழிலதிபர்களுக்கு, அடுத்த நிதியாண்டுக்கான புதிய தணிக்கைப் புத்தகத்தைத் தொடங்கும் முன், விநாயகப் பெருமானையும், லட்சுமி தேவியையும் வழிபடுகின்றனர். இது 'ஹல்கத்தா' என்று அழைக்கப்படுகிறது.

இந்நாளில் ஏராளமானோர் தங்கம் மற்றும் தங்க நகைகளை வாங்குகின்றனர். தங்கம் அதிர்ஷ்டம் மற்றும் செல்வத்தின் அடையாளமாக இருப்பதால், இந்த நாளில் இதை வாங்குவது புனிதமாக கருதப்படுகிறது.

இந்த நாளில் புதிய தொழில் முயற்சிகள், கட்டுமானப் பணிகள் இந்நாளில் தொடங்கும்.



மற்ற சடங்குகளில் கங்கையில் புனித நீராடுதல், புனித நெருப்பில் பார்லியை சமர்ப்பித்தல் மற்றும் இந்த நாளில் நன்கொடைகள் மற்றும் பிரசாதம் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

ஜைனர்கள் தங்களின் ஒரு வருட தபஸ்யை இந்நாளில் முடித்து, கரும்புச்சாறு அருந்தி வழிபாட்டை முடிக்கின்றனர்.

ஆன்மீக நடவடிக்கைகள், தியானம் மற்றும் புனித மந்திரங்களை உச்சரிப்பது எதிர்காலத்தில் நல்ல அதிர்ஷ்டத்தை உறுதிப்படுத்த முக்கியமாக கருதப்படுகிறது.

பகவான் கிருஷ்ணரின் பக்தர்கள் இந்த நாளில் சந்தனத்தால் கடவுளுக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அவ்வாறு செய்தால், அந்த நபர் இறந்த பிறகு சொர்க்கத்தை அடைவார் என்று நம்பப்படுகிறது.* விநாயகப் பெருமானும் வேத வியாசரும் இதிகாசமான மகாபாரதத்தை இந்த நாளில்தான் எழுதினார்கள்.

* இந்த நாள் விஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கொண்டாடப்படுகிறது

* புராணங்கள் மற்றும் பண்டைய வரலாற்றின் படி, இந்த நாள் பல முக்கியமான சம்பவங்களைக் குறிக்கிறது

* தமிழ் மாதமான சித்திரை மாதத்தின் சுக்ல பக்ஷத்தின் மூன்றாவது நாளில் அக்ஷய திருதியை கொண்டாடப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின்படி, இது ஏப்ரல்-மே மாதங்களில் வருகிறது. இந்த நாளில்தான் சூரியன் மற்றும் சந்திரன் இருவரும் தங்கள் கிரகங்களில் சிறப்பாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நாள் 'அகா தீஜ்' என்றும் அழைக்கப்படுகிறது.

முனைவர்
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

# தினம் ஒரு தலைவர்கள் பி.சுந்தரய்யா வரலாறு

பிறப்பு, ஆரம்ப வாழ்க்கை

புச்சலப்பள்ளி சுந்தரராம ரெட்டி என்ற பெயரைக் கொண்ட பி. சுந்தரய்யா 1 மே 1913 அன்று ஆந்திரப் பிரதேசத்தின் நெல்லூர் மாவட்டம் அழகின்படுவில் பிறந்தார் .சிறுவனாக இருந்த போது அவருடைய முதல் பொது நடவடிக்கை என்பது தன்னுடைய கிராமத்தில் தலித்துகளுக்கு எதிராக நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த சாதிய ஒடுக்குமுறை களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து உண்ணாவிரதம் மேற்கொண்டதாகும். தென்னிந்தியாவிற்கு விஜயம் செய்த முதல் கம்யூனிஸ்ட்டான அமீர் ஹைதர் கான் மூலம், கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொதுவுடைமை இயக்கத்தில்

சென்னை லயோலா கல்லூரியில் படிக்கும் பொழுது சுதந்திர போராட்ட இயக்கத்திலும், பின்னர் பொதுவுடைமை இயக்கத்திலும் அதிக ஆர்வம் கொண்டார். 1932ம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று தஞ்சாவூர் சிறுவர் சிறை, திருச்சி மற்றும் இராஜமகேந்திரபுரம் சிறைகளில் தண்டனைக் காலத்தை கழித்தார். 1933-34ம் ஆண்டுகளில் தென்னியதியாவில் பொதுவுடைமைக் கட்சியை உருவாக்க வந்த தோழர் அமீர் ஹைதர்கானின் தொடர்பால் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஈர்க்கப்பட்டார். பின்னர் 1934ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரானார். அவருக்கு கட்சி ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் கேரளாவில் கட்சியை உருவாக்கும் பணியை அளித்தது. அதை அவர் வெற்றிகரமாகச் செய்து முடித்தார். 24 வயது இருக்கும் போதே 1936-ல் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக மாறினார். நாட்டில் கட்சி மத்தியத்துவப்படுத்தப்பட்ட கட்சியாக மறுசீரமைப்பு செய்யப்பட்டபின் அமைக்கப்பட்ட



முதல் மத்திய குழுவாக அதுஇருந்தது. தென்னிந்தியாவில் பொதுவுடமைக் கட்சியைக் கட்டும் பணி அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. "கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு" என்ற நூலில் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் எழுதியிருப்பது போல, கேரளாவில் கம்யூனிஸ்ட்டுகளின் முதல் பிரிவைத் தெரிவு செய்ததில் பி.சுந்தரய்யா முக்கியப் பங்கு ஆற்றியிருக்கிறார். 1939ம் ஆண்டில் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியவுடன் கம்யூனிஸ்ட் கட்சி அந்த யுத்தத்தை எதிர்த்தது. இதனால் ஆத்திரம் கொண்ட ஆங்கிலேய அரசாங்கம் 1940ம் ஆண்டில் நாடு முழுவதிலும் கம்யூனிஸ்டுகளை கைது செய்த பொழுது சுயதரய்யா கைதாகாமல் தப்பினார். சென்னையில் தென்னிந்தியாவுக்கான கட்சியின் தலைமறைவு மையத்தை உருவாக்கி வழிகாட்டினார். 1942ம் ஆண்டில் தடை நீங்கிய பின், அவர் கட்சியின் முடிவுப்படி பம்பாயிலிருந்த கட்சியின் தலைமையகத்திலிருந்து செயல்பட்டார். கட்சிக்கென 'பீப்பிள்ஸ் பப்ளிசிங் ஹவுஸ்' என்ற புத்தக நிலையத்தை உருவாக்கினார். 1943ம் ஆண்டில் ஜப்பானியப் படைகள் இந்தியக் கடற்கரைப் பகுதிகளில் நுழைந்து இந்த நாட்டை கைப்பற்றக் கூடும் என்ற நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி நாடு முழுவதும் சென்று கட்சி ஊழியர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்க முடிவு செய்து, அந்தப் பணியை சுந்தரய்யாவிடம் ஒப்படைத்தது. அவர் நாடு முழுவதும் சென்று தோழர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தார்.

இந்திய பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்)இல் அவரது பணி

1952ம் ஆண்டில் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சுந்தரய்யா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1955ம் ஆண்டில் நடைபெற்ற முதல் ஆந்திர மாநிலத் தேர்தலில் வெற்றி பெற்ற சுந்தரய்யா சட்டமன்றத்தில் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.1955ம் ஆண்டிலிருயது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தோன்றிய வர்க்க சமரசப் போக்கு தொடர்ந்து நீடித்து, கட்சி 1964ம் ஆண்டில் பிளவுபட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பது உருவாயிற்று.அவ்வாண்டு நவம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற கட்சியின் ஏழாவது அகில இந்திய மாநாட்டில் அவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977ம் ஆண்டு வரை(பன்னிரண்டு ஆண்டு காலம்) அப்பொறுப்பில் செயல்பட்டார். பின்னர் அவர் ஆந்திராவிற்கு திரும்பி, அங்கே கட்சியின் மாநிலச் செயலாளர் ஆனார்.1967இல் அக் கட்சியின் மத்திய குழுவால் நிறைவேற்றப் பட்ட 'கட்சி ஸ்தாபனத்தின் பணிகள்' என்கிற புரட்சிகர அமைப்பிற்கான செயல் திட்டத்தில் அவரது முத்திரையைப் பெற்றிருக்கிறது. 1968ம் ஆண்டிலிருந்து மார்க்சிஸ்ட் கட்சிக்குள் தோன்றிய இடது அதிதீவிரப் போக்கிற்கு எதிராக அவர் இதரதோழர்களுடன் சேர்ந்து பெரும் அரசியல் தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்தினார். 1975-76ம் ஆண்டுகளில் அவசரநிலை பிரகடனம் நாட்டில் அமலில் இருந்த போது தலைமறைவாகச் சென்று கட்சிப்பணியாற்றினார்.

பி. சுந்தரய்யா, விவசாயப் புரட்சிக்கான போர்த்தந்திரங்களை வளர்த்தெடுப்பதில் பெருமளவில் பங்களிப்பினைச் செய்திருக் கிறார். 1936இல் அகில இந்திய விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டபோது அதன் நிறுவனத் தலைவர்களில் அவரும் ஒருவர். அப் போது அவர் அதன் இணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். "தெலுங்கானா ஆயுதப் போராட்டமும் அதன் படிப்பினைகளும்" என்கிற அவரது நூல், தெலுங்கானா மக்களின் ஆயுதப் போராட்டம் குறித்த முழுமையான நூலாகும். கம்யூனிச இயக்கத்திற்குள்ளிருந்த திருத்தல்வாதத்திற்கு எதிராகப் போராடினார். அதேபோன்று அதற்கு இணையாக 'அதிதீவிர இடதுசாரி' திரிபுகளுக்கு எதிராகவும் கடுமையாகப் போராடினார்.

உடல் நலக் குறைவு காரணமாக சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் 1985ம் ஆண்டு மே மாதம் 19ம் தேதி அதிகாலையில் உயிர் நீத்தார்.

# புராண கால வரலாற்று பின்னணியில் உருவாகும் பகவான்





அம்மன்யா மூவிஸ் பட நிறுவனத்தின் சார்பில் சி.வி. மஞ்சுநாதா தயாரிப்பில், சு.காளிங்கன் இயக்கத்தில் உருவாகியுள்ள புதிய திரைப்படம் பகவான். வித்தியாசமான கதையம்சத்துடன் உருவாகும் இந்த படத்தில், பிரபல நடிகர் ஆரி அர்ஜுனன் கதாநாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக பூஜிதா பொன்னாடா கதாநாயகியாக நடித்துள்ளார்.

மற்றும் ஜேம்ஸ் பார்ரெட், சந்தோஷ் பிரதாப், ஆடுகளம் நரேன், டெல்லி கணேஷ், ஜெகன், ஆடுகளம் முருகதாஸ், யோக் ஜேபி, பிர்லா போஸ், லக்கி நாராயணன், அலெக்ஸ், அபிஷேக், சத்யா, மாஸ்டர் பாண்டி, அஜெய் தாத்தா, ஜெகதீஷ், ஜி.வி. கிருஷ்ணா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு முருகன் சரவணன் ஒளிப்பதிவு செய்துள்ளார். மகேந்திரன் கணேசன் எடிட்டிங் செய்திருக்கிறார். சம்பத் ஜியின் பாடல்வரிகளுக்கு ப்ரசன் பாலா இசையமைத்துள்ளார். பின்னணி இசையை யுவராஜ் அமைத்துள்ளார். கலா மாஸ்டர் நடன அமைப்பையும், பாலையா கலை இயக்கத்தையும் கவனித்துள்ளனர். ஸ்டண்ட் மாஸ்டராக ஹரி தினேஷ் பணியாற்றியுள்ளதுடன், ஆடை வடிவமைப்பை வினையா தேவ் மேற்கொண்டுள்ளார். மக்கள் தொடர்பு பணிகளை புவன் செல்வராஜ் கவனித்துள்ளார். நிர்வாக தயாரிப்பை மூவேந்தர் மேற்கொண்டுள்ளார்.

படம் குறித்து இயக்குனர் சு. காளிங்கன் கூறுகையில் "இந்த பிரபஞ்சத்தில் நமக்கு புரியாத பல விசயங்கள் இருக்கிறது. அதில் எண்ணற்ற ரகசியங்கள் இருக்கிறது. நாம் எல்லோரும் பகவானை வணங்குகிறோம். இந்த முழு பிரபஞ்சத்தை இயக்குபவர் பகவான் என்றால், அவர் யார்?, அவர் வெறும் உருவமா? இல்லை வேறெதுவுமா? அப்படியெனில் இல்லுமினாட்டி யார்? இந்த கேள்விகளுக்கான பதில்தான் இப்படத்தின் மையம். நாம் அறியாத புராண கால வரலாற்றின் பின்னணியில் மித்தாலஜிகல் திரில்லராக இப்படத்தை உருவாக்கியுள்ளோம்" என்றார்.



நடிகை அதுல்யா ரவி தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த நடிகைகளில் ஒருவர். 33 வயதாகும் அதுல்யாவுக்கு 2.5 மில்லியன் ரசிகர்களுக்கும் மேலாக இன்ஸ்டாக்ராமில் இருக்கிறார்கள். அவர் கிளாமர் ஆக வெளியிடும் போட்டோக்கள் ரசிகர்களை அதிகம் கவர்கிறது. லட்சக்கணக்கில் லைக்குகளை குவிகிறது. சேலை மட்டுமின்றி மாடர்ன் உடையிலும் அவர் ரசிகர்களை கவர்ந்து வருகிறார். தற்போது அதுல்யா ரவி செம கிளாமர் ஆக படவிழாவுக்கு வந்திருக்கும் ஸ்டில்களை பாருங்க.

# ’ஜெயிலர் 2’ படைத்த சாதனை



நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் படம் ’ ஜெயிலர் 2’. நெல்சன் இயக்கும் இப்படம் கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ள நிலையில் ஓ.டி.டி. ஒப்பந்தத்தில் சாதனை படைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதல் பாகமான ’ஜெயிலர்’ படத்தின் டிஜிட்டல் உரிமத்தைப் பெற்ற பிரைம் வீடியோ, அதன் இரண்டாம் பாகத்தின் உரிமத்தையும் வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. ‘ஜெயிலர்’ படம் ரூ.100 கோடிக்கு முடிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், ’ஜெயிலர் 2’ படத்திற்கான ஒப்பந்தம் ரூ.160 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஒரு புதிய சாதனையை படைத்துள்ளதாக சினிமா வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது. இருப்பினும் இத்தகவல்கள் குறித்து படத்தயாரிப்பு நிறுவனம் சார்பில் எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை.

இந்த தகவல் உண்மை என்றால் இதுவரையில் ஒரு தமிழ் படத்திற்கு கிடைத்த மிகவும் விலையுயர்ந்த ஓடிடி ஒப்பந்தமாகவும் இது அமைகிறது. மணிரத்னத்தின் ’ பொன்னியின் செல்வன்’ படம் ரூ.125 கோடிக்கும், விஜய்யின் ’ லியோ’ படம் ரூ.120 கோடிக்கும், ரஜினிகாந்தின் ’ கூலி’ படத்தை பிரைம் வீடியோ ரூ.120 கோடிக்கு வாங்கியதாகக் கூறப்படுகிறது.

‘ஜெயிலர் 2’ படத்தில், ரஜினிகாந்த் ’டைகர்’ முத்துவேல் பாண்டியன் என்ற தனது கதாபாத்திரத்தில் மீண்டும் நடிக்கிறார். அவருடன் அவரது மனைவியாக ரம்யா கிருஷ்ணன் நடிக்கிறார். இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தில் சிவராஜ்குமார் மற்றும் மோகன்லால் ஆகியோர் சிறப்பு கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

லப்பர் பந்து பட புகழ் நடிகை சுவாசிகா மிக குறுகிய காலத்தில் தமிழ் சினிமாவில் முக்கிய குணச்சித்திர நடிகையாக வளர்ந்து இருக்கிறார். மாமன் படத்தில் அக்கா ரோலில் அவர் நடித்து இருந்ததும் அதிகம் பேசப்பட்டது. சுவாசிகா அடுத்து சூர்யாவின் கருப்பு படத்தில் நடித்து இருக்கிறார். அந்த படம் மே மாதம் ரிலீஸ் ஆகிறது. தற்போது சுவாசிகா எடுத்த அழகிய போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.



# கயல் சந்திரன் நடித்துள்ள ’சிங்கா’ படத்தின் டீசர் வெளியீடு




ருத்ரம் சினிமாஸ் சார்பில் அறிமுக இயக்குனர் ராஜதுரை சிங்கம் எழுதி, இயக்கியுள்ள புதிய படம், ‘சிங்கா’. இதில் கயல் சந்திரன் கதாநாயகனாக நடித்துள்ளார். மலையாள நடிகைகள் சிஜா ரோஸ் மற்றும் மீனாட்சி ரவிந்திரன் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இப்படத்திற்கு அறிமுக இசையமைப்பாளர் மனோஜ் சின்னசாமி இசையமைக்கிறார்.

மனிதர்களுக்கும் நாய்களுக்கும் இடையிலான ஆழமான அன்பையும், முறியாத பிணைப்பையும், கொண்டாடும் இதயத்தை வருடும் குடும்பக் கதையாக சிங்கா உருவாகி இருக்கிறது. இப்படம் உணர்ச்சி, நம்பிக்கை, காதல், ஆகியவற்றின் ஒன்றிணைந்த கலவையாக குடும்பம் முழுவதும் ரசிக்கும் படமாக உருவாகியுள்ளது.

‘சிங்கா’ எனும் அன்பான லாப்ரடார் நாய் தனது அழகிய அரவணைப்பினாலும், ஆழமான உணர்வுகளாலும் அனைவரின் மனங்களையும் நிச்சயம் கவருவான். மனிதனுடன் பகிரும் நட்பின் மூலம் அன்பு, நம்பிக்கை, வாழ்க்கைப் பயணம் ஆகியவை எவ்வாறு மலர்கின்றன என்பதைக் காட்டும் கதை இது. இந்த படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்நிலையில், சிங்கா படத்தின் டீசர் இன்று வெளியானது. இந்த டீசர் மக்கள் மத்தியில் கவனத்தைப் பெற்று வருகிறது.

# ரூம் பாய்- திரை விமர்சனம்



ரூம் பாய்- விமர்சனம்(2 / 5)

சூர்நோக்கு மையத்தில் படித்து வெளியேறும் நாயகன் நிகில், ஏலகிரியில் உள்ள ஒரு சொகுசு விடுதியில் ரூம் பாயாக வேலைக்கு சேர்கிறார். அங்கு நடக்கும் பாலியல் அத்துமீறல்கள் மற்றும் சட்டவிரோத செயல்களை கண்டுபிடிக்கிறார். மேலும் அதற்கான ஆதாரங்களை சேகரித்து விடுதியின் மேனேஜரை கொலை செய்கிறார். இதனால் வில்லன் கும்பலும், மறுபக்கம் போலீஸும் நிகிலை தேட ஆரம்பிக்கிறது.

இறுதியில் வில்லன் கும்பலிடம் நிகில் சிக்கினாரா? மேனேஜரை நிகில் கொலை செய்ய காரணம் என்ன? சட்ட விரோதமாக செயல்படும் வில்லன் யார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்துள்ள அறிமுக நடிகர் நிகில், தனது கதாபாத்திரத்திற்கு தேவையான அதிரடி மற்றும் உணர்ச்சிகளை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். ஆக்ஷன் மற்றும் நடன காட்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம்.

நாயகியாக நடித்த ஹர்ஷாவுக்கு அதிக வாய்ப்பு இல்லாமல், சில காட்சிகளில் மட்டும் தோன்றுகிறார். வில்லன் கதாபாத்திரங்களில் பிரபாகர் தனது நடிப்பால் கவனம் ஈர்க்கிறார். சூர்நோக்கு மையத்தின் காப்பாளராக நடித்திருக்கும் பிரபாகர் வில்லத்தனத்தை மிரட்டலாக வெளிப்படுத்தியிருக்கிறார். இமான் அண்ணாச்சி, பிர்லா போஸ், காத்து கருப்பு கலை, கற்பகம், கவிதா விஜயன், சமீர், சிட்டி ராஜா ஆகியோர் கொடுத்த வேலையை செய்து இருக்கிறார்கள்.

**இயக்கம்**

இயக்குனர் ஜெகன் ராயன், உண்மை சம்பவங்களை அடிப்படையாக கொண்டு சஸ்பென்ஸ் மற்றும் இன்வெஸ்டிகேஷன் திரில்லர் பாணியில் கதை சொல்ல முயற்சி செய்துள்ளார். திரைக்கதை பல திருப்பங்களுடன் நகர்ந்து, அடுத்து என்ன நடக்கும் என்ற ஆர்வத்தை உருவாக்குகிறது. கதாபாத்திரங்களின் பின்னணியையும் தெளிவாக இணைத்துள்ளார். யாரும் எதிர்பாராத திருப்பம் படத்திற்கு பெரிய பலத்தை கொடுத்து இருக்கிறது.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவாளர் சி.பாரதி ராஜன், பெரும்பாலும் உட்புற காட்சிகளாக இருந்தாலும், கதைக்கு ஏற்ற வகையில் அமைத்துள்ளார்.

**இசை**

வேலன் சகாதேவன் இசையில் பாடல்கள் சுமார் ரகம். பின்னணி இசை காட்சிகளின் உணர்வை ஓரளவிற்கு கொடுத்து இருக்கிறது.



வரலாறு முக்கியம், பேபி & பேபி போன்ற படங்களில் நடித்து இருப்பவர் பிரக்யா நக்ரா. பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தவர், டெல்லியில் வளர்ந்தவர் என்றாலும் தற்போது தென்னிந்திய படங்களில் தான் கவனம் செலுத்தி வருகிறார்.

பிரக்யா நக்ரா இன்ஸ்டாக்ராமில் 1.3 மில்லியன் ரசிகர்களை வைத்து இருக்கிறார்.

அவர் தற்போது ஹாட் உடையில் கவர்ச்சி போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.

# ரசிகர்களின் அன்பை பார்க்கும்போது புல்லரிக்கிறது- தமன்னா



இந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக ஜொலித்து வரும் தமன்னா, தற்போது தமிழில் சுந்தர் சி இயக்கத்தில் விஷால் ஜோடியாக 'புருஷன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்தி படங்களையும் வரிசையாக கைவசம் வைத்திருக்கிறார். இதுதவிர தற்போது நகை விற்பனையகம் தொடங்கி தொழில் அதிபராகவும் கலக்கி வருகிறார்.

இதற்கிடையில் ரசிகர்கள் குறித்து தமன்னா தெரிவித்துள்ள கருத்துகள் கவனம் ஈர்த்துள்ளன. அவர் கூறுகையில், "ரசிகர்கள் தான் பிரபலங்களின் பெரிய சொத்து. அந்தவகையில் ரசிகர்களை வெகுவாக பெற்றிருப்பது என் பாக்கியம்.

அதேவேளை என்னை பார்த்த உற்சாகத்தில் பலரும் அழுகிறார்கள். சிலர் என் உருவத்தை பச்சை குத்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கும் அழுகை வருகிறது. என்னை அழவைக்கும் அளவுக்கு ரசிகர்களின் அன்பு இருப்பதை பார்க்கும்போது புல்லரிக்கிறது", என்றார்.

# முதல் வாரத்தில் ரூ.50 கோடியை கடந்த LIK... வெளியான புது அப்டேட்!






நடிகை பிரியங்கா மோகனுக்கு தற்போது 31 வயதாகிறது. தமிழ், தெலுங்கில் முக்கிய ஹீரோயினாக வலம் வருகிறார் அவர். ப்ரியங்காவுக்கு அதிக அளவில் ரசிகர்களும் இருக்கிறார்கள். சமீபத்தில் அவர் நடித்த Made in Korea படம் ரிலீஸ் ஆகி இருந்தது. அதில் தமிழ்நாட்டில் இருந்து தென் கொரியாவுக்கு செல்லும் பெண்ணாக அவர் நடித்து இருந்தார்.தற்போது பிரியங்கா சேலையில் கியூட் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.

இயக்குநர் விக்னேஷ் சிவன் மற்றும் பிரதீப் ரங்கநாதன் கூட்டணியில் உருவான திரைப்படம் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கொம்பனி). இந்தப் படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார்.

இந்தப் படத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் எஸ்.ஜே. சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இந்தப் படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

LIK திரைப்படத்தின் ரிலீஸ் தேதி பலமுறை மாற்றப்பட்ட நிலையில், கடந்த ஏப்ரல் 10-ஆம் தேதி இந்தப் படம் உலகளவில் வெளியானது. தமிழ்நாட்டில் 'LIK' படத்தின் முதல் நாள் வசூல் 7.2 கோடி என பட தயாரிப்பு நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு இருந்தது. இந்த நிலையில், LIK திரைப்படம் வெளியாகி முதல் வாரத்தில் மட்டும் ரூ. 54.3 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு மற்றொரு போஸ்டர் வெளியிட்டுள்ளது.



# 15 நாட்களில் ரூ.100 கோடி வசூலித்த வாழ 2.

மலையாளத்தில் கடந்த 2024-ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வெற்றி பெற்ற திரைப்படம் 'வாழ'. இந்தப் படத்தை பிரபல இயக்குநரும், தயாரிப்பாளருமான விபின் தாஸ் தயாரித்திருந்தார். இவர் இதற்கு முன்னதாக "ஜெய ஜெய ஜெய ஜெய ஹே", "குருவாயூர் அம்பல நடையில்" உள்ளிட்ட படங்களை இயக்கி இருந்தார்.

சவின் இயக்கிய 'வாழ' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இந்த் படத்தின் இரண்டாம் பாகத்தை இதே இயக்குநர் இயக்கினார். ஏற்கனவே முதல் பாகம் வெற்றி பெற்ற நிலையில், இந்தப் படத்தின் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. இப்படத்திற்கு 'வாழ 2' எனப் பெயரிடப்பட்டு கடந்த ஏப்ரல் 2-ஆம் தேதி வெளியானது.

பள்ளிகால கதையாக உருவான இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் நெகிழ்ச்சிப் படமாக அமைந்ததால் இந்தாண்டின் வெற்றிப்படங்களில் ஒன்றாக மாறியது. இந்த நிலையில், 'வாழ 2' கேரளத்தில் மட்டுமே ரூ.100 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. உலகளவில் இந்தப் படம் ரூ.200 கோடி வசூலித்துள்ளது.

இந்தப் படத்தை தமிழ் மற்றும் தெலுங்கில் டப்பிங் செய்து வெளியிடத் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதனால், விரைவிலேயே தமிழிலும் இப்படம் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.







# 'இருமுகன்' இயக்குநருடன் மீண்டும் இணையும் விக்ரம் - 'சீயான் 63' அறிவிப்பு!

நடிகர் விக்ரம் நடிக்கும் 63வது திரைப்படத்தின் அறிவிப்பு வீடியோவை அவரது பிறந்தநாளை முன்னிட்டு படக்குழு வெளியிட்டுள்ளது.

கடந்தாண்டு வெளியான வீர தீர சூரன் படத்திற்கு பிறகு, விக்ரமின் அடுத்தப் படம் தொடர்பான அப்டேட்டிற்கு ரசிகர்கள் காத்திருந்தனர். இந்நிலையில் இருமுகன் இயக்குநர் ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்க உள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

சத்திய ஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது. இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இப்படத்தின் அறிவிப்புடன் ஒரு சிறப்பு டீசரும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விக்ரம் ஒரு சமையல்காரராக மர்மமான பின்னணியைக் கொண்ட கதாபாத்திரத்தில் நடிப்பது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக, இயக்குநர் போடி கே. ராஜ்குமார் இயக்கத்தில் 'சீயான் 63' உருவாக இருப்பதாகச் செய்திகள் வந்தன. ஆனால், தற்போது ஆனந்த் சங்கர் இயக்கும் படமே விக்ரமின் 63-வது படமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.







**சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்!**

அறுசீர் மண்டிலம்.

தத்துவ ஞானி இவரன்றோ
தங்கப்பே ராசான்
இவரன்றோ வித்தகத்
தலைவர் இவரன்றோ
வீறுடைத் தலைவர்
இவரன்றோ!
மொத்தமாய் ஆளுமை
கொண்டவராம்
முழுமன ஆசான்
பணியினராம் நத்திடும் தீமை
விலக்கியவர் நாளுமே மக்கள்
தலைவரிவர்!

குடியரசுத் தலைவர்
பதவிகண்டார் கூர்மையாய்
நன்மை பலகண்டார்
அடிமையாம் தனத்தை
ஒட்டியவர் அன்பினால்
திட்டம் தீட்டியவர்!
கடவுளின் படைப்பு
மாந்தரென்றார் கால்போன
போக்கில் போகாதே
திடமனமாய்
இராதா கிருஷ்ணர்தான்
தேர்ந்தவர்
சொன்னார்
கேட்போமே!



**முனைவர் இராம. வேதநாயகம்.**



1. பறவை கூட்டில் கல்
எறிந்தால் பறவைகள்
ஓடிவிடும் தேன் கூட்டில்
கல் எறிந்தால்
நீ தான் ஓட வேண்டும்

2. வாய்ப்புகளையும்
வார்த்தைகளையும்
சரியாக பயன்படுத்தினால்
வாழ்க்கையில்
முன்னேறலாம்

3. உலகில் பாவம்
செய்யாதவர்கள் கவலை
இல்லாத மனிதர்கள்
இரண்டு பேர் தான்
ஒருவர் கருவறையில்
மற்றவர் கல்லறையில்

3. இறைவனுக்கு
படைத்தால் நீ பக்தன்
இல்லாதவனுக்கு படைத்தால்
நீயே இறைவன்

4. தட்டிப் பறிப்பவன்
வாழ்ந்ததில்லை
விட்டுக் கொடுத்தவன்
வீழ்ந்ததில்லை

5. கற்றவன் கற்றதை
வைத்தே காண்கிறான்
கல்லாதவன்
காண்பதெல்லாம்
கற்க்கிறான்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



**மர நிழலே வணக்கம்"**

மண்ணின் மூச்சை
மெல்லச் சுவாசித்து...

மழைத்துளி வரலாற்றை
மரபாய் தாங்கும் மரமே...

உன் நிழல் என்பதோர்
கருணைக் கேடயம்!

வெயில் வெறியாய்
கொளுத்தும் போது

கானல் வெளியாய்க்
கருக்கும் பாதையில்

வெக்கையில் தவிக்கும்
பயணிகளின் காவலனே!

சுமையிறக்கிச் சுவர்சாயும்
சுமையாளியின்
சொர்க்கவாசலே!

காலணியில்லாக்குழந்தையின்
காலடிக்கு குளிர் ஒத்தடமே!

பாடும் பறவைகளின்
பாசறை பனுவலே!

சிட்டுகளின் சிறகுகளின்
சிங்கார உலகமே!

வீடில்லா ஏழையை
விரைந்தணைக்கும் கரமே!

விவசாயியின் வியர்வைக்குள்
விதையாகும் நம்பிக்கையே!

மழைக்காரணியே நாளைய
அறுவடையின் ஆசீர்வாதமே!

யாரிடத்தும் எதையும்
எதிர்பாரா விருட்சமே!

உன்னிழல் உயிர்களுக்கு
மொழியற்ற அன்பு!

நீதரும்
நிழல்தேசம்
இறைவனின்
கையெழுத்து!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

1.ஏதாவது வரம் வேண்டும் என்று கேட்டுக் கண்டே இருக்கிறோம்
நாம் இந்த பூமியில் வாழ்வதே ஒரு வரம் தானே

2. தாயம் விழுந்தால்தான் ஆடவே ஆரம்பிக்க முடியும்
காயம் பட்டால் தன் வாழவே ஆரம்பிக்க முடியும்

3. சமாளிக்க தெரிந்தவன் தைரியசாலி என்றால்
அதை நம்புவது போல் அமைதியாக இருப்பவன் புத்திசாலி

4. அடுத்தவனுக்கு கிடைத்து வட்டது நமக்கு கிடைக்கவில்லை
என்று பொறாமைப்படாத ஒரே விஷயம் மரணம்

5. பார்வை இல்லாதவன் கையில் கிடைத்த ஓவியமும்
பாசமில்லாத கணவனின் கையில் கிடைத்த மனைவியும் ஒன்றுதான்

**நடேஷ் கன்னா** , கல்லிடைக்குறிச்சி




**பனிமலர்**

உன் தரிசனம்
எனக்குக்கோடையிலும்(கூடப்)
பனிமலர்!
தேர்தல் கால
வாக்குறுதிகள் போல்
நான் ஆயிரம் பொய்கள்
சொன்னாலும்
அத்தனை(யை)யும்
அலட்சியப்படுத்தி
என்னை ஆதரிப்பவள் நீ!
உன் ஒவ்வொரு
புன்னகையிலும்
தமிழ்நாடு இ செய்தித்தாளின்
புதுக்கவிதைகள் பதிந்து
கிடக்கிறது!
நீ மௌனமாகப்
பார்க்கும்
நேரங்களைக் கூட
வீணாக்காமல் உன்
கண்களிலிருந்து
கவிதைகளைச்
சேகரிக்கிறது
என் கா த ல்!
உன் கண்களில் காந்தம்
இதழ்களில் மின்சாரம்
என் மடியில் நீ
இத ய த் தி ல் இ ரு ப் பிட ம்
நாம் அன்பையும் ஆற்றலையும்
மு த் த ங் க ளை யு ம்
பரவசங்களையும் பரிமாறிக்
கொள்ள இது போதுமே!
எந்தப் பருவ காலத்திலும்
நீ கொஞ்சமும் மாறாமல்
பனிமலராகவே உன்னை(யே)
எனக்குப்பரிமாறுவது என்
கா த ல் பெற்ற பெரும்பேறு!
ஆகவே அன்பே ஒவ்வொரு
நொடியும் உன்னை
எண்ணி
உன்னிடம் வாழ்ந்து
காட்டுகிறது என்
கா த ல்!



**முத்து ஆனந்த்**
வேலூர்



1. பிரார்த்தனை செய்யும்
உதடுகளை விட உதவி
செய்யும் கைகள் சிறந்தது

2. வாழ்க்கையில் நம்பியவர்
நாமம் போட்ட பிறகுதான்
பட்டையின் அருமை
தெரிகிறது

3. மனிதன் அமைத்த
சாலையில் வேகத்தடைகள்
இருக்கும் போது
இறைவன் அமைத்த
வாழ்க்கை பாதையில்
வேகக்கடைகள் இருக்காதா
4. உன் திறமைக்கு தீனி
போடு இந்த உலகமே உனக்கு
தலை வணங்கும்

5. தலையில் அதிக பாரம்
வைத்து நடப்பவர்களை விட
மனதில் அதிக பரம் வைத்து
நடப்பவர்களை இங்கு அதிகம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



**சின்னக் கலைவாணர்.!**

சிரிக்க வைத்தாய்.. சிந்திக்க வைத்தாய்..
அழ வைத்து சென்று விட்டாய்.!

குலுங்க வைத்தாய்.. மகிழ வைத்தாய்..
குலுங்கி அழ வைத்து ஏன் சென்றுவிட்டாய்.?

பகுத்தறிவை படத்தில் வைத்தாய்.. பார்வையிலே பாசம்
வைத்தாய்.. சகத்தினிலே மூச்சடங்கி சாய்த்து விட்டாய்.!

அப்துல் கலாம் ஐயாவின் மனதினிலே இடம் பிடித்தாய்..
உலகமெல்லாம் தமிழர் மனம் நடம் புரிந்தாய்.!

ஆபாசக் கலப்பின்றி அரங்கத்தை அதிர வைத்தாய்.! அழகான
தமிழாலே.. அனைவரையும் மகிழ வைத்தாய் !

கலைவாணர் படம் பார்க்க இயலாத எங்களுக்கு.. சின்னக்
கலைவாணராயிருந்து சிந்தனையைத் தூண்டிவிட்டாய்.!

அன்பு மகன் பிரிவாலே ஆழ்ந்து நீ அழுதுகொண்டே..
அன்றாடம் ரசிகர்களை ஐயா நீ.. சிரிக்க வைத்தாய்.!

அழுகின்ற இறைவனுக்கு சிரிப்பூட்டச் சென்றாயோ? திரையுலகம்
மறந்து விட்டு மறையுலகம் சென்றாயோ?

விவேக்கு என்ற உன்னை நினைத்தாலே சிரிப்பு வரும்..
சிந்திக்கும் மாந்தனுக்கு பகுத்தறிவு பூத்து வரும்.!

எங்கே நீ சென்றாலும் அந்த இடம் மகிழ்ச்சி பெறும்.. இன்று
எங்கே நீ சென்றாயோ? என் மனதில் கேள்வி எழும்.!

**வே.கல்யாண்குமார்.**

# "நூல் விமர்சனம்"

"எப்படியாவது சாவியைத் தொலைத்தாக வேண்டும்."
(தன்முனைக் கவிதைகளின் பகுப்பாய்வு)
பகுப்பாய்வாளர்: "முனைவர் வே.புகழேந்தி."
இணை பகுப்பாய்வாளர்கள்: முனைவர் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம், கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி.
முதல் பதிப்பு :ஆகஸ்ட் – 2023.
பக்கம் : 128.
ஒளியச்சு : வந்தை முருகுபாரதி
அச்சாக்கம் : எம்.வி.ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை.
வெளியீடு : அகநி வெளியீடு.
எண் : 3, பாடசாலை வீதி, அம்மையப்பட்டு, வந்தவாசி – 604 408.
திருவண்ணாமலை மாவட்டம்.
பேசி : 94443 60421
மின்னஞ்சல் : akaniveliyeedu@gmail.com
விலை: 150/–

தமிழ் ஹைக்கூ உலக அரங்கில் அறிமுகமாக துணை நின்றவை முனைவர் வே.புகழேந்தியின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் என்பதை அனைவரும் அறிவர். முனைவர் வே.புகழேந்தியின் சிந்தனைத் தளத்தில் தன்முனைக் கவிதைகள் ஏற்படுத்திய சலனத்தை மிகச் சிறப்பான வரிகளால் நேர்த்தியாகப் பகுப்பாய்வு செய்துள்ளார். இந்நூலின் பகுப்பாய்வாளர் முனைவர் வே.புகழேந்தி, இணை பகுப்பாய்வாளர்களான கவிஞர். முனைவர் கா.நா. கல்யாணசுந்தரம் மற்றும் கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமிக்கும் எனது அன்பின் கனிந்த வாழ்த்துகள்.

புத்தம் புதுத்தளிராய் தன்முனைக் கவிதைகள் நூலாகி வரும் இத்தருணத்தில் இந்தப் பகுப்பாய்வுநூல். கவிஞர்களுக்கு இன்னும் தெளிவையும் புரிதலையும் தரகூடும். செறிந்த மொழியும் சமுதாய அக்கறையும் மிளிரும் இந்த தன்முனைக் கவிதைகளை எழுதிய கவிஞர்கள் அனைவருக்கும் மனம் நெகிழ்ந்த பாராட்டும் வாழ்த்தும்.

– மு . மு ரு கே ஷ் , முதுநிலை உதவி ஆசிரியர், 'இந்து தமிழ் திசை' நாளிதழ். சென்னை - 600 002.

1.கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம். அடைமழைப் பொழியினும், கோடை வெயில் எரித்திடினும், வாடைக்காற்று வீசிடினும், சோடைப் போகா இலக்கியச்சேவை புரிவதில் சற்றும்சளைத்தவரல்ல... கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்.

*Even with the broken wings, 'Hope' came in the form of the fallen feathers! -Umm Hawa* உதறிவிடுதல் இலகு; பற்றிக்கொள்ள போராட்டம் இங்கே. -ஸு-மைஹா இலையுதிரும் காலங்களில் சில இறகுகளும் தான் உதிர்கின்றன. உதிரும் இறகுகள் வளிமண்டலத்தை இறுதியாய் தரிசித்த அனுபவத்தை நிலத்துடன், உருண்டு புரண்டு பகிர்கையில் உருக்குலைகின்றன.

பூமியைத் தழுவிடும் காலங்களில் காற்று, "பறக்கும் பயிற்சி' அளிக்க, மழை, 'நீந்தும் வகுப்பினை' நடத்த, பறவையின் நிறத்தை மறக்கின்றன.

'ஃபெதர்கள்' என்னும் பதர்கள், நேசரனின் கதிர்களை நேசித்தாலொழிய வாசம் புரிந்திட வழியில்லை என்றறிந்து காணாமல்போகும் கதிரவனைக் கண்களால் தேடுகின்றன. புறாக்கள் தொன்மையானவை; இறகுகள் மென்மையானவை. கோபுரத்து புறாக்கள் கோயில் மணி ஓசையில் கலைந்து, காற்றோடு கலந்து, பறந்து மீண்டும் வந்தமரும், பிரிந்து சென்ற இடத்திலேயே. தப்பித் தவறி உதிரும் அவற்றின் இறகுகள் தனிமையில் வாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

'ஆகாய'த்தின் தொடர்பு அறுபட்டவுடன் 'நிலம் - நீர் - காற்று' டன் நெருங்கி வாழும் பட்சத்தில் அப்துல்கலாமை நினைவுகூறும் இந்த 'அக்கினி' சி(இ)றகுகள்.' ஐயா கவிச்சுடர் கல்யாணசுந்தரம் அவர்களின் கவிதையும், மொழியாக்கங்களும் இதோ; 'பனி மூடிய கோபுரத்தில் படபடக்கும் புறாக்கள் உதிரும் இறகுகள் தேடுகின்றன உதிக்கும் சூரியக் கதிர்களை.' -முனைவர் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்.

*Fluttering pigeons on-the-mist-covered tower. Deciduous feathers search rays of rising - sun. -Dr. Kavichudar K.N.Kalyanasundaram* @@@@@@.

2.கொள்ளிடம் கவிச்சாரல் காமராஜ்.


வானொலி நிகழ்ச்சிகளின் காதலன் இவர். இலக்கியம் முதல் இன்னிசை வரை. மேடைப்பேச்சு முதல் மிமிக்ரி வரை ஒரு கை பார்ப்பவர். தென்கச்சி சாமிநாதன் முதல் கே.எஸ்.ராஜா வரை அறிந்தவர் கொள்ளிடம் கவிச்சாரல் காமராஜ். *'Let food be thy medicine and medicine be thy food.' -Hippocrates* 'செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்.' - திருக்குறள் - 412 (அதிகாரம்: கேள்வி) நாவலரோ, நற்பாவலரோ நாவை அடக்கி ஆண்டால் நலம் பல பெற்று, நானிலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடலாமே? பாமரனோ, பரமாத்மனோ தேமதுரத் தமிழ்ப் பண்டிதனோ நாவை அடக்கி உண்டால் நோய் நொடியின்றி வாழ்ந்திடலாமே? 'உப்பில்லா பண்டம் 'அற்பம்' சேர்ந்திடும் குப்பையிலே' ஒப்பில்லா அக்கால பொன்மொழியது. 'உப்பில்லா பண்டம் 'அமிர்தம்' நோயற்ற வாழ்க்கையிலே' தப்பில்லா தற்காலப் புதுமொழியிது. நாலுவிதமாகப் பேசும் வரம்பில்லா நாக்கு, நாலா வகைப் பதார்த்தங்களையும் அசைபோடும். கொள்ளிடம் கவிஞர், கவிச்சாரல் காமராஜ் அவர்கள், தமது தன்முனைக் கவிதையின் வாயிலாக ஆரோக்கிய மனித வாழ்வின் தத்துவம் ஒன்றை அழகாக எடுத்துரைத்துள்ளார். அவரது கவிதையும் அதன் ஆங்கில - கன்னட மொழியாக்கங்களும் இதோ:- 'என்றும் கர்வம் கொண்டதில்லை உப்புக்கல் மனித நாவின் பலம், பலவீனங்களை அறிந்திருந்தும்.' -கொள்ளிடம் கவிச்சாரல் காமராஜ்.


*Crystal salt is not arragant for being aware of Strength and weakness of human tongue. -Kollidam Kavicharal Kamaraj.* @@@@@@.

இந்த இரு கவிஞர்களின் தன்முனைக் கவிதைப் பகுப்பாய்வினைப் போன்று மொத்தம் 55 கவிஞர்களின் தன்முனைக் கவிதைப் பகுப்பாய்வும் அவைகளின் ஆங்கிலக் கன்னட மொழியாக்கங்களும் மிகச் சிறப்பாக இக் கவித் தொகுப்பு நூலில் அடங்கியுள்ளது.

மொத்தத்தில் தமிழ்கூறு நல்லுலகிற்குக் கிடைத்த இலக்கிய அறுசுவை விருந்து இக் கவித்தொகுப்புத் திறனாய்வு நூலெனச் சொன்னால் அது மிகையாகாது. இந்நூலில் பங்கு பெற்ற கவிஞர்களுக்கும் தன்முனைப் பகுப்பாய்வாளர்களுக்கும் இதனை நன்முறையில் அச்சிட்டு வெளியிட்ட "அகநி"வெளியீட்டு நிறுவனத்திற்கும் நன்றி கலந்த என் இதயப்பூர்வ நல்வாழ்த்துகள்..!

-கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ், திருச்சிராப் பள்ளி - 621 216.




**காலை மகத்துவம் ...**

நானிலம் போற்றும்
நாளின் நல்ல தலைமகன்...
நலம் தழைக்க நனி சிறக்க
வழி காட்டும் நாற்றங்கால்...
தினப் பயிரின் வேராகி
நிலைத்து தெவிட்டா
தேனமுதக் கனிகள் பொழியும்
பசுந்தோட்டம்...வாழ்க்கை
திசையைத்தீர்மானிக்கும்
திட்டப் பேராளன்...
சிந்தனைத் தேரை சங்கடக்
கண்ணீர் சிந்தாமல் சீராய்
இழுத்து செம்மை நிலைக்குக்
கொண்டு வர செழித்துக்
குவியும் ஜனசமுத்திரம்...
தொடக்கமே தொடர்
வெற்றிக்கு பத்திரப்பதிவு
காட்டும் பிரம்மாண்டம்...
பிரளயத்தையே அடிபணிய
வைக்கும் பிரம்ம முகூர்த்தம்...
அதிகாலை காற்று
அதிநேர்த்தியுடன்
அதிசயிக்க வைக்கும்
அதிசக்தி சுரங்கம்...
பூஜ்யமே ஆனாலும்
பூரணமாய் பூக்கும்
புல்லரிப்பு மந்திரம்...
அன்றாட நாளின்
ஆக்கம் ஊட்டும்
ஆச்சரிய காமதேனு...
காலைப் பொழுதின்
கணத்தையும் கனமாக்கும்
கலையைக் கற்றவன்
காலம் முழுவதும் கதிரவனின்
கம்பீர லயத்தில்
ஜொலிப்பான்– ஜெயிப்பான்...
ஆன்றோராம் நம் முன்னோர்
அத்தியாவசிய அதிகாலைக்
கடமைகளாய் ஆறாய்
அடுக்கி ஆற்றுப் படுத்தினர்...
படுக்கையில் இருந்து
பாய்ந்து எழாமல்
பக்குவ அமைதியில்
நிமிர்ந்து எழுந்தால்
நாளெல்லாம்
நன்மையாம்...
துயில் நீங்கி விழித்ததும்
அலைபேசி தொலைக்காட்சி
பாராமல் ஆதவன் நோக்கி
வணங்கி நின்றால்
வாழ்நாள் முழுவதும்
வளம் நலம் கூடுமாம்...
முத்தான மூன்றாம் கடமை
ஒன்றுண்டு... அலைபாயும்
மனத்தை அற்புத அமைதியில்
ஊன்ற வைத்து ஒழுங்கு
படுத்தினால் உற்சாகம்
ஊற்றாய் பற்றி உயர்வின்
உச்சம் கூட்டுமாம்...
இரவு விடுதலையான
இளங்காலைப் பொழுது
வாழ்வின் இலக்கை நினைவுப்
படுத்தும் இனிப்பு நிறைந்த
இதமான வேளை அன்றோ?
அடுத்து ஆற்ற வேண்டிய
அரும்பணி என்ன தெரியுமா?
மனித குலத்தில் மண்டிப்போன
இயல்பான எதிர் வினைகளாம்
கோபம், எரிச்சல் ,
பொறாமை போன்ற பொல்லா
உணர்வுகளை புரிதல்
புன்னகையில் மகத்துவ
நெறியில் உடை மாற்றி
மடைமாற்றி கட்டுப் படுத்தி
காரியத்தில் இறங்கினால்
கனகச்சித சிகரம்
கடைசிவரை கைகூடும்...
இறுதியாய் இன்னொன்று...
ஒவ்வொரு நாளும் தவறாமல்
ஒருமித்த மனக்குவிப்பில்
நெஞ்சம் நெகிழ்ந்து
நன்றி உணர்வுடன்
நாளைத் தொடங்கினால்
ஞானம் விரியும் நல்லவை
பெருகும் அல்லவை அகலும்
நானிலமே திரண்டு வந்து
தலை வணங்கும்.
காலையைப்
போற்றுவோம்
காலையைப்
போற்றுவோம்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்





## உல்லாச வாழ்வு உமக்கு உறுதியாகும்!

எங்களது உடை வண்ணம்
வேறு, வேறு, எண்ணங்களும்
அவ்வாறே அறிந்து
கொள்வீர்! பெண்களின்
பெரும்பான்மை உணர்ந்து
இனிமேல், பெருமையுடன்
அவர்களையும் வாழச்
செய்வீர்!

வெவ்வேறு உறவின்முறை
உங்கள் வாழ்வில்,
உலவி வரும் எங்களையும்
மதிக்கும் மாண்பை,
உண்மையிலே நீங்களெலாம்
பெற்றிடும் நாளில்,
உல்லாச
வாழ்வு
உமக்கு
உறுதியாகும்!



**முனைவர் என்.பத்ரி,**
ஆதம்பாக்கம்



## அவள்

வளைந்து செல்லும் பாதை
அதை நெருங்கநெருங்க
நேராவது போல
புரிபடாமல்போன
உன்நேசம்
அதை
நெருங்கநெருங்க
விளங்குகிறது.



**கே. பி. ஜனார்த்தனன்**



## கொலுசொலி!

பாதி கவிதையை
எழுதி முடித்தேன்...
மீதி வரிகளுக்கு
என் செய்வதென்று
யோசித்தேன்...
தெருவினில் நீ நடந்து
வரும் கொலுசொலி... என்
கவிதையை முழுவதுமாய்
எழுதி முற்றுப்பெற
வைத்தது.!

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## இறப்புக்கு பின் !

உயிரோடு இருக்கும்
நிலையில் ஒருவரால்
உணரமுடியாதவை...
இறந்தபின்....

குளுமை அறிந்திராத உடல்
ஐஸ் பெட்டிக்குள்...


மாலை, மலர்வளையம் என
குவியல்கள்...

நாம் பார்த்திராத
சொந்தங்கள் கூட
" என்னை விட்டு
போய்ட்டியே ராசா... !'
என தலையில் அடித்து
அழும் காட்சி !

சரவெடி...

செல்லும் பாதையெங்கும்
வீசப்படும் மலர்கள்...

இக்காட்சிகள் எல்லாம்
நம்மைச் சுற்றி
நடந்தாலும்
நாம்...
ஒன்றுமறியா
பிணமாய் !



**எம்.பி. தினேஷ்**
கோவை

கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்
என்பது ஆன்றோரின்
வாக்கு....!!!

பிராணவத்துள்
ஒளி என்பார் பேசாத
பிரமம் என்பார்
அடிமுடியில்லாதவன்
என்பார்...!!

ஊனக் கண்களுக்கு
தெரியாதவன் ஞான
கண்களுக்கு தெரிபவன்..!!

ஆனால்... நம் உள்ளத்தில்
இருந்து கொண்டே
நம்மை ஆட்டி வைத்து
காத்து அருள்புரிவான்...!!

## நம்பிக்கை

போராடிக் கொண்டே இரு...
உன்னை பிறர் பார்க்கப்
போராடாதே ... உன்னை
பார்த்த பலர் போராட
வேண்டும் ... அதுவரை
போராடிக் கொண்டே இரு.

ஓடிக் கொண்டே இரு...
உன்னுடன் ஓடி வருபவர்களை
பார்க்க ஆசை படாதே...
உன்னுடைய இலக்கை
அடைந்த போது திரும்பி
பார்... அங்கே கிடைக்கும்
உன் ஓட்டத்திற்கான விடை.

ஆட்டு மந்தையில் ஆடாக
இருந்து விடாதே..
ஒரு ஜான் வயிற்றுக்காக
உன்னை விற்று விடாதே...
பாறையின் இடுக்கில் விழுந்த
எச்சத்தில் ஆலமரமே
வரும் பட்சத்தில்.. உன்னை
வெல்ல நிச்சயமாக இந்த
உலகத்தில் ஆளில்லை..

என்ற நம்பிக்கையில் வாழ
கற்றுக்கொள். சிறிது
கடினமாக இருந்தாலும்..
பறவையை போல மேடு
பள்ளம் இல்லாத வானத்தில்
வட்டமிட்டு... உன்
வாழக்கையை சிறகடித்து
பறந்து செல்.

## கடவுளைத் தேடி

காகம் கூட கரைந்து
உண்ணும் கருணை
நமக்கேது! நாகம் போன்று
விஷமிருக்கும் நெஞ்சினில்
வேறேது ! யாகம் செய்வார்
யாத்திரைசெய்வார்
யாருக்கும் உதவாது !
சோகப் படுவோர் சுகப்பட
கண்டால் கடவுளும் வேறேது!

வெற்றி காணும்
நிலத்தில் விளைந்த
நெற்கதிர்கள் முற்றியதும்
தலை கவிழும் மறக்காமல்
மண்ணை நோக்கும்
அதுபோல

முதிர்வும், பக்குவமும்
அடைந்த மனிதரின் உள்ளம்
என்றும் அடக்கத்துடன்
பணிந்து அமைதியாய் காணும்
எளிமையாய் காட்சி தரும்

அன்போடு அடக்கமும்,
அச்சமின்மையும், சமூக
நலனும் இருக்கும்
மனதில், நல்ல பண்பு
நிறைந்திருக்கும்—அது
பணிவு தரும், வெற்றி காணும்

விட்டு விட்டு துடிக்கும் என்
இதயத்தில் விடாமல் துடிக்கும்
உன் நினைவுகள்

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



## அடுப்பூதும் அம்மா.!

அடுப்பூதும் அம்மாவுக்குப் படிப்பு இல்லை.!
அப்படித்தான் வளர்ப்பு.! அடுப்படிதான் படிப்பு.!

எரிவாயு அடுப்பறியாள் மின்சார அடுப்பறியாள்
விறகு அடுப்பினிலே.. வெந்து தணிந்தவளாம்!
குமுட்டி அடுப்பு முன்.. குனிந்து சமைத்தவளாம்.. கரி
அடுப்போடு போராட்டம் நடத்தியவளாம்.!

ஊது குழலில் ஊதி ஊதி.. மூச்சு வாங்கும் கண்கள் எரியும்..
சாதம் வடித்தவளாம்.!

காய்கறிகள் வெட்டி.. காப்பிக்கடை வைத்து இட்டலிக்குச்
சட்டினிக்கு ஆட்டுக்கல்லில் அரைத்த மாவாய் போன
கனவுக்காரி அவள்.! கிணத்தடியில் நீர் இறைத்தே..
மனத்தடியில் இளைப்பாறியவள்..
துணி துவத்துத் துணி துவைத்து கந்தையாகிப் போனவள்..!

வீடுதான் உலகம்.. பிள்ளைகளே வாழ்வு.. கணவனோ
எசமானன் உறவுகளோ தூரத்தில் உயிர் இருக்கும் தாரத்தில்..
குடும்பம் நடந்தது ஆ.. அது அந்த காலம்.!

ஒட்டுக் குடியில் ஓர் குடும்பத் தலைவி.. கட்டுப் பெட்டியாய்..
வெளிவுலகம் அறியாமலே.. தொட்டுத் தாலிக் கட்டியவன்
கட்டளைக்குச் சேவகியாய்.. வாழ்ந்து முடித்தவளாம்..!

பிள்ளை தருவான் என்று.. பெண் சோறு போடுமென்று.
எப்போதும் எதிர்பாராத இலகிய மனசுடையாள்!
தேய்ந்து போன பின்பும் மணக்கும் சந்தனமாய்.. ஓய்ந்து போன
பின்பும் ஒலிக்கின்ற மணியோசையென.. ஆசைக் கனவுகளை
அர்ப்பணித்த அம்மா.. அதோ.. ஊது குழல் எடுத்து அடுப்பை
ஊதுகிறாள்.! அடுப்படியில் அம்மா.. படிப்பில்லா அம்மா..
பாடமாகிறாள்.! வாழ்க்கை ஓடமாகிறாள்!


**வே.கல்யாண்குமார்.**




வாக்கொன்று எனக்குளது
என் வாக்கு எனக்குளது
யாருக்கு தருவது
நினைத்தாலே குழப்பம்
நடப்பது எதுவென்றாயினும்
வீட்டிற்கும் நாட்டிற்கும்
நன்மை செய்தல் வேண்டும்
நிற்பதிலே நல்லவன் ஒருவன்
மற்றொருவனோ வல்லவன்
எனக்கு தெரிந்தவன் ஒருவன்
ஒருவன் எனக்கு உறவு
உள்ளது ஒரு ஓட்டு
அந்த ஒன்றை யாருக்கு
தருவது ? நல்லவன்,
வல்லவன் எனக்கா
இல்லை எல்லோருக்குமா ?
அவர்கள் சார்ந்த கட்சி ?
நாட்டின் நலம் மக்கள்
நலம் காக்கும்
கட்சியா? இல்லை
கட்சியின் நலமா?
செய்வது இதுவென
அறிந்து அதில் கூடும்
மக்கள் நலனும்
மக்கள் அதில் காணும்
மகிழ்ச்சி அதனால்
கூடும் நாட்டின் வளர்ச்சி
என ஆய்ந்து அறிந்து
செய்வதெதுவும் நன்மை
என்றாகவும் நன்மை
என்றாகிடும் எதையும்
மறு சிந்தனைகள் ஏதுமின்றி
நாட்டிற்கு நலன்
பயக்குமெனில் செய்வதில்
உறுதி வேண்டும்
நாடென்ன செய்தது நமக்கு
என்று கேட்டுமுன்னே
நாமென்ன செய்தோம்
அதற்கு ? ஒவ்வொருவரும்
மனதில் கேட்டு நாட்டின் நலம்
காப்பார் யாரென கண்டு
என் வாக்கு உனக்கே
என்று வாக்களிப்போம்
வாருங்கள் வெல்லட்டும்
ஜன நாயகம்



**ஓம் குமார் P N**





## மனிதநேயம் வளர்

காக்கையைப்போல
ஒற்றுமையாய் இரு,
மயிலைப்போல ஆடப்பழகு,
குயிலைப்போலபாடப்பழகு,
நாயைப்போலநன்றியோடு
இரு, கிளியைப்போல
கொஞ்சும்மொழி பேசு,
எறும்பைப்போல
சேமிக்க பழகு, பிறகு
குழந்தைகளைப்பற்றி
கேட்டால் இரண்டு
சிங்கத்தைபெத்திருக்கம்ல~என
அதற்கும் விலங்குகள்தான்
உவமையாகிறது,,,
விலங்குகளோடு
ஒப்பிட்டதால்தான் பல
விபரீதம் நிகழ்கிறது,,,
அப்துல்கலாம் போல
அறிவியலில்
முன்னேறு,
பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம் போல
பாமரனை படம்பிடி
காமராசரைப்போல
கடமையை தொலைநோக்
கோடு செய், ஜீவிக்க
வழியில்லாவிட்டாலும்
ஜீவாவைப்போலகம்பிரமாய்
பொதுசேவைசெய்,பட்டினியாய்
கிடந்தாலும்பாரதியைப்போல
குறிக்கோளாய் இரு,
அன்னைதெரசாவைப்போல
தன்னலமற்று சேவைசெய்,
பகுத்தறிந்து பார்ப்பதில்
பெரியார்போல,,,இப்படி
மனிதர்களோடு ஒப்பிடு
மனிதானாக வளர்க்க
பழகு
அப்போதுதான்
மனிதநேயம் வளரும்,



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## வேதாந்த இளைஞன்

வேலை இல்லை என
வேதாந்தம் பேசுபவனே
நீ எங்கே தேடினாய்
உனக்காக வேலையை
அலுவலகத்திலா? இல்லை
அழகுப் பெண்களின்
முகத்தில்

இளைஞனே வேலைக்கான
விண்ணப்பத்தை நீ
எங்கே தேடினாய் வேலை
வாய்ப்பகத்திலா? இல்லை
சேலை இடைவெளிகளில்

சகோதரனே நீ லட்சியமாக
எதனை கொண்டிருந்தாய்?
உயர்ந்த நிறுவனத்தில்
உன்னதமான பதவியையா?
இல்லை உல்லாசமான
பெண்ணின்
உள்ளத்தில் ஒரு இடம்

வேலை
இல்லை என
வேதாந்தம்
பேசுபவனே
உன்
வேலையை
காதலில்
தேடாதே அது
உனக்கு கோடியை தராது
தாடியை தான் தரும்.



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

## இலையின் நிலை

இலை விரிய கமலம் பூக்க
மலரைப்
பொதிய
இலையை
பறிக்காமல்
ஆகுமா?



**சசிகலா விஸ்வநாதன்**

பஸ் ஓடும் போது
வேகமாக பயணிக்கிறது
மரங்களும் 2.சில்லறை
. கேட்டேன் . இல்லை என்று
. சிரித்தாய் . சில்லறைகளாய்
சப்தமிட்டபடி
அள்ளி
கொள்கிறேன்
மானசீகமாய்.



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

அடங்க மறுக்கிற
வார்த்தைகளின் லகானைக்
கொஞ்சம் பிடி.. அந்த
சூட்சமம் நீயே அறிவாய்.

கால் பதிக்குமிடமெல்லாம்
உற்பத்தியாகிற ப்ரியத்தின்
தலைக்காவிரி நீ.

அவிழ்த்து விட்டதும்
மடி முட்டுகிற
வார்த்தைகளை
கயிறு பிணைத்திருக்கிறாய்.

பார்வைப் பிசின்
அப்பிக் கொள்கிறது
உதற உதற விலகாமல்.

கண்களுக்கான
சொல்லகராதியை
மறுபதிப்பு செய். வணக்கம்
செல்லமாய்
அடிக்கிறாய்
உன்
விரல்களில்
மருதாணிச்
சிவப்பு.



**ரிஷபன்**

வாழ்க்கையின் அருமை
மனைவி பிரியும் போது...
பாசத்தின் அருமை
குழந்தைகள் பிரியும் போது...
நண்பனின் அருமை
பணம் இல்லாத போது...
சுகத்தின் அருமை
பொருள் இல்லாத போது...
சமூகத்தின் அருமை
மதிப்பு இல்லாத போது...
உடலின் அருமை நோய்
இல்லாத போது...
மனதின் வலிமை
சச்சரவுகள் இல்லாத போது...
எல்லாம் இழந்த பின்பும்
மாறாத அன்பு கிடைக்கும்
ஒரே இடம் தாயின்
அன்புதான். அம்மா...
அம்மா... என்றைக்கும்
நிலைக்கும், கொடுக்கும்
எதையுமே எதிர்பார்க்காமல்
இறுதிவரை அது அம்மாவின்
அன்பு, அம்மாவின்
அன்புதான்.

**டாக்டர் ஹரிஷ் குமார்**
கோவை புதூர்



## "அவளின் விழித்திரை."

கணக்கிலடங்கா
ரசிகர்களைத் தனக்கெனக்
கொண்டது வெண்திரை.

மின்னும் நட்சத்திரங்களையும்
சந்திர சூரிய தீபங்களையும்
கொண்டது வான்திரை.

கலைக்கூடத்திலுள்ளக்
கவின்மிகு சிலைகளை
மூடிமறைக்கும்
வண்ணதுணித்திரை.

பல மாயாஜால
வித்தைகளினால்
பலவீனமான ஆண்களை
ஆட்டிப்படைக்கும்
கன்னியரின் விழித்திரை..!


## "காதல் தேவதை."

முதன் முதலாக அவளைப்
பார்த்தபின் அவனுக்கு
எழுத வராத கவிதையும்
அருவியெனக் கொட்டியது.
நேற்று பசுமாட்டைக்
கண்டு பயந்தவன் இன்று
ஜல்லிக்கட்டு காளையை
அடக்கினான்.
அன்று எள்ளி
நகையாடியவர்களைக்
கண்டு சற்று தள்ளியே
நின்றவன் இன்று துள்ளி
வரும் வேலெனக் கம்பீரமாய்
எதிர்த்து நிற்கும் துணிச்சல்
மிகுந்தவனாகி விட்டான்.

எதற்கும் லாயக்கற்றவனெனப்
பெயரெடுத்த ஒருவனை
இனி எச்செயல் புரிவதற்கும்
"இவனே சிறந்தவன்"
என மாற்றிக்
காட்டினாள் ஒரு
"காதல் தேவதை."



**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,** திருச்சி



காதல் கவிதைகள் !

## காதல் !

மூன்றெழுத்து உணர்வு
மூச்சு உள்ளவரை
நினைவிருக்கும் !
கர்வம் கொள்ள வைக்கும் !
கனவுகளை வளர்க்கும் !
உடல் இங்கும் எண்ணம்
அங்கும் ! அடிக்கடி
அலைபாயும் !
அழகு கொஞ்சம் கூடும் !
அறிவு கொஞ்சம் குறையும் !
---------------------
விழிகளில் நுழைந்து
மூளையில் அவள்
சிம்மாசனம் இட்டு
அமர்ந்து விடுகிறாள் !
காதல் ரசவாதம்
தொடர்கின்றது !
கற்பனைக் காவியம்
வளர்கின்றது !
---------------------
முன்பு தேநீரை சூடாகக்
குடிக்காதவன் !
அவள் இருக்குமிடம்
இதயமல்ல மூளை
என்று தெரிந்ததும்
இப்போது தேநீரை
சூடாகவே குடிக்கிறேன் !
---------------------
காதலர்களின் கண்கள்
கொடுக்கல் வாங்கல்
நடத்துகின்றன !
யார் அதிகம் கொடுத்தது
யார் அதிகம் பெற்றது
கண்டுபிடிப்பது கடினம் !
---------------------
அவள் பேசும் சொற்களை
காதுகள் கேட்பதை விட
அவள் பேச்சால்
அசையும் உதடுகளை
கண்கள் இமைக்காமல்
கண்காணிப்பதால்
என்ன சொன்னாள்
என்பது புரியாமலே
தலை ஆட்டி விடுகிறேன்.
---------------------
காதலை அவள் உதட்டால்
உச்சரிக்காவிட்டாலும்
கண்களால் உச்சரிப்பதை
கண்கள் உணர்ந்து
விடுகின்றன !
---------------------
மறந்து விட்டேன்
அவளை என்று உதடுகள்
உச்சரித்தாலும் மூளையின்
ஒரு மூலையில் அவள்
நிரந்தரமாக !

## மறுக்கமுடியாத உண்மை

காதலில் வென்றவர்கள்
வென்றதும் காதலை
மறந்து விடுகின்றனர் .
காதலில் தோற்றவர்கள்தான்
இருவருமே இறுதி வரை
காதலை நினைக்க
மறுக்கின்றனர் .
மறுக்கமுடியாத உண்மை
மறக்க முடியாத உண்மை

## நினைவில் உள்ளது

எத்தனையோ வருடங்களுக்கு
முன் நடந்த நம் சந்திப்பு
சில நிமிடங்களுக்கு
முன் நடந்தது போல
இன்னும் என் நினைவில்
உள்ளது . பசுமரத்து
ஆணியாகப்பதிந்தது .

**கவிஞர் இரா .இரவி !**

## நம்பிக்கையை விதை"

நெஞ்சம் நிலமெனில்
நினைவே விதைகள்!

அங்கே நம்பிக்கை
நாற்றினை நாட்டிடு

நாளை வரும் பசுமை
நன்மை தரும் உண்மை!

இருள் வந்தாலும்
இமைக்காத ஒளியுண்டு

அது தன்னம்பிக்கை
என்னுமோர் தீப்பொறி!.

வார்த்தைகள்
காற்றல்ல
வாழ்க்கையை
மாற்றும் சக்தி!
முடியும் என்ற சொல்
மலையைக் கூட நகர்த்தும்!

முடியுமா? என்னுமோர்
எண்ணம் தோன்றிட

சோர்வினை வரவேற்று
தோல்வியை வழங்கும்!

உயர்வு மட்டுமே பேசு
உலகம் உன் கையில்!

நல்ல சொற்களை
நீராக்கிப் பாய்ச்சு

வாழ்க்கை மரம்
வாடாது என்றும்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்






















ATTENTION
ரயில்வே மின்சார
ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


















SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699



TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318



உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
வானகரம் பைபாஸ் ரோடு
முகப்பேர்
அம்பத்தூர்
பட்ரவாக்கம்
பெரம்பூர்
மாதவரம்
திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆருடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# பல்சுவை களஞ்சியம்




## யார் பணக்காரன்? யார் ஏழை?

பணம் நிறைய வைத்திருப்பவன் பணக்காரன் . கஷ்டப்படுபவன் ஏழை. அது தானே உங்கள் பதில் ? இந்த பதில் சரியா ?

#சம்பவம் -1.

ஒரு பெரிய சீமாட்டி ஒரு புடவைக் கடைக்கு செல்கிறாள் புடவை எடுக்க . " எனக்கு கொஞ்சம் பட்டுச்சேலைகள் காட்டுங்கள் . விலை மலிவாக இருக்கட்டும் . என் மகனுக்கு திருமணம் . என் வீட்டு வேலைக்காரிக்கு கொடுக்கவேண்டும்..." என்கிறாள் . சேல்ஸ்கேர்ள் எடுத்து போட்ட புடவைகளில் மலிவானதாக ஒன்றை செலக்ட் செய்து பணத்தை கட்டிவிட்டு எடுத்துச் சென்றாள் . சற்று நேரம் கழித்து அந்த வேலைக்காரி வருகிறாள் . " என் முதலாளியம்மா பையனுக்கு கல்யாணம் . நல்ல சேலையா ஒன்னு அவங்களுக்கு எடுத்து கொடுக்கணும் . விலை கொஞ்சம் கூட இருந்தாலும் பரவாயில்லை . நல்ல டிசைன்ஸ் எடுத்துப் போடுங்க என்றாள்..



#சம்பவம் -2 .

ஒரு பெரிய இடத்துப் பெண் , ஒருமுறை பிக்னிக்கிற்கு சென்ற இடத்தில ஒரு ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்தாள் . அவளது கைக்குழந்தை திடீரென பாலுக்காக அழ , ஹோட்டல் நிர்வாகத்திடம் " குழந்தைக்கு பால் கிடைக்குமா ? " என்றாள் . " எஸ் மேடம் கிடைக்கும் . ஒரு கப் நூறு ரூபாய் ஆகும்" என்று பதில் வந்தது . " பரவாயில்லை ... உடனே ஒரு கப் வேண்டும் " என்று கூறி ஆர்டர் செய்து பாலை வரழைத்தாள் .
அவள் ஊருக்கு திரும்பிப் போகும்போது வழியில் மறுபடியும் குழந்தை பாலுக்காக அழ , சாலையோரம் இருந்த ஒரு டீக்கடையில் காரை நிறுத்தி , பால் கிடைக்குமா என்று விசாரித்தாள் .
" பசும்பாலே இருக்கும்மா " என்று கூறி அக்கடைக்கார் , பசும்பால் கொடுத்தார் .
" ரொம்ப தேங்க்ஸ்பா ... எவ்ளோ ஆச்சு ? " என்று கேட்க "பணம் வேண்டாம்மா ... குழந்தைங்க குடிக்கிற பாலுக்கு நான் காசு வாங்குறதில்லை " என்று பதில் சொன்னவர் , "இன்னும் வேணும்னாலும் வாங்கிக்கோங்க . போற வழியில குழந்தை அழுதா என்ன பண்ணுவீங்க ? " என்றார் பரிவுடன் .

#சம்பவம்– 3.

அலுவலகத்துக்கு புறப்படும்போது தான் அந்த இளைஞன் கவனித்தான் . செருப்பு பிய்ந்துபோயிருந்தது . பிரதான சாலை வந்ததும் அந்த செருப்பை தைக்க செருப்பு தைப்பவரை தேடிச் சென்றான் . ஒரு நபர் சாலையோரம் ஒரு குடைக்கு கீழே செருப்புக்களை தைத்தபடி அமர்ந்திருந்தார் . வண்டியை அவர் முன் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி , செருப்பை அவர் முன் போட்டவன் , " இதை கொஞ்சம் தைச்சு கொடுங்க . புது செருப்பு . எப்படி பிஞ்சதுன்னு தெரியலே ...
" ' எவ்ளோப்பா ஆகும் ? " செருப்பை வாங்கி ஆராய்ந்த அந்த தொழிலாளி , ' இருபது ரூபா ஆகும் சார் ...
" " இருபது ரூபாயா ? பத்து ரூபாய் வாங்கிக்கோங்க .... அந்த இளைஞரை சற்று தலையை நிமிர்த்தி பார்த்தார் . கதிரவனின் கதிர்கள் சுட்டெரித்தது . சரியாக பார்க்க முடியவில்லை . "இருபதுக்கு கம்மி தைக்க முடியாது சார் ' " என்ன இதுக்கு போய் இருபது ரூபாயா ? பதினைஞ்சு வாங்கிக்கோங்க ' " நான் கம்மியாத் தான் சொல்லியிருக்கேன் . சொல்யூஷன் போட்டு ஒட்டி தைக்கணும் . அப்போ தான் தையல் நிக்கும் " இளைஞனின் பேரம் தொடர்ந்து கொண்டிருந்தது .
இதனிடையே ... டீ ஆர்டர் எடுக்க பக்கத்து டீக்கடை சிறுவன் வந்தான் . "ஒரு டீ கொண்டு வாப்பா.... சார் டீ சாப்பிடுறீங்களா ? அந்த இளைஞனின் பதிலுக்கு காத்திராமல் , " சாருக்கும் ஒரு டீ சேர்த்து ரெண்டு டீ கொண்டு வாப்பா ... " என்றார் .
" இல்லே ஐயா வேண்டாம் ... "
"பரவாயில்லை சார் ... சாப்பிடுங்க ... நல்லா இருக்கும் . இந்த ஏரியாவுல முப்பது வருஷமா இருக்குற கடை அது ..." சற்று நேரத்தில் சூடான டீ வந்தது . அந்தப் பெரியவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய அந்த இளைஞன் நெளிந்தபடி அந்த டீயை அருந்தினான் . செருப்பு தைத்து முடித்த பிறகு பைசா கொடுக்கும்போது சாப்பிட்ட டீக்கும் சேர்த்து தர , அந்த பெரியவர் சொன்னார் ... " செருப்பு தைச்சதுக்கு மட்டும் காசு கொடுங்க ... டீக்கு வேண்டாம் ... என்னோட கஸ்டமர் நீங்க ... உங்களை உபசரிக்கிறது என்னோட கடமை .. " என்றார் . ( தாம்பரம் சானடோரியம் பேருந்து நிறுத்தம் அருகே உண்மையில் நடந்த சம்பவம் இது நம் வாசகர் ஒருவர் கவனித்த சம்பவம்.

இவர்களில் யார் பணக்காரர் ? காரில் வந்து விலை குறைந்த புடவையை வாங்கிச் சென்ற அந்த சீமாட்டியா அல்லது நடந்து வந்து விலையுயர்ந்த புடவையை தனது எஜமானிக்கு வாங்கிச் அவள் வீட்டு வேலைக்காரியா? குழந்தையின் பாலுக்கு கூட அநியாய விலை வைத்த அந்த ஸ்டார் ஓட்டல் மேனஜரா ? அல்லது குழந்தைக்கு கொடுக்கும் பாலுக்கு பணம் வேண்டாம் என்று சொன்ன அந்த சாலையோர டீக்கடைக்காரரா? செருப்பு தைப்பவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய பைக்கில் வந்த இளைஞரா அல்லது டீயை அவருக்கு கொடுத்து உபசரித்த செருப்பு தைப்பவாரா?.

பணக்காரன் , ஏழை குறித்த தவறான மதிப்பீடுகள் ( WRONG DEFINITION ) ஆண்டாண்டு காலமாக நமது சிந்தனையில் ஊறிப்போயிருக்கிறது . நம்மால் இந்த உலகை மாற்றமுடியுமா என்று தெரியாது . குறைந்த பட்சம் இதை படிப்பவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் உலகை மாற்றுவார்கள் . பணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒருவர் பணக்காராகிவிட முடியாது. அதே நேரம் , பணம் இல்லாததால் ஒருவர் ஏழையும் கிடையாது . பணத்திற்கான ஓட்டத்தில் நாம் மனிதர்களை பொருட்படுத்துவதில்லை... பணத்தை பெரிதாக கருதாத இதயங்களை கவனிக்க மறந்துவிடுகிறோம்.. தேவையுள்ளவர்களுக்கு பிரதிபலன் எதிர்பார்க்காமல் உதவுவோம். அது தரும் மனநிறைவை பணம் நிச்சயம் தரமுடியாது . தன்னைப்போல பிறரை எண்ணும் தன்மை வேண்டுமே அந்த தன்மை வர உள்ளத்திலே கருணை வேண்டுமே... பொன்னைப்போல மனம் படைத்தால் செல்வம் வேறில்லை. இதை புரிந்து கொண்ட ஒருவனை போல் மனிதன் வேறில்லை..

# மீம்ஸ்









# ஆலமரம்

ஊர்க்கோடியின் ஆலமரத்தைப்பற்றி நிறைய கதைகள் உண்டு. தாத்தா காலத்திற்கு முன்னரெல்லாம் அங்குதான் நாட்டாமை தீர்ப்புகள் நடந்ததாக சொல்லிக்கொள்வார்கள். எனக்குத்தெரிந்து பெரிசுகளின் சாயங்கால ஓய்விடமாக அது இருந்திருக்கிறது. சுற்றிலுமான மேடையில் அமர்ந்தபடி ஊர்க்கதை பேசும் அவர்களின் குறைந்தபட்ச நிம்மதிகூட அதுவாகவே இருந்தது.

புருசனோடு சண்டையிட்டு தூக்குப்போட்டு இறந்துபோன இருளாயியின் ஆவி சுற்றித்திரிவதாகவும் ஒரு புரளியுண்டு. மேலத்தெரு சண்முகக்கவுண்டரைத்தவிர யாருமே நடுசாமம் தாண்டி எந்த சோலிக்கும் போனதேயில்லை வெகுநாள். நாள்பட நாள்பட கொஞ்சம் மறந்துபோனாள் இருளாயி. நாக்கைத்துருத்திக்கொண்டு இருளாயி துரத்தியதாக இப்போதும் சொல்லுவான் சந்தானம். அவனுக்கானால் அத்தனை பயம் அந்த ஆலமரத்தின்மீது.

பகலெல்லாம் எத்தனை கொடும் வெய்யிலயும் சாதாரணமாய் விழுங்கிவிடும் ஆலமரம் அமர்ந்தால் ஏசி போட்டதுபோல ஜில்லென்று தூங்கவைத்துவிடும்.
காதல் புறாக்கள் எப்போதேனும் எவருமறியாது பேசிக்கொள்ளும் சம்பாசஷணைக்கு விழுதுகள் வெட்கப்பட்டுக்கொள்ளும். விடியற்காலையிலும் மாலையிலும் அத்தனை குருவிகள் ஆரவாரமாய் சப்தமிடும். அந்த சப்தம் காதுகளில் நுழைந்து சங்கீதமாய் மூளைக்குள் சம்மணமிட்டுக்கொள்ளும்.

ஊர் பெருசாகிடுச்சு. ஓட்டு வீடு கூரை வீடெல்லாம் கான்கிரீட் வீடுகளா மாறிடுச்சு ஏறக்குறைய. அதான் இத்தன வருசம் கழிச்சு ஊர் ரோடு வசதிக்காக வேற வழியில்லாம அந்த முடிவ எடுத்திருக்காங்கலாம். ஊரெல்லாம் போராடி மனுகொடுத்து ஒரு பிரயோசனமுமில்ல. கலெக்டர் ஆர்டர் சாலை விரிவாக்கத்திற்கு இடையூரா இருக்கற ஆலமரத்த வெட்டித்தான் ஆகணுமாம்.
சந்தானம்கூட அழுதுகிட்டேதான் சொன்னான் ஒண்ணும் பணண முடியலனு.
இருளாயி இனி யாரா தொரத்துவானு தெரியல. ஏனோ இன்னிக்கு குருவிகள் ரொம்ப நேரம் ஆரவாரம் செஞ்ச மாதிரி தெரிஞ்சது.



# விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |



# ஜோக்ஸ்

(1) "கொள்கைதான் எங்களுக்கு முக்கியம் என்று தலைவர் மேடையில் பேசியதை கொள்ளைதான் முக்கியம் என்று திரித்து பரப்பிவரும் எதிர்க்கட்சியினரை வன்மையாக கண்டிக்கிறோம்..........."


(2) "ஊழல் வழக்கு காரணமாக எனது பாஸ்போர்ட்டையும், வங்கிக் கணக்கையும் முடக்கினீர்கள் ஓகே......., ஆனா அதுக்காக என்னோட ஃபேஸ்புக், வாட்ஸ்அப், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் கணக்குகளை எல்லாம் இப்படி முடக்கி வச்சா எப்படி ......."

(3) வங்கி ஊழியர்:-
"ஆதார் கார்டு கேட்டால் சேதார் கார்டுதான் இருக்குன்னு சொல்றீங்களே.....
அது என்ன சேதார் கார்டு........?"

கஸ்டமர்:-
"வீட்டுக்குள்ள வெள்ளம் வந்ததுனால என்னோட ஆதார் கார்டு சேதாரம் ஆயிடுச்சு சார்.........!!"

(4) "வாட்ஸ்அப்பில் வந்த விடியோவை பார்த்து நம்ம தலைவர் ஏன் அப்செட் ஆயிட்டார்........?"

"டீவி செய்தியில் தலைவரின் உரையைக் காண்பித்தபோது தொண்டர் தனது செருப்பை டீவியை நோக்கி எறிந்ததை வீடியோவா அனுப்பியருக்காராம்........!!"



(5) "அந்த ஜோக் எழுத்தாளர் எதற்காக யாகம் செய்கிறார்.....?"

"ரெண்டு வருஷமா அவரோட ஒரு ஜோக்கு கூட எந்த பத்திரிகையிலயும் பிரசுரமாகலையாம்........ யாரோ சூன்யம் வெச்சிருப்பாங்களோன்னு சந்தேகப்படறாரு........!!"

(6) அரசியல்வாதி (மேடையில்): கடந்த 5 ஆண்டுகளில் நோட்டாவுக்கு மொத்தம் 1 கோடிக்கும் மேலே ஓட்டுகள் கிடைத்துள்ளதாம். எனவே தேர்தல் ஆணையம் நோட்டாவை ஒரு தேசிய கட்சியாக அறிவித்தால் எங்களுக்கு அதனோடு தேர்தல் கூட்டணி அமைக்க வசதியாக இருக்கும்......!

(7) “நம்ம தலைவர் பேசற மேடையில சென்சார் மூலமா இயங்குற ஒரு மெஷினை வெச்சிருக்காங்களாமே, எதுக்கு.....?”

“செருப்பு, தக்காளி, முட்டை எத வீசினாலும் அதை உடனே ஒரு நொடியிலே எந்த பகுதியிலிருந்து வந்ததோ அந்தப் பக்கமே வேகமா திருப்பி எறிஞ்சுடுமாம்......!”

(8) “நம்மளோட கட்சி கூட்டத்துக்கு மைதானமே நிரம்பி வழியற மாதிரி கூட்டம் வரணும்னா என்ன செய்யலாம்..........?”

“மைதானத்தை சுத்தி சியர்ஸ் கேர்ள்ஸை நிறுத்திப் பார்க்கலாம் தலைவரே..........”

(9) “சிறையிலிருக்கும் தலைவர் சிறை அதிகாரிகளுக்கு ஏதோ வேண்டுகோள் வைத்திருக்கிறாராமே ?”

“அவரால் பிழைப்பு நடத்தி வந்த மீம்ஸ் கிரியேட்டர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க அவர்களை வாரத்திற்கு ஒரு முறையாவது ஜெயிலுக்குள் தன்னை சந்திக்க அனுமதிக்கனும்னு மனு கொடுத்திருக்கார்.....!”

(10) “இளவரசிக்கு குழந்தை மனசு.......”

“அதுக்காக இப்படியா இரண்டு கால்களையும் பல்லக்குக்கு வெளியே தொங்கப் போட்டுகிட்டு வர்றது......?!”



# ஜோதிடம் அறிவோம்



## தைப்பூசம் விரத பலன்கள்



தமிழ்க் கடவுளான முருகப்பெருமானை வழிபடும் மிக முக்கியமான தினங்களில் தைப்பூசத் திருநாள் ஒன்று. தை மாதத்தில் பூசம் நட்சத்திரமும், பவுர்ணமியும் இணைந்து வரும் நாளை தைப்பூசத் திருநாளாக கொண்டாடுகிறோம்.

தைப்பூச நாளில் முருகப் பெருமானை போற்றி வழிபட்டால் பல மடங்கு நன்மைகள் பெறலாம். இந்த ஆண்டு நாளை (ஞாயிற்றுக்கிழமை) தைப்பூசத் திருநாள் கொண்டாடப்பட உள்ளது. தைப்பூசத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

முருகப்பெருமானுக்கு உரிய முக்கிய வேண்டுதல்களில் காவடி எடுப்பதும் ஒன்றாகும். இந்த காவடி எடுக்கும் முறை தோன்றிய தலமாக பழனி உள்ளது. பழனியில் தைப்பூச விழா 10 நாள் திருவிழாவாக நடத்தப்படுகிறது. அன்றையை தினம் லட்சக்கணக்கான பக்தர்கள், முருகனுக்கு விரதம் இருந்து பச்சை உடை தரித்து பாத யாத்திரையாக பழனிக்கு வருவார்கள்.

தைப்பூச நாளில் அதிகாலையில் எழுந்து, வீட்டை சுத்தம் செய்து நீராடிவிட்டு, திருநீறு அணிந்து விரதத்தை தொடங்கலாம். பூஜை அறையில் முருகப்பெருமான் படம் வைத்து, மலர்களால் அலங்கரித்து விளக்கேற்றி வழிபடலாம். கந்தசஷ்டி கவசம், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ் போன்ற முருகப் பெருமானுக்கு உகந்த பாடல்களை பாட வேண்டும். அன்றைய தினம் முழுவதும் 'ஓம் சரவணபவ' எனும் ஆறெழுத்து திருமந்திரத்தை உச்சரித்தபடியே இருப்பது நல்லது.

காலை மற்றும் மதியம் இரு வேளைகளிலும் உணவு உண்ணாமல், பால், பழம் மட்டுமே சாப்பிட்டு விரதம் இருக்க வேண்டும். அன்றைய தினம் அருகில் இருக்கும் முருகன் கோவிலுக்கு செல்வது சிறப்பு. முருகப்பெருமானை மனதார நினைத்து, அவன் அருள் வேண்டி விரதம் இருக்க வேண்டும். மாலையில் கோவிலுக்கு சென்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

தைப்பூச விரதத்தை 48 நாட்கள், 21 நாட்கள் அல்லது அன்று ஒரு நாள் மட்டும் என அவரவர் விருப்பத்திற்கேற்பவும், உடல்நிலைக்கு ஏற்பவும் மேற்கொள்ளலாம். சிலர், காவடி எடுத்தும், பால்குடம் சுமந்தும், அலகு குத்தியும், பாத யாத்திரையாக சென்றும் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள். தீராத நோயால் அவதிபடுபவர்கள், முருகப்பெருமானுக்கு காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்கிறார்கள். அதன்படி நோய் நீங்கி, உடல் ஆரோக்கியம் பெற்றதும் தைப்பூசத்தன்று காவடி எடுத்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்றி கொள்கிறார்கள்.

27 நட்சத்திரங்களில், பூசம் நட்சத்திரத்தின் அதிதேவதையாக இருப்பவர், குரு பகவான். எனவே, தைப்பூச நாளில் முருகப்பெருமானை வழிபடுபவர்களுக்கு குரு பகவானின் அருளும் சேர்ந்து கிட்டும்.


தைப்பூச நாளில் தொட்டது துலங்கும் என்பார்கள். எனவே அன்றைய தினம், குழந்தைகளுக்கு காது குத்துதல், ஏடு தொடங்குதல், திருமணப் பேச்சுக்கள், புதிய தொழில் ஒப்பந்தம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். தைப்பூசத்தன்று விரதம் இருந்து வழிபட்டால் வாழ்வில் உள்ள துன்பங்கள் நீங்கும், தீராத பகை மாறும், ஒற்றுமை அதிகரிக்கும், தொடங்கும் காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

## தேய்பிறை சஷ்டி -விரத முறையும் பலனும்..!

முருகப்பெருமானின் அருளைப் பெற அனைவரும் கடைபிடிக்கும் விரதம் தான் சஷ்டி விரதம். பெரும்பாலான முருக பக்தர்கள் கந்தசஷ்டி காலத்தில் மட்டுமின்றி மாதம்தோறும் வரும் சஷ்டியிலும் மனதார விரதமிருந்து முருகனுடைய அருளைப் பெறுவார்கள்.

சஷ்டி விரதம் என்றாலே குழந்தை வரம் வேண்டுபவர்கள் தான் இருப்பார்கள் என சொல்வார்கள். ஆனால் அது உண்மையல்ல. உடல்நல பாதிப்பு, தொழில் பாதிப்பு, திருமணத் தடை என எந்தவித பிரச்சனையாக இருந்தாலும் சரி, சஷ்டி விரதமிருந்து மனமுருகி அந்த வேலவனை நினைத்தாலே எல்லாவற்றையும் அவன் தீர்த்து வைப்பான் என்பது பக்தர்களின் அனுபவப்பூர்வமான உண்மை.

மாதம்தோறும் வரும் சஷ்டி விரதம் எவ்வாறு மேற்கொள்ளலாம் என பார்க்கலாம்.



* மாதம்தோறும் வரும் வளர்பிறை மற்றும் தேய்பிறை ஆகிய இரு சஷ்டி திதிகளிலும் விரதம் இருக்கலாம்.

* நாளை தேய்பிறை சஷ்டி விரதம். அதிகாலையில் எழுந்து நீராடி, ஐயன் முருகப்பெருமானின் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரிக்க வேண்டும்.

* வீட்டில் வேல் இருந்தால் முருக வேலுக்கு பால் அபிஷேகம் அல்லது திருநீறு அபிஷேகம் செய்து மலர்களால் அலங்கரிக்க வேண்டும்.

* கந்த சஸ்டி கவசம், முருகப் பெருமானுக்குரிய மந்திரங்கள், கந்தபுராணத்தை கேட்பது அல்லது முருகனைப் போற்றும் பாடல்களைப்பாடி, விளக்கேற்றி மனமுருகி வழிபட வேண்டும்.

* விரதம் இருக்க முடிந்தவர்கள் நாள் முழுவதும் உண்ணாமல் விரதம் இருக்கலாம். முடியாதவர்கள் பால், பழம் மட்டும் சாப்பிடலாம்.

* சஷ்டி விரதம் இருக்கும் போது அன்றைய நாள் முழுவதும் முருகப்பெருமானின் பக்திப் பாடல்களைப் பாடுவதும், கேட்பதும் மனநிறைவைத் தரும்.

* சஷ்டி நாட்களில் முடிந்தவர்கள் அருகில் உள்ள கோவில்களுக்கு சென்று முருகனை வழிபட்டு, அன்னதானம் அல்லது தங்களால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கு செய்யலாம்.

குறிப்பாக முருகப்பெருமானின் அருள் வேண்டி நிற்கும் அனைத்து பக்தர்களும் சஷ்டி விரதம் மேற்கொள்ளலாம்.

இப்படி மாதம்தோறும் வரும் சஷ்டி நாட்களில் விரதம் இருந்து முருகனை வழிபட்டால் நிச்சயமாக வாழ்வில் அமைதியும், வளமும் நிலைத்து நிற்கும்.

## திருமணத்தடை நீக்கும் திருவதிகை சரநாராயண பெருமாள் கோவில்



கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள திருவதிகையில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பழமை வாய்ந்த சரநாராயண பெருமாள் கோவில் உள்ளது.

**தல வரலாறு**

முன்பொரு சமயம் சிவபெருமான் திரிபுர அசுரர்களை போரிட்டு அழிக்க தேவர்கள் தேர் ஒன்றினை படைத்தனர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சூரிய, சந்திரர் தேரின் இரு சக்கரங்களாகவும், பூமி தேரின் தட்டச்சாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், மேருமலை வில்லாகவும், ஆதிசேஷன் நாணாகவும், பிரம்மன் தேர் ஓட்டுபவராகவும், விஷ்ணு அம்பாகவும் இருந்து உதவினர் என்கிறது புராண நூல்கள்.

இதன் மூலம், விஷ்ணு அம்பாக (சரமாக) இருந்து போருக்கு உதவியதால் விஷ்ணு இத்தலத்தில் "சரநாராயணப்பெருமாள்' என அழைக்கப்படுகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம், திருவதிகை வீரட்டானேசுவரர் கோவிலில் திரிபுரம் எரிக்கும் திருவிழா நாளில், கருட வாகனத்தில் பெருமாள் சரத்துடன் எழுந்தருளி சரம் கொடுக்கும் நிகழ்ச்சியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இங்குள்ள மூலவர் சரநாராயணப்பெருமாள் முழுவதும் சாளக்கிராமத்தால் ஆனவர்.

இங்கு ஹேமாம்புஜவல்லி தாயாருக்கு தனி சன்னதி உள்ளது. ஹேமாம்புஜவல்லி தாயாருக்கு செங்கமலத்தாயார், பொற்தாமரைகொடியாள் என சிறப்பு பெயர்கள் உண்டு. ஆண்டுதோறும் பங்குனி மாத உத்திரம் நட்சத்திரத்தில் பெருமாள், தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம் நடந்து, சேர்த்தி உற்சவத்தில் பெருமாள் தாயார் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

மாதந்தோறும் நடைபெறும் உத்திர நட்சத்திரத்தில் தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம், ஆடி வெள்ளிக்கிழமைகளில் பூவாலங்கி சேவையிலும் தாயார் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். மார்க்கண்டேய மகரிஷியின் மகளாக தவத்தால் பிறந்த ஹேமாம்புஜவல்லி தாயார் பெருமாளை திருமணம் செய்துள்ளதால், இக்கோவிலில் வேண்டுவோருக்கு திருமணத்தடை நீங்கும், குழந்தை பேறு, கடன் நிவர்த்தி, சகல ஐஸ்வர்யங்கள் பெருகும் என்பது நம்பிக்கை. கடன் நிவர்த்தி, ஐஸ்வர்யங்கள் பெருக வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு பூஜை நடக்கிறது.

திருமாலின் திருத்தலங்களில், இக்கோவிலில் தான் நரசிம்மர், சயன திருக்கோலத்தில் தெற்கு நோக்கி சயனித்திருக்கிறார். இது ஒரு மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும். மேலும் தாயாரும் உடன் எழுந்தருளியிருப்பதால் இது போக சயனம் ஆகும். இந்த சயன நரசிம்மர், திருவக்கரையில் வக்ராசுரனை அழித்து விட்டு, அதன் பரிகாரத்துக்காக இத்தலத்தில் வந்து சயனித்துள்ளார்.


700 ஆண்டுகளுக்கு முன் வேதாந்த தேசிகர், திருவந்திரபுரம் செல்லும் போது இந்த சயன நரசிம்மரை வழிபட்டதாக கூறப்படுகிறது. இந்த சயன நரசிம்மருக்கு ஒவ்வொரு பிரதோஷத்திற்கும் சிறப்பு பூஜை செய்யப்படுகிறது. மற்ற கோவில்களில் கைகூப்பி நிற்கும் கருடாழ்வார், இங்கு கைகட்டி சேவகம் செய்யும் நிலையில் அருள்பாலிக்கிறார். மேலும் இங்குள்ள கருடாழ்வாருக்கு, திரிபுர சம்ஹாரத்தின்போது பெருமாள், சங்கு, சக்கரங்களை தந்தாக புராணம் கூறுகிறது. இங்குள்ள பெருமாள் உப்பிலியப்பன் சீனிவாசனைப்போல், மார்க்கண்டேய மகரிஷி மகள் ஸ்ரீதேவியை திருமணம் செய்து கொண்டு நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

அருகில் மிருகண்ட மகரிஷியின் மகன் மார்க்கண்டேய மகரிஷி. புரட்டாசி மாதம் முழுவதும் சிறப்பு அலங்காரமும், சிறப்பு பூஜையும் நடைபெறுகிறது. இந்த மாதத்தில் திருப்பதி செல்ல முடியாதவர்கள், இங்குள்ள பெருமாளை வழிபாடு செய்யலாம்.

இப்பெருமாளை 7 அமாவாசையில் அங்கப் பிரதட்சணம் செய்து வழிபட்டால் வேண்டியதை வேண்டியவாறு அருளக்கூடிய பெருமாளாக அருள்பாலிக்கிறார். பெரிய திருவடியாகிய கருடாழ்வார் இத்தலத்தில் கையைக் கட்டிக்கொண்டு சேவக பாவத்தில் காட்சி தருகின்றார்.

## திருவந்திபுரம் தேவநாதசுவாமி கோவில் வரலாறு

அஹீந்த்ரன் என்றால் ஆதிசேஷன் என்று பொருள். இந்த ஊர் ஆதிசேஷனால் நிர்மானிக்கப்பட்டது ஆகும். அருகிலுள்ள மலை பிரம்மா தவம் செய்த இடம். அதனால் பிரம்மாசலம் என்றும், ஆஞ்சநேயரால் கொண்டு வரப்பட்ட அவுசத மலையின் ஒரு பாகம் இதில் சேர்ந்திருப்பதால் அவுசதாசலமென்றும் பெயர் பெற்றது. கருடனால் கொண்டு வரப்பட்ட நதி பக்கத்தில் ஓடுகிறது. இந்த நதி கரும் நதியென்று பெயர் பெற்றது. ஆதி சேஷனால் நிர்மானிக் கப்பட்டது என்றும் கோவிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கோவிலில் உள்ள பிரதானமூர்த்தி தேவ நாதன். இவர் அச்சுதன், ஸ்திரமோதில், அநக ஜோதிஸ், மேவு ஜோதி, மூவராகிய மூர்த்தி, அடியவர்க்கு மெய்யன், தெய்வநாயகன், தாசஸத் தியன் போன்ற பல பெயர்களில் உள்ளவர், பிரம்மா, சிவன், இந்திரன், பூமாதேவி, பிருகு, மார்க்கண்டேயர், ததிசி முனிவர் போன்ற பலரும் தவம்புரிந்து தரிசித்து வரம் பெற்ற தலமிது.

கோவிலில் பிரதானமாகிய தாயார்-அம்புருகவாசினி. இவர் ஹேமாப்ஜநாயகி, பார்கவி, தரங்கமுக நந்தினி, செங்கமலநாயகி போன்ற பல திருநாமங்கள் அமையப்பெற்றவள்.

பெருமாளும், தாயாரும் மகாவரப்பிரசாதி. பாடல் பெற்ற 108 வைணவதலங்களில் முக்கியமானது இத்தலம். இது திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. வேதாந்த தேசிகன் இங்குள்ள அவுசதாசலத்தில் தவம்புரிந்து ஸ்ரீ ஹயக்ரீவனையும், கருடனையும் பிரத்யக்ஷமாகக் கண்டு வரம் பெற்றார்.

ஹயக்ரீவனுக்கு உலகிலேயே இவ்வூரில்தான் முதலில் கோவில் ஏற்பட்டது. ஸ்ரீதேசிகன் இந்த ஊரில் சுமார் 40 ஆண்டு காலம் வசித்து வந்தார், அநேக நூல்களை இவ்வூரில் இயற்றினார். அவர் எழுந்தருளியிருந்த இடம் ஸ்ரீதேசிகன் திருமாளிகை என்ற பெயரோடு விளங்குகிறது. இக்கோவிலுக்குள் இருக்கும்ஸ்ரீ தேசிகன் திவ்ய மங்கள விக்ரகம் ஸ்ரீ தேசிகன் தன் திருக்கரங்களாலேயே செய்யப்பட்டதாகும். ஸ்ரீதேசிகன் தன் திருக்கரங்களாலேயே கட்டிய கிணறு இன்றும் ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் உள்ளது.

வைதீக ஆகமத்தின்படி 6 கால பூஜைகள் தினம் நடந்து வருகிறது. வேதபாராயண அத்தியாயம் (திவ்யபிரபந்த) கோஷ்டிகள் இத்திவ்ய தேசத்தில் ஒரு கவுரவ கைங்கர்யமாகவே இன்றும் நடந்து வருகிறது. சித்திரை மாதம் ஸ்ரீ பெருமாளுக்கும், புரட்டாசி மாதம் ஸ்ரீ தேசிகனுக்கும் மிகவும் விமரிசையாக பிரம் மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

இந்த திருத்தலம்தமிழ் நாட்டில் கடலூர் திருப்பா திரிப்புலியூர் ரெயில் நிலையத்தில் இருந்து 6 கி.மீ தூரம் மேற்கில் அமைந்துள்ளது. வருடத்தில் 12 மாதங்களிலும், உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. எப்பொழுதும் திரளான பக்தர்கள் வந்து சேவித்து பயனடைந்து வருகிறார்கள்.

குறிப்பு : உற்சவ கைங்கர்யதாரர்கள் உற்சவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே திருக்கோவில் அலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்து உற்சவத்திற்கான திட்டத்தினைபெற்றுச் செல்வதுடன், உற்சவ கைங்கர்யத்தினை காலத்தே வந்திருந்து நடத்தி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கைகட்டி வணங்கும் கருடன்

திருவந்திபுரம் தேவநாதசுவாமி முன்பு உள்ள கருடன் தேவநாதசுவாமிக்கு அதிக மரியாதை கொடுக்கும் விதமாக கை கட்டி நின்ற நிலையில் உள்ளார். பெரும்பாலான கோவில்களில் கருடன் கை கூப்பிய நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது இந்த கோவிலின் ஒரு மிக சிறப்புவாய்ந்த அம்சமாகும்.

## வாழும் காலத்தில் சௌகரியமாக வாழ



கங்கை, யமுனை, பண்டைய சரஸ்வதி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர் எப்பொழுதும் அழியாதவராக இருக்க வேண்டும் என்று இந்திர பகவானிடம் பிரார்த்தனையும் உள்ளது. இந்தச் சங்கமத்தில் குளித்தால், கடந்த கால, நிகழ்கால, அறியப்படாத பாவங்கள் அனைத்தும் கழுவப்படும் என்றும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. இது வேறு எந்த புனித நீராட்டத்தையும் விட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரிவேணி மிகவும் தெய்விகமானது. அந்த தெய்விகத் தருணத்துக்காக, தேவர்கள் கூட காத்திருக்கிறார்கள். எனவே இது "முக்தி ஜனனி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது எண்ணற்ற யக்ஞங்களைவிட அதிக புண்ணியத்தை ஏற்படுத்துவதால், இந்த இடம் "பிரயாக்' என்று அழைக்கப்படுகிறது.

சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராசாரியருடன் இணைந்து பிரயாக் கும்பமேளாவுக்கு நான் சென்றது ஒரு புதிய அனுபவம். கங்கா ஸ்துதி, கங்கா தசஹர ஸ்தோத்திரம், காசி பஞ்சகம், கங்காவதாரணம் (ராமாயணம் & பாகவதம் போன்றது), திரிவேணி மஹாத்மியம், பிரயாகா க்ஷேத்ர மஹாத்ம்யம் மற்றும் யமுனாஷ்டகம் போன்றவற்றை சங்கராசாரியர் ஒரு பக்தரை போன்று பாடியது பரவசம் அளித்தது. இதற்கு முன் இவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இந்த ஞான குரு உலக நலம், பாரதத்தின் நீடித்த செழுமைக்காக ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டு பின்னர் புனித நீராடல் செய்தார்.

கடவுளுக்கும் வேத பண்டிதர்களுக்கும் விசேஷமான காணிக்கைகளைத் தொடர்ந்து, மாகங்கா பூஜையின் சடங்கு முறை பார்ப்பதற்கு ஒரு தெய்விக நிகழ்வாக இருந்தது. திரும்பிச் செல்லும்போது, புனிதமான, அழியாத அத்தி மரமான "அக்ஷயவடம்' தரிசனத்தை ஒருவர் தவறவிட முடியாது. காஞ்சி மடத்தின் மற்றொரு சுவாரஸ்யமான பரிமாணம், "சங்கர விமான மண்டபம்' ஆகும். இது தென்னிந்திய பாணியில் காஞ்சி மடத்தால் கட்டப்பட்ட நான்கு மாடி கோயில். இது கண்காணிப்பு, கூட்ட மேலாண்மைக்காக திரிவேணி சங்கமத்தின் கண்காணிப்பு மையமாகவும் செயல்படுகிறது.

தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறக்குமதி செய்யப்பட்ட வாழ்க்கை முறைகளை அல்லாமல், அதன் சொந்த பலங்களை நம்பும் ஒரு கலாசார ரீதியான, வளமான சமூகத்தின் நங்கூரங்களைப் பிரதிபலிக்கிறது. பிரயாகையின் விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகள், குறுக்கு சந்துகள் தெய்விகத் தன்மையுடன் பிரகாசித்தன. வாழ்க்கையின் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னியல்பாக திரண்டு வந்தது, பிரயாக் கும்பமேளாவை, உலக அளவில் பாரதத்தின் நாகரிகக் கண்காட்சியாக மாற்றியது.




திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதி தாயார் வெள்ளிக்கிழமை திவ்ய சேவை.




வெள்ளை சாத்துப்படி சேவை



ஸ்ரீஉதையவர் புறப்பாடு சென்னை திரிப்பிள்ளை சரதி பெருமாள் கோவில் வெள்ளை சாத்துபாடியில் குதிரை வாகனத்தில் தொடங்கியது



ஸ்ரீ சார்ங்கபாணி ஸ்வாமி கோவில் கும்பகோணம். சித்திரை அமாவாசை பஞ்சபர்வ புறப்பாடு



மந்தைவெளி மாரி செட்டிங் தெரு ஆலய தேரோட்டம்




## கலசப்பாக்கம் தொகுதி வேட்பாளருக்கு திரைப்பட பாடல் ஆசிரியர் சினேகன் அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு







**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கத்தில் திமுக வேட்பாளர் பெ. சு. தி.சரவணன் அவர்களை ஆதரித்து திரைப்பட பாடலாசிரியர் சினேகன் அவர்கள் பல்வேறு கிராமங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.உடன் ஒன்றிய செயலாளர் சிவகுமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள், முன்னாள் சேர்மன் அன்பரசி ராஜசேகரன் அவர்கள் மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் ஆய்வு





**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் விவரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## எருக்கூர் உத்திராபதியார் சுவாமி அமுது படையல் விழா

**சீர்காழி , ஏப் , 19:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா எருக்கூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு உத்திராபதியார் சுவாமிக்கு 132 -வது ஆண்டு அமுது படையல் தர்மத்தை முன்னிட்டு காலையில் அபிஷேக ஆராதனை நடைபெற்றது.



இதில் எருக்கூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துகுபேரன் மற்றும் ஊர் கிராமவாசிகள் , சுதந்திர போராட்ட வீரர் ஸ்ரீ நீலகண்ட பிரம்மச்சாரி பேரன் எருக்கூர் சுப்பிரமணியன், நீலகண்ட பிரம்மச்சாரி கொள்ளு பேரன் எஸ். வைதீஸ்வரன், கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

விழா ஏற்பாடுகளை எருக்கூர் அனைத்து நாட்டாமை பஞ்சாயத்தார்கள் செய்திருந் தார்கள்.

## காங்கிரஸ் விவசாயப் பிரிவு தலைவர் திரு S.கிருஷ்ணன் தலைமையில் வீடு வீடாக பிரச்சாரம்

**மொடக்குறிச்சி, ஏப்.19:** சனிக்கிழமை (18ம் தேதி) மாலையில் மொடக்குறிச்சி தொகுதி குளூர் ஊராட்சி செங்கரைப்பாளையம் கிராமத்தில் உள்ள சுமார் 120 வீடுகளுக்கும் ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் விவசாயப் பிரிவு தலைவர் திரு S.கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர் திரு சா.செந்தில்நாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் ஓட்டுக் கேட்டு, முதல்வர் ஸ்டாலின் அவர்களின்



மக்கள் நலத்திட்ட உதவிகளை விளக்கிச் சொல்லி வீடு வீடாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

## வந்தவாசி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு





**திருவண்ணாமலை, ஏப்.19:** திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தொகுதி அஇஅதிமுக வேட்பாளர் ராணி அவர்கள் பெரணமல்லூர் பேரூராட்சியில் வாக்குகள் சேகரித்தார். பெரணமல்லூர் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து பஜார் வழியாக அனைத்து வீதிகளிலும் நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து இரட்டை இலைக்கு வாக்குகள் சேகரித்தார்.

வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக பொறுப்பாளர் வழக்கறிஞர் திரு.ஜாகீர் உசேன் அவர்கள் உடன் இருந்தார். மற்றும் பெரணமல்லூர் நகர செயலாளர் மூர்த்தி, துணைச் செயலாளர் அறிவழகன், ஒன்றிய செயலாளர் செல்வராஜ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## வேலூரில் கோடைகால இலவச பயிற்சி முகாம் தொடக்கம்



**வேலூர் ,ஏப்.19:** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாவட்ட அளவிலான இலவச கோடைகால பயிற்சி முகாம் வேலூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் தொடங்கியது. இதில் தடகளம், கால்பந்து, கபடி, கைப்பந்து, ஹாக்கி ஆகிய ஐந்து விளையாட்டுகள் நடைபெறுகிறது. இப்பயிற்சி முகாமில் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள், மாணவர் அல்லாத 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் என அனைவரும் கலந்து கொள்ளலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பத்திரிகை செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார். இந்த பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் நேதாஜி ஸ்டேடியத்திற்கு நேரில் சென்று தங்களது பெயர்களை பதிவு செய்து கொண்டு பயிற்சி பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்திரமேரூர் ஸ்ரீஆனந்தவல்லி தாயார் வெள்ளிக்கிழமை திவ்ய சேவை.

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 28 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு, ஏப்.19:** செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருப்பணிகள் திட்டம் சார்ந்து 28 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக ஓய்வு பெற்ற உடற்கல்வி இயக்குனர் வி. சூரிய நாராயணன் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.

பின்னர் முன்னிலை வகித்த உடற்கல்வி இயக்குனர் சிவராமன் மற்றும் 19 மாணவிகள் நான்கு மாணவர்கள் இரண்டு சிறப்பு அழைப்பாளர்கள் இரண்டு பயிற்சியாளர்கள் பெரியவர்கள் ஐந்து பேர் உள்ளிட்ட 32 பேர் நேற்றைய பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். முடிவில் புலவர் ந. கனக சபை நன்றி கூறினார்.

## வெள்ளை சாத்துப்படி



மாம்பலம் ஸ்ரீகோதண்ட ராமர் ஸன்னிதி உடையவர் உத்ஸவம் 6ம் நாள். வெள்ளை சாத்துப்படி.

## மதிவேந்தனை ஐம்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யுங்கள் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்

**ராசிபுரம், ஏப்.19:** ராசிபுரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க., வேட்பாளர் அமைச்சர் மதிவேந்தனை ஆதரித்து உதயநிதி ஸ்டாலின் நேற்று தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

ராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் கடந்த , 2021-ம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.க., சார்பில் போட்டியிட்ட மதிவேந்தன் , 2,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று எம்.எல்.ஏ., ஆனார். அவரது சிறப்பான செயல்பாட்டைக் கருத்தில் கொண்டு தி.மு.க., தலைவர் அவரை அமைச்சராக்கி அழகு பார்த்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதிக்குத் தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை அவர் சிறப்பாகச் செய்துள்ளார்.

இந்த நிலையில், ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே நேற்று மாலை , 5:30 மணி அளவில் தி.மு.க., வேட்பாளர் அமைச்சர் மதிவேந்தனை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் நடந்தது. சேலம் மாவட்ட பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்த தி.மு.க., இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு வழிநெடுகிலும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: ‘கடந்த முறை மதிவேந்தனை,



2,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்துச் சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்கள். இந்த முறை அவரை குறைந்தது , 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அமைச்சர் மதிவேந்தன் இந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதி மக்களுக்காகப் பல வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். குறிப்பாகத் தொகுதி மக்களின் நீண்டகாலத் தேவையான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக ரூபாய், 860 கோடி ஒதுக்கீடு செய்து தடையின்றித் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.’ ‘சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முறையாகப் போதமலை மலைவாழ் மக்களுக்காக ரூபாய், 140 கோடியில் புதிய மலைப்பாதை அமைத்துக் கொடுத்தது உங்கள் அமைச்சர் மதிவேந்தன் தான். மேலும் ராசிபுரம் ஆஸ்பத்திரிக்கு ரூபாய், 53 கோடியில் புதிய கட்டிடம், , 41 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க் மற்றும் நாமகிரிப்பேட்டை பகுதியில் , 1,500 விவசாயிகளுக்குப் பட்டாக்கள் எனப் பல சாதனைகளைச் செய்துள்ளார். மக்களுக்காக உழைக்கும் அவருக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.’ ‘மத்திய பா.ஜ., அரசு கொண்டு வந்த தொகுதி மறுவரையறை சட்ட மசோதாவை எதிர்த்து முதன்முதலில் நாமக்கல்லில் தான் முதல்வர் கறுப்புக் கொடி ஏற்றிப் போராடினார். அதன் விளைவாகவே அந்த மசோதா தற்போது நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் தி.மு.க., ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத்தொகை ரூபாய், 2,000-ஆக உயர்த்தப்படும். காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். இல்லத்தரசிகளுக்குத் தேவையான மின் சாதனங்களை வாங்க ரூபாய், 8,000 மதிப்பிலான கூப்பன்கள் வழங்கப்படும். டெல்லி அடிமைகளையும், சங்கிக் கூட்டத்தையும் தமிழகத்திற்குள் நுழைய விடாமல் தடுக்க உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்’ என உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் ராஜேஸ்குமார் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ., ராமசாமி, ஈரோடு பிரகாஷ், இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், ராஜேஷ்பாபு, நகரச் செயலாளர் சங்கர், ஒன்றியச் செயலாளர் ஜெகந்நாதன், துரைசாமி, ராஜேஷ், கண்ணன், ஜெயக்குமார், இளைஞரணி அமைப்பாளர் விஸ்வநாத் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என , 5,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உதயநிதியின் வருகையால் ராசிபுரம் தொகுதியில் தேர்தல் களம் விறுவிறுப்படைந்துள்ளது. இதற்கான பாதுகாப்புப் பணிகளைப் போலீசார் மேற்கொண்டனர்.

# சுற்றுலா: சிறுமலை: ஒரு பசுமையான பயண அனுபவம்!



சிறுமலை திண்டுக்கல்லில் இருந்து 25 கி.மீ, மதுரையிலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பல உயரமான மலைகள் உள்ளன.

இது கடல் மட்டத்திலிருந்து 1600 மீட்டர் உயரத்தில் உள்ளது. ஆண்டு முழுவதும் மிதமான தட்ப வெப்ப நிலையிலும், அடர்ந்த வனப்பகுதியும், 18 ஹேர்பின் வளைவுகள் உள்ளன.

சிறுமலை மலைகள் பல இயற்கை எழில் கொஞ்சும் இடங்களைக் கொண்டுள்ளது. மலைத்தொடர்கள், பசுமை சூழ காட்சிகளுடன் பார்வையாளர்களை கவரும்.

17வது ஹேர் பின்னில் ஒரு கண்காணிப்பு கோபுரம் உள்ளது. இங்கு காணவேண்டிய இடங்கள், அன்னை வேளாங்கண்ணி தேவாலயம், வெள்ளிமலை முருகன் கோவில். இயற்கை சூழலில் அரிய தாவரங்கள் 60,000 ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது.

இங்கு விலங்கினங்கள் அதிகமாக உள்ளது. சிறுமலையில் மலை வாழை வகை மலை உச்சியில் பயிரிடப்படுகிறது. இப்பழம் பழனியில் உள்ள முருகன் கோவிலுக்கு பஞ்சாமிர்தம் செய்ய அனுப்படுகிறது.

இங்குள்ள சிறுமலை ஏரி 2010ல் கட்டப்பட்டது. இங்கு படகு வசதிகள் உள்ளன. சஞ்சீவனி மலை, சிறுமலையின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. இந்த மலை புராண முக்கியத்துவம் வாய்ந்தது. லக்ஷ்மணனை குணப்படுத்த அனுமன் சுமந்ததாக சொல்லப்படும் சஞ்சீவனி மலை ஒரு துண்டு விழுந்ததாக கருதப்படுகிறது

செல்வி கோவில் நீள் வட்ட வடிவில் இயற்கை எழில் கொஞ்சும் தோற்றத்துடன் அமைந்துள்ளது.



### அகஸ்தியர்புரம்

அகஸ்தியர் என அழைக்கப்பட்ட சித்தர் இங்கு தங்கியிருந்ததால் இப்பகுதி அகஸ்தியர்புரம் என அழைக்கப்படுகிறது.

பழங்காலம் முதல் பல்வேறு சித்தர்கள் வசித்த இடமாக கருதப்படுகிறது. இங்கு 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவலிங்கம் காணப்படுகிறது.

### வெள்ளிமலை

அகஸ்தியர்புரத்தில் வெள்ளிமலை காணப்படுகிறது. மிக உயர்ந்த மலை இதுவாகும். ஒரு காலத்தில் மலையின் உச்சி முழுவதும் வெள்ளியாக இருந்தது. களவுகத்தில் இது மக்களால் திருடப்படும் என்பதால் அகஸ்தியர் இதனை பாறைக் கல்லாக மாற்றி விட்டதாக கூறப்படுகிறது. சிவன் கோயிலின் பின்புறம் தீபகோபுரம் உள்ளது.

இது சிவராத்திரி அன்று திருவண்ணாமலை தீபம் ஏற்றுவதுபோல மகாதீபம் ஏற்றி வழிபடுகிறார்கள்.

இந்த இடத்துக்கு சென்று ஒரு பயணத்தை தொடங்குங்கள். வளமான நினைவுகளுடன் திரும்புங்கள். மூலிகை நறுமணத்துடன், இயற்கை வனப்பகுதிகளையும் கண்டுகளியுங்கள்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்சியாளர் பணி

இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் (SAI) விளையாட்டுப் பயிற்சியாளர் பணிக்கான காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்கு ஆண்கள் மற்றும் பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ரூ.35,400 – 1,12,400

வயது வரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: Sports Authority of India A National Institute of Sports அங்கீகாரம் பெற்ற விளையாட்டுப் பயிற்சியாளருக்கானப் படிப்பை முடித்திருக்க வேண்டும் அல்லது காலியிடங்கள் ஏற்பட்டுள்ள விளையாட்டுப் பிரிவில் சர்வதேச, தேசிய அளவிலானப் போட்டிகளில் விளையாடி இருக்க வேண்டும் அல்லது விளையாட்டுப் பயிற்சியாளருக்கான துரோணாச்சார்யா விருது பெற்றிருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத்தேர்வு, விளையாட்டுத் துறை சாதனைகள், நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்படுவர். எழுத்துத் தேர்வு தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

எழுத்துத்தேர்வில் Sports Science, General Awareness, Reasoning Aptitude, Specific Sports Knowledge தொடர்பாக கேள்விகள் கேட்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, ஓபிசி, இடபுள்யுஎஸ் பிரிவினர் ரூ.2,500, எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர் மற்றும் பெண்கள் ரூ.2,000. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www.sportsauthorityofindia.nic.in என்ற இணையதளம் வழியாக ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 21.4.2026

## ஏப்ரல் மாதம் (2026) வார ராசிபலன்

**19.04.2026 முதல் 25.04.2026 வரை**

### மேஷம்

செவ்வாயை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும்.

பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் ஸ்தானத்தை மூன்று முக்கிய கிரகங்கள் பார்க்கிறார்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையில் திடீர் இடைவெளி ஏற்படலாம். பெண்களுக்கு பண வரத்து திருப்தி தரும். மாணவர்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள்..

### ரிஷபம்

சுக்கிரனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் பண வரத்து திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது அவசியம். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார்.

தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும்.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பெண்களுக்கு உங்களது செயல்களில் மற்றவர் குறை காண நேரலாம். மாணவர்களுக்கு சக மாணவர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. கவனத்தை சிதறவிடாமல் படிப்பது அவசியம்.

### மிதுனம்

புதனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் பண வரத்து திருப்தி தரும். சிந்தித்து செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். பயணங்களின் போதும் வாகனங்களை ஓட்டி செல்லும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும்.

புதிய ஆர்டர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப் பளு குறைந்து மன மகிழ்ச்சியடைவார்கள். மேல் அதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும்.

புதிய வேலைக்கான முயற்சிகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும்.

கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தருவதாக இருக்கும். பெண்களுக்கு எடுத்த காரியத்தை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும்.

வீண் செலவுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். அடுத்தவரை பார்த்து எதையும் செய்ய தோன்றலாம். அதனை விட்டு விடுவது நல்லது.

### கடகம்

சந்திரனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து நிதானமாக நடந்து கொள்வது வியாபாரம் நன்கு நடக்க உதவும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். பெண்களுக்கு பயணங்களின் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற மிகவும் கவனமாக படிக்க வேண்டி இருக்கும்.

### சிம்மம்

சூரியனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் மற்றவர்களால் மன கஷ்டம் ஏற்படும். அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. எந்த ஒரு காரியமும் மந்தமாக நடக்கும். எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக தள்ளிப் போன பதவி உயர்வு வர வேண்டிய பணம் வந்து சேரலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய பாடுபடுவீர்கள். பெண்களுக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் ஏற்பட்டு நீங்கும். தெளிவாக பாடங்களை படிப்பது நல்லது.

எதிலும் நல்லது கெட்டதை யோசித்து அதன் பின்பு அந்த காரியத்தில் ஈடுபடுவது நன்மை தரும். வேலையில் கூடுதல் கவனம் தேவை. மன தெளிவு உண்டாகும். அறிவு திறன் அதிகரிக்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும்.

### கன்னி

புதனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல மனநிலையில் மாற்றம் இருக்கும். தரும சிந்தனை உண்டாகும். பண நெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். ஆர்டர்கள் கிடைத்தாலும் சரக்குகள் அனுப்புவது தாமதமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆனாலும் எதிர்பார்த்தபடி இருப்பது சிரமம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவார்கள்.

கணவன், மனைவிக்கு இடையில் கருத்து வேற்றுமை வராமல் இருக்க மனம் விட்டு பேசுவது நல்லது. எதிலும் திருப்தி இல்லாதது போல் தோன்றும். பெண்களுக்கு வீண் கவலைகள், எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும்.. உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகள் கூறுவதை மறுத்து பேசாமல் அனுசரித்து செல்வது நன்மையை தரும்.

### துலாம்

சுக்கிரனை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வெளி வட்டார தொடர்புகளில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். புதிய ஆர்டர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் பல தடங்கல்கள் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படும்.

சிற்றின்ப சுகம் குறையும். பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு பணத் தேவை பூர்த்தியாகும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை ஏற்படும். டென்ஷனை குறைத்து பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்க பெறுவார்கள். பொருளாதாரம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமாக பலன் தரும்.

### விருச்சிகம்

செவ்வாயை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

மற்றவர்கள் உங்களின் பிரச்சனைகளுக்கு வலிய வந்து உதவிகள் செய்வார்கள். விருப்பம் இல்லாத இடமாற்றம் உண்டாகலாம்.

தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும்.

புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவதில் இருந்த தாமதம் நீங்கும்.

குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையில் நெருக்கம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு மனதில் இருக்கும் திட்டங்களை சரியாக செயல்படுத்துவார்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். கஷ்டமாக தோன்றிய பாடங்களை எளிதாக படித்து முடிப்பீர்கள்.

வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக செய்து முடிப்பீர்கள். திறமை அதிகரிக்கும்.

### தனுசு

குருவை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் வீண் செலவு குறையும். சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செய்ய முடியாத சூழ்நிலை வரும். எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பார்கள். எனவே கவனமாக இருப்பது நல்லது.

நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடந்தாலும் சற்று நிதானமாக இருக்கும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, வீண் அலைச்சல் குறையும்.

குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே இடைவெளி குறைய மனம் விட்டு பேசுவது நல்லது. பெண்களுக்கு விருப்பம் இல்லாமல் பயணம் செல்ல நேரிடலாம். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் நீங்கும்..

### மகரம்

சனியை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் பண வரத்து மன மகிழ்ச்சியை தரும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மை நன்மையை தரும்.

நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். பெண்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுகட்டைகள் அகலும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகரிக்கும். பாடங்கள் எளிமையாக தோன்றினாலும் கவனமாக படிப்பது அவசியம்.

தாய் தந்தையின் உடல் நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மெத்தன போக்கு காணப்பட்டாலும் குரு பார்வையால் தேவையான பண வரத்தும் இருக்கும்.

### கும்பம்

சனியை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த இழுபறியான நிலை மாறும். சாதாரணமாக செயல்பட்டாலும் அது மிகப் பெரிய வெற்றி பெறும். வாகனப் பிராப்தி ஏற்படும். பண வரத்து கூடும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பெருமைகள் உண்டாகும். அதிக நேரம் உழைக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகள் உங்களை அனுசரித்து செல்வார்கள்.

குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். மனதில் இருப்பதை வெளியில் சொல்லாமல் செய்கையில் காட்டுவார்கள். பெண்களுக்கு எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். ஆனால் வேலை செய்பவர்களிடம் கோபப்படாமல் தட்டி கொடுத்து வேலை வாங்குவது நன்மையை தரும்.

### மீனம்

குருவை ராசிநாதனாக கொண்ட உங்களுக்கு இந்த வாரம் பயணங்கள் குறிக்கோள் உள்ளவைகளாக மாறும். அலைச்சல், உடல்நலக் கேடு போன்றவை அகலும். திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. மனதில் வீண் கவலைகள் நீங்கும். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது.

சுபச் செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். ஆனால் புதிய ஆர்டர்கள் வந்து சேரும். தொழில் தொடர்பான செலவு கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகள் முடியாமல் மன சங்கடத்திற்கு ஆளாக நேரிடும்.

குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். பெண்களுக்கு எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவதை குறிக்கோளாக கொண்டு செயல்படுவீர்கள்..

மனக் குழப்பங்கள் நீங்கும். தைரியம் உண்டாகும். தடைபட்ட காரியங்கள் நன்கு நடந்து முடியும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கலாம்.

# எல்பிஜி காஸ் தட்டுப்பாடு: கடும் சிரமத்தை சந்திக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள்



**சென்னை, ஏப்.19:**
சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஆட்டோ மற்றும் கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். பங்க்-குகளில் காஸ் நிரப்ப 6 மணி நேரம் வரை காத்திருக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் மற்றும் விநியோகச் சங்கிலி பாதிப்பு காரணமாக, எல்.பி.ஜி இறக்குமதி குறைந்துள்ளது. பற்றாக்குறையை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு ஆலோசிக்கிறது.

இதற்கிடையில், வாகனங்களுக்கான எல்.பி.ஜி, சி.என்.ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்.பி.ஜி. மற்றும் சி.என்.ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றனர். இதுபோல, அதிகரிக்கும் பெட்ரோல்,

டீசல் விலை உயர்வால் பலர் தங்கள் வாகனங்களின் கட்டமைப்பை எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயு மூலம் இயக்கும் வகையில் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயுக்கு கடந்த சில நாட்களாகவே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நகரின் முக்கிய பகுதிகளான வடபழனி, எழும்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் உள்ள எரிவாயு நிரப்பும் பங்க்-குகள் மூடப்பட்டுள்ளன.

அதேநேரத்தில், திறந்திருக்கும் ஒரு சில பங்க்-குகளில் கூட்டம் அலைமோதுகிறது. கீழ்ப்பாக்கம், மீனம்பாக்கம் உள்பட சில இடங்களில் காஸ்நிரப்புவதற்காக, நெடுந் தொலைவுக்கு வரிசையில் சுமார் 6 மணி நேரம் வரைகாத்திருந்தனர். குறிப்பாக, மீனம்பாக்கத்தில் உள்ள ஒரு பங்க்-கில்காஸ் நிரப்ப சுமார் 3 கி.மீ. வரை ஆட்டோக்கள் அணிவகுத்து நின்றன.

இதுகுறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாவது: சென்னையில் கடந்த சில நாட்களாக, எல்பிஜி காஸ் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

திறக்கப்பட்டுள்ள சில பங்க்-குகளில், காஸ் நிரப்ப, காலை 6 மணி நேரம் வரை காத்திருக்கும் நிலை உள்ளது. காஸ் நிரப்பவே அதிக நேரம் செலவாவதால், சவாரி செல்வது குறைந்து அன்றாட வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ எல்.பி.ஜி காஸ்-ல் 20 கி.மீ. வரை ஆட்டோ ஓடும். ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 8 கி.மீ. வரை மட்டுமே செல்லும். இதனால், பெரும்பாலான ஆட்டோக்கள் எல்.பி.ஜி காஸ்-க்கு மாறிவிட்டன. இப்போது 12 கிலோ கொள்ளளவு கொண்ட சிலிண்டர் ஆட்டோவில் பொருத்தப்பட்டுள்ளன. பெட்ரோல் சுமார் 2 லிட்டர் வரை மட்டுமே பிடிக்கும். இதனால், எரிவாயுவை நம்பியே தொழில் செய்ய வேண்டியுள்ளது. நீண்ட நேரம் காஸ் நிரப்ப காத்திருக்க வேண்டியுள்ளதால், வாடகைக்கு ஆட்டோ எடுத்து ஓட்டுபவர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### ஐ.எஸ்.எல். கால்பந்து: ஒடிசா - முகமதின் ஆட்டம் டிரா

**சென்னை, ஏப்.19:**
14 அணிகள் இடையிலான 12-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதலிடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டத்தை வெல்லும்.

இந்த போட்டி தொடரில் புவனேஸ்வரில் இன்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிசா எப்.சி. - முகமதின் எஸ்.சி. அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒடிசா அணி சார்பில் வி.பி. சுஹைர் ஆட்டத்தின் 40-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

முகமதின் எஸ்.சி. அணி சார்பில் அடிசன் சிங் ஆட்டத்தின் 57-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இறுதியில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்திருந்தனர்.

இந்த நிலையில் ஒடிசா எப்.சி. - முகமதின் எஸ்.சி. அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

### ஐ.எஸ்.எல். கால்பந்து: டெல்லி அணியை வீழ்த்தி சென்னை வெற்றி

**சென்னை, ஏப்.19:**
14 அணிகள் இடையிலான 12-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதலிடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டத்தை வெல்லும்.

இந்த போட்டி தொடரில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் இன்று மாலை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. - ஸ்போர்ட்டிங் கிளப் டெல்லி அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்னை அணி சார்பில் பருக் சவுத்ரி ஆட்டத்தின் 11-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

டெல்லி அணி எந்த கோலும் அடிக்கவில்லை. இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் சென்னை அணி 1 -0 என்ற கோல் கணக்கில் டெல்லி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இது சென்னை அணிக்கு 3-வது வெற்றியாகும்.

### பார்சிலோனா ஓபன்: இத்தாலி வீரர் காலிறுதிக்கு முன்னேற்றம்

**மாட்ரிட், ஏப்.19:**
ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் இத்தாலியின் லாரன்சோ முசெட்டி, பிரான்சின் கொரன்டின் மவுடெட் உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய முசெட்டி 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# ஆற்று மணல் பதுக்கி வைத்திருந்ததாக வழக்கு: எம்.ஆர்.விஜயபாஸ்கர் சரணடைய ஏப்.28 வரை அவகாசம்





**சென்னை, ஏப்.19:**
சட்டவிரோதமாக ஆற்று மணலை பதுக்கி வைத்திருந்ததாக பதியப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் சரணடைய முன்னாள் அமைச்சரான எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு ஏப். 28 வரை அவகாசம் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆற்று மணலை சட்டவிரோதமாக உரிய ஆவணங்கள் இல்லாமல் பதுக்கி வைத்திருந்ததாக அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும், கரூர் அதிமுக வேட்பாளருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது கரூர் டவுண் போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கில் அவருக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கிய கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சம்பந்தப்பட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைய மார்ச் 31 வரை அவகாசம் வழங்கியிருந்தது.

இந்த காலக்கெடுவை நீட்டிக்கக்கோரி விஜயபாஸ்கர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில், கரூர் தொகுதியில் அதிமுக சார்பில் வேட்பாளராக போட்டியிடுவதால் மார்ச் 30 அன்று வேட்பு மனு தாக்கல் செய்ததாலும், மார்ச் 31 அன்று மகாவீர் ஜெயந்தி விடுமுறை என்பதாலும் நீதிமன்றத்தில் சரணடைய முடியவில்லை. எனவே இந்த அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, மனுதாரரான எம்.ஆர்.விஜயபாஸ்கர் நீதிமன்றத்தில் சரண் அடைவதற்கான அவகாசத்தை ஏப்.28-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஏப்.29, ஏப்,30 மற்றும் மே 1 ஆகிய தேதிகளில் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் காலை 10.30-க்கு ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

# “எனது மரணத்துக்காக ஒரு கூட்டம் காத்திருப்பு” - பாமக நிறுவனர் ராமதாஸ் கடும் வேதனை



**விழுப்புரம், ஏப்.19:**
கடந்த சில தினங்களுக்கு முன் சேலம் பிரச்சாரக் கூட்டத்தில் மயங்கி விழுந்த பாமக நிறுவனர் ராமதாஸ் சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உடல்நலம் சீராகி தைலாபுரம் திரும்பினார். அங்குள்ள தனது இல்லத்தில் நேற்று அவர் தபால் வாக்கு செலுத்தினார்.

பின்னர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது ‘நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்’ என்று இருந்த எனது குடும்பத்தை சிதைத்த பெருமை அன்புமணியின் மனைவி சவுமியாவைச் சேரும். என் பேத்திகளையும் மயக்கி, மாற்றி விட்டார். ‘என்னை குல தெய்வம்’ என்று பேசி விட்டு, அவரிடம் இருக்கும் பணத்தை வைத்து, என்னுடன் இருந்த கட்சியின் முன்னோடிகளை பொய் பேசும் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று விட்டார்.

உடல் நலம் சரியில்லாமல் நான் மருத்துவமனையில் இருந்தபோது, ‘நான், பார்க்க அனுமதிக்கவில்லை’ என்று பொய்யர்கள் சொல்கின்றனர். அவர் பெற்ற பிள்ளைகளும் பொய் சொல்வதில் வல்லவர்கள். பாசத்தை வேரறுத்து குளிர் காய்கின்றனர் என்றார்.

அப்போது குறுக்கிட்ட அவரது மகள் ஸ்ரீகாந்தி, “மருத்துவமனையில் இருமுறை இருந்தபோது யாருமே வந்து பார்க்கவில்லை, போன் கூட செய்யவிலலை என்று கூறுங்கள்” என்று தந்தையிடம் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய ராமதாஸ், “பொய்யர் குடும்பத்தினர் என்னை வந்து பார்க்கவில்லை, போன் கூட செய்யவில்லை. எனக்கு ஆஞ்சியோ செய்த போது, தமிழகத் தலைவர்கள் அனைவரும் நலம் விசாரித்த போதும் கூட அன்புமணி மற்றும் அவரது குடும்பத்தினர் வந்து பார்க்கவில்லை. ‘எனக்கு வயதாகிவிட்டது, செயல்பட முடியாது’ என்று பொய்யர் கூட்டம் தொடர்ந்து கூறி வருகிறது. நான் தினசரி கால் முதல் தலை வரை அனைத்துக்கும் பயிற்சி செய்கிறேன்.

உடல் நலம் ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் ஒரு வாரத்துக்கு பிரச்சாரம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கினறனர்.

சிறப்பாக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். முடியுமா என்று தெரியவில்லை. நமது பாமக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பாட்டாளி சொந்தங்கள் அனைவரும் முழு ஆதரவு அளித்து வாக்களிக்க வேண்டும்.

பாமகவை என்னிடம் இருந்து அபகரித்து விட்டனர். எப்போது எனக்கு மரணம் வரும் என ஒரு கூட்டம் காத்திருக்கிறது. மகன், மருமகள், பேத்திகள் கூட அப்படி நினைக்கின்றனர். அன்புமணி நல்ல பிள்ளை இல்லை.

குழப்பத்தை ஏற்படுத்தி கட்சியை அபகரித்து விட்டார். ‘எனக்கு மனநிலை சரியில்லை’ என்று கூறுகிறார். என்னுடைய படத்தை அவர்கள் போடக்கூடாது என வழக்கு தொடரப்பட்டுள்ளது. பாமக பலவீனமடையாது” என்றார்.

# தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக தமிழகம் போராடி வெற்றி பெற்றுள்ளது: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஏப்.19:**
தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக தமிழகம் போராடியது, அதன் பலனாக வென்றது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்தது. இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: டெல்லியை வீழ்த்தியது தமிழகம். டெல்லியின் ஆணவத்தையும், அதற்கு துணை போனவர்களையும் ஏப்.23-ம்தேதி ஒருசேர வீழ்த்துவோம்.

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக தமிழகம் போராடியது, அதன் பலனாக வென்றது. இந்திய ஜனநாயகத்தில் யாருக்கு பிரதிநிதித்துவம் இருக்கும், யாருடைய குரலுக்கு இடமிருக்கும் என்பதுதான் தொகுதி மறுவரையறை. அது மத்திய அரசை பலப்படுத்துவதாக இருக்க வேண்டுமே ஒழிய,



பலவீனப்படுத்துவதாக இருக்கக் கூடாது.

பெரியார் -அண்ணா - கருணாநிதி காட்டிய பாதையில், தமிழகம் எப்போது நீதி, கண்ணியம், கூட்டாட்சி ஆகியவற்றுக்காகவே நின்றுள்ளது. தென்னிந்தியா ஒன்றிணைந்தது; நமது குரல் கேட்கப்பட்டது; ஜனநாயகம் வென்றது. நாம் தொகுதி மறுவரையறையை எதிர்க்கவில்லை. நன்கு சிந்தித்து, அனைவரையும் கலந்தாலோசித்து, அனைவரும் ஏற்றுகொண்ட, நியாயமான நடைமுறையையே நாம் வலியுறுத்தினோம்.

தமிழகத்தின் உரிமைகளுக்கும், நமது பண்பாடு மற்றும் அடையாளத்துக்கும், இந்திய கூட்டாட்சிக்கும் ஊறு வரும் போது, ஒற்றுமையுடன் நிற்பது தான் நமது உறுதி. இந்த அநீதியை எதிர்த்து ஓரணியில் நின்ற அனைத்துத் தோழமைக் கட்சிகளுக்கும் என்னுடைய நன்றி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே, மசோதா தோல்வியடைந்ததையடுத்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் அக்கட்சியினர் இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் கொண்டாடினர்.

## க்ரைம் கார்னர்

### பெங்களூருவில் ரூ.23.61 கோடி போதைப் பொருள் பறிமுதல்

**பெங்களூரு, ஏப்.19:**
பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து பாகலூர், பானசவாடி உள்ளிட்ட 8 காவல் நிலைய சரகத்துக்குட்பட்ட இடங்களில் போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் மொத்தமாக 5.91 கிலோ எம்டிஎம்ஏ, 21.82 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 1.51கிலோ கோக்கைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக வெளிநாட்டினர் 3 பேர் (2 பெண்கள் ) உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 5 பேர் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள் ஆவர். கைதானவர்களிடம் இருந்து 3 கார், 2 இரு சக்கர வாகனங்கள், 9 செல்போன்கள், ரூ.50 ஆயிரத்து 500 ரொக்கம், 28 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.23.61 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கைதான 10 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், ‘கூரியர் மூலம் வெளிநாட்டில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் போதைப் பொருளை வர வழைத்து, பெங்களூருவில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்தது’ தெரிய வந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### டிஜிட்டல் கைது மோசடி மூதாட்டியிடம் ரூ.26 லட்சம் பறிப்பு

**போபால், ஏப்.19:**
மத்திய பிரதேச மாநிலம் போபாலை சேர்ந்தவர் அருணா சின்சோல்கர் (64). இவரை கடந்த ஆண்டு நவம்பரில் வாட்ஸ் அப் மூலம் தொடர்பு கொண்ட நபர்கள், தீவிரவாத தடுப்புப் படையிலிருந்து பேசுவதாக மிரட்டி அவரை டிஜிட்டல் கைது செய்தனர். பின்னர் மிரட்டி அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.26.65 லட்சத்தை வேறு கணக்குகளுக்கு மாற்றியுள்ளனர். சம்பவம் நடந்து சில மாதங்களுக்கு பின்னர், தான் ஏமாற்றப்பட்டது அருணாவுக்குத் தெரியவந்தது. இதையடுத்து அவர் போபால் சைபர் கிரைம் போலீஸில் புகார் கொடுத்தார். இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரித்த உச்ச நீதிமன்றம், வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க உத்தரவிட்டது. அதன்படி சிபிஐ அதிகாரிகள் எப்ஐஆர் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### பைக் சாகசம்: அண்ணா பல்கலை. ஊழியருக்கு ரூ.3,000 அபராதம்

**சென்னை, ஏப்.19:**
விஜய் பிரச்சார வாகனத்தின் முன் பைக் சாகசத்தில் ஈடுபட்ட அண்ணா பல்கலைக்கழக ஊழியருக்கு போக்குவரத்து போலீஸார் அபராதம் விதித்துள்ளனர்.

தவெக தலைவர் விஜய் சென்னையில் ஆயிரம் விளக்கு, தி.நகர் மற்றும் எழும்பூர் ஆகிய தொகுதிகளில் கடந்த புதன்கிழமை ரோடு ஷோ நடத்தினார். அப்போது ஆயிரக்கணக்கானோர் திரண்டு விஜய்யை வரவேற்றனர்.

கோட்டூர்புரம் காந்தி மண்டபம் சாலை அருகே விஜய்யின் பிரச்சார வாகனம் சென்றபோது பைக்கில் சென்ற நபர் ஒருவர் ஹெல்மெட் அணியாமல் இரு கைகளையும் விட்டு விட்டு பைக் சாகசத்தில் ஈடுபட்டார்.

இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது. இதுகுறித்து போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில் பைக் சாகசத்தில் ஈடுபட்டது சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி வரும் மனோஜ்குமார் என்பது தெரியவந்தது.

அவர் மீது ஹெல்மெட் அணியாமல் சென்றது, அதிவேகமாக வாகனத்தை இயக்கியது, உடைந்த நம்பர் பிளேட், ஆவணங்கள் சரியாக வைக்காதது உள்ளிட்ட காரணங்களுக்காக ரூ.3,000 அபராதம் விதித்தனர். மேலும் அவரது பைக்கையும் பறிமுதல் செய்தனர்.

## வணிகச் செய்திகள்

### நெட்ஃபிளிக்ஸ் இணை நிறுவனர் ரீட் ஹேஸ்டிங்ஸ் விலகல்

**சென்னை, ஏப்.19:**
உலகின் முன்னணி ஓடிடி தளமான நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரும், தற்போதைய தலைவருமான ரீட் ஹேஸ்டிங்ஸ், வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள வருடாந்திர கூட்டத்துடன் தனது பதவியிலிருந்து விலகுகிறார்.

இதன்மூலம், நிறுவனத்துடனான அவரின் 29 ஆண்டுகால பயணம் முடிவுக்கு வருகிறது. 1999-ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சிஇஓ-ஆக பொறுப்பேற்று, ‘பிளாக்பஸ்டர்’ போன்ற நிறுவனங்களுடன் போட்டியிட்டு, நெட்ஃபிளிக்ஸை ஒரு டிவிடி விநியோக நிறுவனத்திலிருந்து, உலகளாவிய ஓடிடி ஜாம்பவானாக மாற்றிய பெருமை இவரைச் சாரும்.

கடந்த 2023-ஆம் ஆண்டு, ஜனவரியிலேயே சிஇஓ பொறுப்பிலிருந்து விலகி, டெட் சரண்டோஸ், கிரெக் பீட்டர்ஸ் ஆகியோரிடம் பொறுப்புகளை ரீட் ஹேஸ்டிங்ஸ் ஒப்படைத்திருந்தார். தற்போது இயக்குநர்கள் குழுவிலிருந்தும் அவர் வெளியேறுகிறார். இனிவரும் காலங்களில் சமூகத் தொண்டு மற்றும் பிற தனிப்பட்ட விருப்பங்களில் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளதாக ரீட் ஹேஸ்டிங்க்ஸ் தெரிவித்துள்ளார். மேலும், ‘நெட்ஃபிளிக்ஸ் என் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது’ என உருக்கமாகக் குறிப்பிட்டுள்ள அவர், தற்போது அமெரிக்காவின் உடா மாகாணத்தில் பனிச்சறுக்கு விடுதி ஒன்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

# “பழைய மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை கொண்டுவரத் தயாரா?” - பிரியங்கா காந்தி சவால்

**புதுடெல்லி, ஏப்.19:**

“அனைத்துக் கட்சிகளாலும் நிறைவேற்றப்பட்ட பழைய மகளிர் நல மசோதாவை அவர்கள் கொண்டுவரட்டும். யார் பெண்களுக்கு எதிரானவர்கள் என்பது அப்போது தெரியும்” என்று காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி வத்ரா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய பிரியங்கா காந்தி வத்ரா, “அனைத்துக் கட்சிகளாலும் நிறைவேற்றப்பட்ட முந்தைய மகளிர் நல மசோதாவை அவர்கள் கொண்டுவரட்டும். இதற்காக வரும் திங்கள் கிழமையே நாடாளுமன்றத்தைக் கூட்டி, மசோதாவை கொண்டுவரட்டும். யார் பெண்களுக்கு எதிரானவர்கள் என்பது அப்போது தெரியும். நாங்கள் அனைவரும் உங்களுக்கு(அரசுக்கு) ஆதரவாக வாக்களிப்போம்” என குறிப்பிட்டார்.



மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறாதது குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, “நாங்கள் பெண்களுக்கு எதிரானவர்கள் அல்ல. 33% இட ஒதுக்கீட்டுக்காக நாங்கள் நீண்ட காலமாக பணியாற்றி வருகிறோம். 2023ம் ஆண்டின் திருத்த மசோதாவை நாங்கள் ஒருமனதாக ஆதரித்து நிறைவேற்றினோம். இருப்பினும் தற்போது அதில் தொகுதி மறுவரையறை தொடர்பான ஒரு பிரிவைச் சேர்த்தனர். இதன்மூலம், மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்துவிட்டனர். இந்த மூன்று மசோதாக்களையும் ஒன்றாகக் கொண்டு வந்ததன் மூலம் அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினர்.

இதன் மூலம், எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் எந்தவொரு தொகுதி மறுவரையறைச் சட்டத்தையும் அவையில் எளிய பெரும்பான்மையின் மூலமே நிறைவேற்றவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியும் என்ற நிலையை உருவாக்க முயன்றனர்.

மகளிர் இட ஒதுக்கீட்டை தற்போதுள்ள 543 உறுப்பினர்களுக்குள்ளேயே செய்திருக்க வேண்டும். அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு அல்லது சாதிவாரி கணக்கெடுப்பு முடிந்த பிறகு அடுத்த தேர்தலின்போது நீங்கள் இதை முழுமையாகச் செயல்படுத்தி இருக்கலாம். அரசியலமைப்பின் கட்டமைப்பையே மாற்றி அமைத்து நிர்வாக அதிகாரத்தை தங்கள் கைகளுக்குள் எடுத்துக்கொள்வதே அவர்களின் உண்மையான நோக்கமாக உள்ளது” என விமர்சித்தார்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறாதது வேதனை அளிப்பதாக மாநிலங்களவை உறுப்பினர் சுதா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சுதா மூர்த்தி, “நான் வருத்தப்படுகிறேன். கொள்கை வகுப்பதில் பெண்கள் ஒரு அங்கமாக ஆவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. ஒருநாள் அது நடக்கும் என நம்புகிறேன். எந்தவொரு சமூக மாற்றத்துக்கும் காலம் தேவை” என கூறினார்.

# கர்நாடகா கார் விபத்தில் ஒரே குடும்பத்தில் 9 பேர் உயிரிழப்பு

**பெங்களூரு, ஏப்.19:**

கர்நாடக மாநிலம் யாதகிரி மாவட்டம் சிர்வாரை சேர்ந்த கிருஷ்ணா நாயக் (56) நேற்று தனது குடும்பத்தினர் 9 பேருடன் சோராப்பூரில் உள்ள வேணுகோபால் சுவாமி கோயிலுக்கு சென்றார்.

அங்கு தரிசனம் முடிந்து காரில் சிர்வார் நோக்கி திரும்பினர். ஷாந்தாப்பூர் அருகே கார் சென்றபோது பெங்களூருவிலிருந்து குல்பர்கா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து மீது கார் வேகமாக மோதியது. இதில் இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயின.

இதில் காரில் பயணித்த கிருஷ்ணா நாயக் (56), அவரது மனைவி ஆனந்த கலா (50), அவரது மகன் சரணப்பா (26) உட்பட 6 பேர் உயிரிழந்தனர். சரணப்பாவின் மனைவி நிசர்கா (24), மகன் சித்தார்த் (3), மகள் சசிகலா (2) ஆகிய மூவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். பேருந்தில் பயணித்த 30-க்கும் மேற்பட்ட பயணிகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். விபத்து குறித்து போலீஸார் கூறுகையில், “ஒரே குடும்பத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். முதல்கட்ட விசாரணையில் கார் டயர் வெடித்ததில் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டது தெரிய வந்துள்ளது” என்றனர்.

# பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173-வது ஆண்டு நிறைவு: அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம்

**தானே, ஏப்.19:**



பயணிகள் ரயில் போக்குவரத்து தொடங்கி 173-வது ஆண்டு நிறைவு பெற்றுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது பயணிகள் ரயில் போக்குவரத்து 1853-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் தேதி மகாராஷ்டிர மாநிலம் போரி பந்தர் (மும்பை) மற்றும் தானே இடையே தொடங்கப்பட்டது. இந்த போக்குவரத்து தொடங்கப்பட்டு நேற்றுடன் 173-வது ஆண்டு நிறைவடைந்துள்ளது.

இதுதொடர்பாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் தானே ரயில்வே பாலம், அம்ரித் பாரத் ரயில் ஆகிய புகைப்படங்களை ஒருங்கிணைத்து ஒரே புகைப்படமாக நேற்று வெளியிட்டு ‘பயணம் தொடர்கிறது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய ரயில்வேயின் 173 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில், தானே ரயில்வே பாலம், ஒரு பழங்கால ரயிலையும் சித்தரிக்கும் நம்பகமான காப்பகப் புகைப்படத்தையும் நாங்கள் பகிர்ந்துள்ளோம். இதன் மூலம், வரலாற்றுப் பதிவு சரிபார்க்கப்பட்ட ஆவணங்களுடன் ஒத்துப்போவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மத நடைமுறைகள் கோர்ட்டு ஆய்வுக்கு உட்பட்டவை: சபரிமலை வழக்கில் நீதிபதிகள் கருத்து

**புதுடெல்லி, ஏப்.19:**



*சபரிமலை அய்யப்பன் கோவிலில் 10 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், அனைத்து வயது பெண்களும் சபரிமலை அய்யப்பன் கோவிலில் நுழையலாம் என்று கடந்த 2018-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு அரசியலமைப்பு சட்ட அமர்வு தீர்ப்பு அளித்தது.*

*அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதர வழிபாட்டு தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு குறித்த மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இம்மனுக்களை விசாரிக்க தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையில் 9 நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு சட்ட அமர்வு அமைக்கப்பட்டது.*

*மத நம்பிக்கைகளை கோர்ட்டு கேள்வி எழுப்ப முடியாது என்று தேவசம் போர்டு சார்பில் ஏற்கனவே வாதிடப்பட்டு இருந்தது. இந்நிலையில் நேற்று மீண்டும் இம்மனுக்கள் விசாரணைக்கு வந்தன. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் ராஜீவ் தவான், “மனசாட்சி சுதந்திரம் பரந்து விரிந்தது. ஒரு தனிநபர், மதத்தை கேள்வி கேட்கலாம். ஆனால் அது மரியாதையுடனும், நம்பகமான முறையிலும் இருக்க வேண்டும்.*

*அப்போது, நீதிபதி பி.வி. நாகரத்னா குறுக்கிட்டு “மனசாட்சி என்பது மதத்தை விட பெரியது என்று சொல்கிறீர்களா? மனசாட்சி, மதச்சாயத்தை பூச வேண்டுமா?” என்று கேட்டார்.*

*நீதிபதி அமானுல்லாவும் அதே கருத்தை தெரிவித்தார்.*

*நீதிபதி அரவிந்த் குமார், “மதப்பிரிவு சார்ந்த நடைமுறைகள், நீதிமன்ற ஆய்வுக்கு உட்படுத்தப்படலாம்” என்று கருத்து தெரிவித்தார்.*

# பயணிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய இண்டிகோ நிறுவனம்

**புதுடெல்லி, ஏப்.19:**




*டெல்லியில் தெளிவற்ற வானிலையால், விமான பயணிகளுக்கு இண்டிகோ விமான நிறுவனம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. டெல்லியின் பல்வேறு நகரங்களில் நீடித்து வந்த வெப்பநிலையால் மக்கள் தவித்து வந்த சூழலில், பரவலாக கனமழை பெய்தது.*

*இதேபோன்று இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ததுடன், மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றும் வீசியது.*

*இதனால், டெல்லி நகரின் பல பகுதிகளில் மழை பெய்து குளிர்ச்சியான சூழல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, வளிமண்டல நிலையற்ற தன்மை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று டெல்லி மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.*

*இன்று பகுதியளவு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கின்றது. இதனை முன்னிட்டு, டெல்லியில் விமான இயக்கங்கள் தொடர்பான அறிவுறுத்தல்களை இண்டிகோ நிறுவனம் வழங்கியுள்ளது. நிலைமை மேம்பட்டதும் அதுபற்றிய தகவலை எங்களுடைய குழுக்கள் கண்காணித்து, உங்களுக்கு தெரிவிக்கும் என்றும் தெரிவித்து உள்ளது.*

*நீங்கள் இன்று பயணம் மேற்கொள்கிறீர்கள் என்றால், உங்களுடைய விமானத்திற்கான நிலையை பற்றி இணையதளங்கள் அல்லது செயலிகளுக்கு சென்று பரிசோதனைசெய்து கொள்ளுங்கள்.*

*உங்களுடைய பொறுமையையும், புரிதலையும் நாங்கள் பாராட்டுகிறோம். உங்களுடைய வசதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே எப்போதும் எங்களுடைய முன்னுரிமையாகும் என தெரிவித்து உள்ளது.*

# மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்து விவாதிக்க கோரி மாநிலங்களவையில் தி.மு.க. நோட்டீஸ்

**புதுடெல்லி, ஏப்.19:**



நாடாளுமன்றம் மற்றும் சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒ துக்கீடு வழங்க மகளிர் இடஒதுக்கீடு மசோதா கடந்த 2023-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதனை 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அமல்படுத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. ஆனால் புதிய மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு பிறகு தொகுதிகளை மறுவரையறை செய்து, 2029-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அமல்படுத்துவதாக மத்திய அரசு அறிவித்து இருந்தது.

இந்தநிலையில் 2011-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்து, மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு நினைத்தது. அதற்காக அரசியலமைப்பு சட்டத்தின் 131-வது பிரிவில் திருத்தங்கள் கொண்டுவந்தது. இந்த திருத்த மசோதாவுடன் தொகுதிகள் மறுவரையறை மசோதா மற்றும் யூனியன் பிரதேச சட்டங்களின் திருத்த மசோதா ஆகிய மசோதாக்களும் முன்மொழியப்பட்டன.

இவற்றை விவாதித்து நிறைவேற்றுவதற்காக 3 நாட்கள் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை ஆளும் தரப்பினர் ஏற்பாடு செய்தனர். பட்ஜெட் கூட்டத்தொடரின் இறுதியில் இதுகுறித்த அறிவிப்பு வந்தபோது எதிர்க்கட்சிகள் உடனடியாக எதிர்ப்பு தெரிவித்தன. நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் அன்றைய தினமே 3 மசோதாக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இதன் மீது விவாதம் தொடங்கியது. விவாதத்துக்கு 18 மணி நேரம் வரை சபாநாயகர் ஓம் பிர்லா நேரம் வழங்கினார். ஆனால் அதையும் தாண்டி விவாதம் நடைபெற்றது. நேற்று முன்தினம் நள்ளிரவு 1.25 மணி வரை விவாதம் தொடர்ந்தது.

இந்த விவாதங்களில் அனல் பறக்கும் வாதம் நடந்தன. இந்த திருத்த மசோதாக்களால் தென் மாநிலங்கள், பஞ்சாப் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் பிரதிநிதித்துவம் குறையும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். அரசியலமைப்பு திருத்த மசோதாக்களை நிறைவேற்ற அவையில் இடம்பெற்று வாக்களிப்பவர்களில் 3-ல் இருபங்கு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்கு அளிக்க வேண்டும். பதிவான 528 வாக்குகளில் 3-ல் 2 பங்கு என்பது 352 ஆகும். ஆனால் மசோதாவுக்கு ஆதரவாக 298 வாக்குகளே பதிவாகி இருந்தன. 54 வாக்குகள் குறைவாக இருந்தன. இதனால் மத்திய அரசு கொண்டு வந்த மசோதா தோல்வி அடைந்தது. இதனை சபாநாயகர் அவையில் அறிவித்தார். சபாநாயகர், அவையில் பதிவான வாக்குகளை குறிப்பிட்டு, “அவைக்கு வருகை தந்து வாக்களித்த உறுப்பினர்களில் 3-ல் இருபங்கு பெரும்பான்மை இல்லாததால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை” என்று கூறினார்.

இந்நிலையில் நாடாளுமன்ற கடைசிநாள் அமர்வு நேற்று நடைபெற்றநிலையில் மகளிர் இடஒதுக்கீடு தொடர்பாக தனிநபர் மசோதாவை தாக்கல் செய்ய அனுமதி கோரி, தி.மு.க. எம்.பி. வில்சன் நோட்டீஸ் வழங்கியுள்ளார். தற்போதுள்ள 543 இடங்களின் எண்ணிக்கையை மாற்றாமல் இடஒதுக்கீடு செய்யவும், அடுத்த தேர்தல் முதலே பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் வகையிலான மசோதா நிறைவேற்றவும் அதில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொகுதி மறுவரையறை அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பு எதையும் மேற்கொள்ளாமல் மகளிர் இடஒதுக்கீடு வழங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி அடைந்த நிலையில், 2023ல் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு வெறும் ஏட்டளவில் மட்டும் இருக்கக்கூடாது எனக்கூறி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இந்நிலையில் நாடாளுமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

# ஜனவரி-மார்ச் காலாண்டில் இந்திய ஸ்மார்ட்போன் சந்தை 3% சரிவு!

**புதுடெல்லி, ஏப்.19:**

இந்தியாவின் ஸ்மார்ட்போன் சந்தை நடப்பாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 3 சதவீத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இது கடந்த 6 ஆண்டுகளில் காணப்படாத மிக மோசமான சரிவாகும்.

ஸ்மார்ட்போன்களில் பயன்படுத்தப்படும் ‘மெமரி’ சிப்களின் விலை கடந்த 9 மாதங்களில் மட்டும் 4 மடங்கு உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வினால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

இதனால் நிறுவனங்கள் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, ரூ.15,000-க்கும் குறைவான விலை கொண்ட பட்ஜெட் ரக போன்களின் விற்பனை இந்த விலை உயர்வால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வரும் ஏப்ரல்-ஜூன் காலாண்டிலும் ஸ்மார்ட்போன் விற்பனை இரட்டை இலக்க சரிவைச் சந்திக்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, நுகர்வோர் தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதால், புதிய போன்கள் வாங்குவதை அல்லது பழைய போன்களை மாற்றும் முடிவைத் தள்ளிப் போடுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சரிவுகளுக்கு மத்தியிலும், இந்திய ஸ்மார்ட்போன் சந்தையின் விற்பனை அளவில் ‘விவோ’ நிறுவனம் 21 சதவீதப் பங்குடன் முதலிடத்தில் உள்ளது. சாம்சங் நிறுவனம் 2-ஆம் இடத்தைத் தக்க வைத்துள்ளது. புதிய பிராண்டுகளில் ‘நத்திங்’ நிறுவனம் 47 சதவீத வளர்ச்சியுடன் மிக வேகமாக வளரும் பிராண்டாக உருவெடுத்துள்ளது.

# அந்நியச் செலாவணி கையிருப்பு 70,094.6 கோடி டாலராக அதிகரிப்பு!

**மும்பை, ஏப்.19:**

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு, ஏப்ரல் 10ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பானது 382.5 கோடி டாலர் அதிகரித்து, 70,094.6 கோடி டாலராக இருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 3ஆம் தேதியுடன் முடிவடைந்த முந்தைய வாரத்தில், மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பு 906.3 கோடி டாலர் அதிகரித்து, 69,712.1 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டின் பிப்ரவரி 27ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பு 72,849.4 கோடி டாலர் என்ற உச்சத்தை எட்டியது. ஆனால், மத்திய கிழக்கு ஏற்பட்ட மோதலை தொடர்ந்து, ரூபாயின் மதிப்பு சரிவைச் சந்தித்தது. இதனையடுத்து, ரிசர்வ் வங்கி அந்நியச் செலாவணி சந்தையில் டாலர்களை விற்பனை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டதால், அந்நியச் செலாவணி கையிருப்பு சரிந்தது. ஏப்ரல் 10ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய இருப்பான, அந்நிய கரன்ஸி சொத்து மதிப்பு (எஃப்சிஏ), 312.7 கோடி டாலர் அதிகரித்து 55,598.3 கோடி டாலராக உயர்ந்ததாக ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த வாரத்தில் தங்கக் கையிருப்பின் மதிப்பு 601 மில்லியன் டாலர் அதிகரித்து, 12,134.3 கோடி டாலராக உயர்ந்ததாகவும், ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. அதே வேளையில், சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியாவின் கையிருப்பு 380.68 கோடி ரூபாய் அதிகரித்து, 485.7 கோடி டாலராக இருப்பதாக ரிசர்வ் வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

# அம்பானியை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தில் அதானி!

**புதுடெல்லி, ஏப்.19:**

துறைமுகங்கள் முதல் எரிசக்தி வரையிலான பெருநிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட தொடர் வளர்ச்சியைடுத்து, குஜராத்தைச் சேர்ந்த பெறும் தொழிலதிபரான கௌதம் அதானி, முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி, இந்த பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், கௌதம் அதானியின் நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான ஏற்றம், அவரின் நிகர சொத்து மதிப்பை வெகுவாக உயர்த்தியுள்ளது. கோடீஸ்வரர்கள் தரவரிசையின் அடிப்படையில், கௌதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 92.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது. அதே வேளையில், 90.8 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஆசியாவின் 2-வது இடத்தில் உள்ளார் முகேஷ் அம்பானி. தனது பெயரிலான குழுமத்தின் நிறுவனரான அதானி, நாட்டின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர் மற்றும் தனியார் விமான நிலைய இயக்குநராக உள்ளார். அதே வேளையில் உலகின் மிகப்பெரிய நிலக்கரி வர்த்தகர்களில் ஒருவராகவும் திகழ்கிறார். உலகின் 500 பணக்காரர்களைக் கண்காணித்து, தினசரி புதுப்பிக்கப்படும் பட்டியலில் உள்ள ‘ப்ளூம்பெர்க்’ கோடீஸ்வரர்கள் பட்டியலில் கௌதம் அதானி தற்போது 19வது இடத்தில் உள்ளார்.

அதானியின் சொத்துகள் பெரும்பாலும், குழுமத்தின் பட்டியலிடப்பட்ட முதல் 10 நிறுவனங்களில் அவர் வைத்திருக்கும் பங்கு முதலீடுகளிலிருந்து பெறப்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட எழுச்சியானது, அதானி குழுமப் பங்குகளின் சந்தை மதிப்பில் பல பில்லியன் டாலர்களை இணைத்துள்ளது. இதற்கு நேர்மாறாக, எரிசக்தி, தொலைத்தொடர்பு மற்றும் சில்லறை வர்த்தகம் ஆகிய துறைகளில் பரந்து விரிந்துள்ள தனது முதன்மை குழுமமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸை ஆதாரமாகக் கொண்ட முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு, மிதமான வளர்ச்சியையே கண்டுள்ளதால், ஆசியாவின் கோடீஸ்வரர் தரவரிசை பட்டியலை மாற்றியமைத்துள்ளது.

உலக அளவில் 656 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஸ்பேஸ்-எக்ஸின் தலைமை நிர்வாகியான எலான் மஸ்க், கோடீஸ்வரர் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் மீண்டும் கடும் கட்டுப்பாட்டு: ஈரான் புதிய அறிவிப்பு



**தெஹ்ரான், ஏப்.19:**

ஈரான் துறைமுகங்கள் மீது அமெரிக்கா தொடர்ந்து விதித்து வரும் தடைகள் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தி பழையபடி கடுமையான ராணுவக் கட்டுப்பாட்டிற்கு திரும்பியுள்ளதாக ஈரானின் மத்திய ராணுவத் தலைமை (ஏப்ரல் 18) அறிவித்தது.

ஈரானின் அரசு ஊடகமான 'இஸ்லாமியக் குடியரசு ஒலிபரப்பு நிறுவனம்' (IRIB), புனித நபி (ஸல்) மத்திய தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டதாக பகிர்ந்த அறிக்கையில், "அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்பட்ட முந்தைய ஒப்பந்தங்களைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணை வழியாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் எண்ணெய் டேங்கர்கள் மற்றும் வணிகக் கப்பல்களை முறைப்படுத்தப்பட்ட வகையில் செல்ல அனுமதிக்க ஈரான் நல்லெண்ண அடிப்படையில் ஒப்புக்கொண்டது.

துரதிர்ஷ்டவசமாக, வாக்குறுதிகளை மீறுவதையே வழக்கமாகக் கொண்ட அமெரிக்கர்கள், தடை என்று சொல்லிக்கொண்டு, தொடர்ந்து கடற்கொள்ளை மற்றும் வழிப்பறிச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தியின் மீதான கட்டுப்பாடு அதன் முந்தைய நிலைக்குத் திரும்பியுள்ளது. இந்த ஜலசந்தி தற்போது ஆயுதப் படைகளின் கடுமையான நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. ஈரானியக் கப்பல்களுக்கு முழுமையான போக்குவரத்துச் சுதந்திரத்தை அமெரிக்கா உறுதி செய்யும் வரை, தற்போதைய நிலைமை தொடரும்" என்று அந்த செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஏழு வாரத்திற்குப் பின் வான்வழியை மீண்டும் திறக்கும் ஈரான்!



**தெஹ்ரான், ஏப்.19:**

ஈரானில் போர் பதற்றம் காரணமாக கடந்த ஏழு வாரங்களாக மூடப்பட்டிருந்த வான்வழியை பகுதியளவு மீண்டும் திறப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக அரசுக்குச் சொந்தமான ஈரான் நாளிதழின் தகவலின்படி, கிழக்கு ஈரானின் மீதானா வான்வழிப் பாதைகள் காலை 7 மணிக்கு மீண்டும் திறக்கப்பட்டதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் விமான நிலையங்களில் விமானச் சேவைகள் படிப்படியாக மீண்டும் தொடங்கும். ஆனால், அதற்கான காலக்கெடுவை குறிப்பிடவில்லை. முன்னதாக, பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் - இஸ்ரேலும் கூட்டாக இணைந்து ஈரானின் மீது தாக்குதல்களைத் தொடங்கியதிலிருந்து, ஈரானின் வான்வழி மூடப்பட்டிருந்தது.

ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான போர்நிறுத்தம் அமலுக்கு வந்து ஒரு வாரத்திற்கும் மேலான நிலையில், இந்த பகுதியளவு வான்வழித் திறப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## ஈரான், துருக்கியில் இருந்து நாடு திரும்பும் பாக். பிரதமர், ராணுவத் தளபதி!



ஈரான் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகளுக்குத் தனித்தனியாக அரசு முறைப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தானின் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் மற்றும் ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் தங்களது தாயகத்துக்குத் திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் இஸ்லாமாபாதில் நடைபெற்ற அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான முதற்கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில், ஈரான் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழுவும், அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே அமலில் உள்ள 2 வார போர்நிறுத்த காலம் முடிவடைய இருப்பதால், 2 ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும் முனைப்பில் பாகிஸ்தான் அரசு ஈடுபட்டுள்ளது.

இதனால், பாகிஸ்தான் பிரதமர் ஷரீப் சௌதி அரேபியா, கத்தார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கும், ராணுவத் தலைமைத் தளபதி முனீர் ஈரானுக்கும் அரசு முறைப் பயணம் மேற்கொண்டனர். இந்த நிலையில், ஈரானின் வெளியுறவு அமைச்சர் அராக்சி, நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமது பாகர் கால்பாஃப் மற்றும் அந்நாட்டின் ராணுவத் தலைவர்களை நேரில் சந்தித்து ஆசிம் முனீர் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

இத்துடன், இறுதி நாடாக துருக்கிக்குச் சென்ற பிரதமர் ஷரீஃப் இன்று தனது பயணத்தை நிறைவு செய்கிறார். மேலும், தளபதி முனீர் மற்றும் பிரதமர் ஷரீஃப் ஆகியோர் சனிக்கிழமை (ஏப். 18) பாகிஸ்தான் திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையில் 2 ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையில் போர்நிறுத்தம் அமலுக்கு வந்ததையடுத்து ஹோர்முஸ் நீரிணையை ஈரானிய அரசு முழுவதுமாகத் திறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஏப்.22-க்குள் உடன்பாடு எட்டப்படாவிட்டால் ஈரான் போர் நிறுத்தம் முடிவுக்கு வரும்: ட்ரம்ப் கெடு

**மேரிலாந்து, ஏப்.19:**

எதிர்வரும் 22-ம் தேதிக்குள் உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் உடனான போர் நிறுத்தம் முடிவுக்கு வரக்கூடும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் மேற்கொண்டன. இதற்கு பதிலடி தரும் வகையில் இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. இந்தச் சூழலில் கடந்த 8-ம் தேதி அமெரிக்காவும், ஈரானும் இரண்டு வார கால இடைக்கால போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தன.

இரண்டு தரப்புக்கும் இடையில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து ஏப்.11 அன்று அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் அமெரிக்கா தரப்பில் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் கால்பாஃப் ஆகியோர் பங்கேற்றனர். இந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. தொடர்ந்து அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கும் நோக்கில் செயல்பட்டன. இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டது.

இஸ்ரேல் - லெபனான் போர் நிறுத்தம் அமலான காரணத்தால் ஹார்முஸ் ஜலசந்தியை கப்பல் போக்குவரத்துக்கு திறப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது. இருப்பினும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா முடக்க கூடாது என ஈரான் கூறியுள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையே விரைவில் இரண்டாவது கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் 22-ம் தேதியுடன் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. இந்நிலையில், 'போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா?' என செய்தியாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

வரும் புதன்கிழமைக்குள் (ஏப்.22) ஈரான் உடனான பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் இந்த இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வரும். மீண்டும் குண்டுகளை வீச வேண்டி இருக்கும். போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட வாய்ப்பில்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.

அதே நேரத்தில் ஈரான் உடனான திரை மறைவு பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும், விரைவில் நல்ல செய்தி வரும் என்றும் அமெரிக்க அரசு தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## ஈரான் போர்: 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தைக்குத் தயாராகி வரும் பாகிஸ்தான்!

**தெஹ்ரான், ஏப்.19:**

"நேட்டோ அமைப்பு எங்களுக்குத் தேவையில்லை அவர்களுக்குத்தான் நாங்கள் தேவை" என டொனால்ட் டிரம்ப் விமர்சித்துள்ளார்.

முன்னதாக, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையில் 10 நாள்களுக்குப் போர்நிறுத்தம் அமலுக்கு வந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணை வழியாக அனைத்து நாடுகளின் வர்த்தக கப்பல்களும் செல்லலாம் என ஈரான் அரசு அறிவித்தது.


இதுகுறித்து அமெரிக்காவில் நடந்த நிகழ்வொன்றில் பேசிய டிரம்ப், "ஹோர்முஸ் நீரிணை விவகாரம் ஏறக்குறைய முடிந்துவிட்ட நிலையில், எங்களுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா என்று கேட்டு, நேட்டோவிலிருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு உங்கள் உதவி தேவைப்பட்டிருக்கும். ஆனால் இப்போது எனக்கு உங்கள் உதவி உண்மையிலேயே தேவையில்லை என்று அவர்களிடம் கூறினேன். ஏனென்றால் எங்களுக்குத் தேவைப்பட்டபோது, அவர்கள் முற்றிலும் பயனற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் உண்மையில், எங்களுக்கு அவர்கள் தேவைப்படவே இல்லை. அவர்களுக்குத்தான் நாங்கள் தேவைப்பட்டோம்" என்றார். இதனிடையே, டிரம்ப் வெளியிட்ட பதிவு ஒன்றில், "தற்போது ஹோர்முஸ் நீரிணையின் நிலைமை சரியாகிவிட்டது. எங்களுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா என்று நேட்டோவிலிருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அவர்களுடைய கப்பல்களில் எண்ணெய்யை ஏற்றுவதற்காக வரவில்லை என்றால், விலகி இருக்குமாறு கூறினேன். ஏனென்றால், எங்களுக்குத் தேவைப்பட்டபோது அவர்கள் பயனற்றவர்களாகவும் ஒரு காகிதப் புலியாகவும் இருந்தார்கள்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

மற்றொரு பதிவில், " சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளின் பெரும் வீரத்திற்கும் உதவிக்கும் நன்றி" எனப் பதிவிட்டிருந்தார்.

மேலும் தற்காலிக போர் நிறுத்தம் முடியும் வரையில் மட்டுமே "ஹோர்முஸ் நீரிணை வழியாக அனைத்து நாடுகளின் வர்த்தக கப்பல்களும் செல்லலாம்" என்ற இந்த விலக்கு அமலில் இருக்கும் என ஈரான் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது..

## ஹோர்முஸ் நீரிணை மீண்டும் முடக்கம்! கப்பல் மீது ஈரானிய படைகள் தாக்குதல்!

**வாஷிங்டன், ஏப்.19:**



ஹோர்முஸ் நீரிணை மீண்டும் முடக்கப்பட்டதால், அவ்வழியாகச் செல்ல முயன்ற சரக்கு கப்பலின் மீது ஈரானிய படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையில் போர்நிறுத்தம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டதால், ஹோர்முஸ் நீரிணை முழுவதுமாகத் திறக்கப்படுவதாக, கடந்த ஏப். 17 அன்று ஈரான் அரசு அறிவித்தது. இதனை வரவேற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானிய துறைமுகங்களில் இருந்து வரும் அந்நாட்டு கப்பல்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடர்ந்து நடைபெறும் எனக் கூறியுள்ளார்.

இதையடுத்து, அமெரிக்கா ஒப்பந்தத்தை மீறுவதால் ஹோர்முஸ் நீரிணை மீண்டும் ராணுவப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாகவும், அமெரிக்காவின் முற்றுகை தொடரும் வரை ஹோர்முஸ் நீரிணை மூடப்படும் எனவும் சனிக்கிழமை அன்று ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல முயன்ற சரக்கு கப்பலின் மீது ஈரானின் ராணுவப் படகுகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக, பிரிட்டனைச் சேர்ந்த கடல்சார் வணிகச் செயல்பாட்டு மையம் இன்று தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில், அந்தக் கப்பலின் மாலுமிகள் மற்றும் பணியாளர்களின் உயிருக்கு எந்தவொரு ஆபத்தும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அது எந்த நாட்டின் கப்பல் எனும் தகவல் வெளியிடப்படவில்லை.

முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான போரில் சர்வதேச எரிபொருள் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரானிய படைகள் முடக்கியதால், ஏராளமான நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## துபாயில் 'ஏர் டாக்சி' நிலையம்: 45 நிமிட பயணம் இனி 10 நிமிடத்தில்!



**துபாய், ஏப்.19:**

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நவீன போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, துபாய்யில் புதிய 'ஏர் டாக்சி' நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. துபாய் சர்வதேச விமான நிலையம் அருகே சுமார் 3,100 சதுர மீட்டர் பரப்பளவில், நான்கு அடுக்குகளுடன் இந்த நிலையம் கட்டப்பட்டுள்ளது.

'வெர்டிப்போர்ட்' என அழைக்கப்படும் இந்த அமைப்பில், செங்குத்து தரையிறக்கம் மற்றும் புறப்படும் வசதி, விரைவு சார்ஜிங் உட்கட்டமைப்பு, இரண்டு அடுக்கு கார் பார்க்கிங், குளிரூட்டப்பட்ட பயணியர் ஓய்வறை உள்ளிட்ட வசதிகள் உள்ளன. பாம் ஜுமேரா வரை உள்ள 36 கிலோமீட்டர் தூரத்தை சாலை வழியாக கடக்க 45 நிமிடங்கள் ஆகும் நிலையில் 'ஏர் டாக்சி' மூலம் வெறும் 10 நிமிடங்களில் சென்றடைய முடியும். இந்த சேவையை மொபைல் செயலி மூலம் முன்பதிவு செய்ய முடியும். ஆரம்ப கட்டமாக விமான நிலையங்கள், ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள் மற்றும் வணிக மையங்களுக்கு இடையே சேவை இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனை திட்டத்தை, துபாய் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த 'ஏர் டாக்சி' இந்த ஆண்டின் இறுதிக்குள் வணிக ரீதியான சேவையை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக நாடுகள் ரஷ்ய எண்ணெய் வாங்குவதற்கான அனுமதியை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்தது அமெரிக்கா

**வாஷிங்டன், ஏப்.19:**



சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் உலக நாடுகள் ரஷ்ய நாட்டின் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்களை வாங்குவதற்கு அனுமதி அறிவித்திருந்தது அமெரிக்கா. தற்போது அதை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீட்டித்துள்ளது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகம்.

கடந்த பிப்.28-ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி தந்தது. தற்போது அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. போர் சூழலால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இந்த தட்டுப்பாட்டை குறைக்கும் வகையில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கடலில் உள்ள ரஷ்ய கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருளை வாங்கிக் கொள்ளலாம் என அமெரிக்கா தெரிவித்தது.

முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதித்தது அமெரிக்கா. இந்த வரி விதிப்பு இந்தியா மீதும் சுமத்தப்பட்டது. அதன் பின்னர் ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திக் கொண்டது. இத்தகைய சூழலில் மேற்காசிய போர் காரணமாக ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்க முப்பது நாட்கள் விலக்கு அறிவித்தது அமெரிக்கா. அந்த விலக்கு ஏப்.11-ம் தேதியுடன் நிறைவடைந்தது. தற்போது அதை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்துள்ளது அமெரிக்கா.

இது தொடர்பாக வெள்ளிக்கிழமை அன்று அமெரிக்க கருவூல அமைச்சகம் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் ரஷ்யா கச்சா எண்ணெய் உடன் கடல் பயணத்தில் உள்ள சரக்கு கப்பல்களில் இருந்து உலக நாடுகள் கொள்முதல் செய்ய கடந்த மாதம் அனுமதி அளிக்கப்பட்டது.

தற்போது அந்த அனுமதி மே 16 வரை நீட்டிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதில் சிக்கல் இருக்காது.

# எதிர்க்கட்சிகளை பெண்கள் மன்னிக்க மாட்டார்கள்





# இரண்டு நாள் பயணமாக இலங்கை செல்கிறார் சி.பி.ராதாகிருஷ்ணன்

# மத்திய அரசு ஊழியர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு

# சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம்: தமிழகம் வந்தார் ராகுல் காந்தி!

# வார ராசி பலன்கள்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ–பேப்பர்